
# அருளுரை

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



ஸ்ரீசத்குரு திருவடி துணை!

# அருளுரை

அருளியவர்
**தூளி பாபா**

**அன்பின் குடில்**
கோம்பூர்.

**வெளியீடு :**
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
போன் : (04256) 229655

இரண்டாம் பதிப்பு : 2009
500 பிரதிகள்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003
தொலைபேசி : (080) 3346025

# பொருளடக்கம்


1. கருணை ........................................ 1
2. அடக்கம் ........................................ 5
3. வைராக்யம் ........................................ 8
4. குருபக்தி ........................................ 16
5. ஸ்ரீபகவத் சொரூபம் ........................................ 25
6. இறை பக்தி ........................................ 32
7. விதியை மதியால் வெல்லலாம் ........................................ 36
8. மஹாதபஸ் ........................................ 43
9. ஸ்ரீபகவத்கிருபையும், குருகிருபையும் ........................................ 50
10. திருப்பாத சேவை ........................................ 62
11. அத்வைதத்தின் சிறப்பு ........................................ 66
12. தெய்வத்தின் கருணை ........................................ 90







# "முகவுரை"

சுபானு ஸ்ரீ தை 1 — 2004 ம் ஆண்டு ஜனவரி 15.

குருவாரம். வியாழன் — நிறைவு பெறும் ஓம் புத்தாண்டு!

சத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்.

எம் ஞானக் குழந்தைகளே!

எழுத்துக்கும், வார்த்தைக்கும் ஓர் முடிவே இல்லை யென்றும், அவை ஓர் அடர்ந்த காடு என்றும்; உள்ளே புகுந்தவர்கள் வெளியே வருவது மஹா கடினம் என்றும்; ஸ்ரீ மஹான்கள் அனுபவமாகும். இந்த வைத்தியமும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டு காலமாக பேனா தொட்டு எழுத ஆரம்பித்தது. ஆனால் இன்னமும் எழுதி முடியவில்லை யென்றால்?

**"இது எம் சூஸ்திர தாரியின் வேலையே"!**

இதற்கு உறுதுணையாக இருப்பது உங்கள் ஏக்கமும் அதன் சிரத்தையு மென்பது தெளிவாகிறது. உங்கள் உள் இருந்து இதை போதும் என்னும் பூரண நிறைவு "நீங்கள் பெற்று விட்டதாக" யாம் உணர்கிறோம். இந்த இதழ் அருளுரை என முடித்துக் கொண்டோம். குறிப்பாக இந்த அருளுரை அனேக அம்சங்கள் கொண்டதாகும். இதில் ஓர் முக்கிய சம்பவம் ஞானபூமியாம் திருஅண்ணாமலையில் மேல கோபுர (பேய்க்கோபுர) வாசல் ஸ்ரீ விக்ன விநாயகர் இடம் பெறுகிறார் போலும்? அதில் அவர் கேட்டு எழுதிய "ஸ்ரீமத் ரிபு கீதை" சில இடம் பெறுகின்றன; அவை சிறப்பு அம்சமாகும்.

இத்துடன் "**படங்கள்**" மட்டும் போதுமென நிறைவு செய்து கொள்கிறோம் "**உங்கள்**" அனுமதியுடன்.

பாபா.



ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய். (ஸத்ய வாக்கை) 

நாவை அடக்கு. கருணையோடு இரு.

# அருளுரை

## 1. கருணை

பம்பா நதிக்கரை. ராமனும் லக்ஷ்மணனும் சீதையைத் தேடி வந்து கொண்டிருக்கிறார்கள். அது மாலை நேரம். அது சந்தியா வந்தனம் செய்யும் நேரம். நதிக்கரை பரந்த புல் வெளியில் ஓர் இடத்தில் தம் காண்டீபத்தை (வில்லை) அழுத்தமாக ஊன்றி நிறுத்தி வைத்து, அம்புக்கூட்டையும் அதில் தொங்க விட்டான் ராமன். சம்பிரதாய முறை என்னவென்றால் "சுத்த வீரன்" தன் காண்டீபத்தை பூமியில் படுத்த நிலையில் வைக்கக் கூடாது. ஒன்று சாய்ந்த நிலையில் வைக்கலாம், ஒன்று எதிலாவது தொங்கும் நிலையிலும் வைக்கலாம், அல்லது பூமியில் ஊன்றி நிற்கும் நிலையிலும் வைக்கலாம். இது காண்டீபத்திற்கு கொடுக்கும் மரியாதையாகும்.

இப்போது நம் ராமன் வில் ஊன்றிய புல் வெளியில் ஓர் தவளை பதுங்கி இருந்தது. அதன் மேலேயே நம் ராமன் பார்க்காமலேயே காண்டீபத்தை ஊன்றி விட்டான். அந்த தவளையின் உடலில் ஆழமாக பாய்ந்து மறுபுறம் வந்து விட்டது அக்காண்டீபம். இதை ராமன் அறியான், அந்த தவளையும் எந்த சப்தமும் செய்யாமல் அதை அமைதியாக சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொண்டது. இதன் அதிசயமும், ரகஸ்யமும் என்னவென்றால் அந்த தவளை எந்த விநாடியும் "**ஸ்ரீராமநாம**" தியானம் செய்து கொண்டிருக்கும் ஓர் ஸ்ரீ ராமபக்த ஜீவனாகும்.

இப்போது நம் ராமன் சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு கரையேறினான். காண்டீபத்தை ஊன்றிய நிலையில் அப்படியே தூக்கினான். அந்த தவளையும் பிராணன் போகும் தருவாயில் அக்காண்டீபத்துடன் சேர்ந்தே வந்தது. இப்போதுதான் அந்த தவளையின்



உ



நாம நாம ஸ்மரணையை ராமனால் உரை முடிந்ததும் ராமன் தம்
காண்டீபத்தையும் பார்த்தான். அதனால் குத்துப்பட்ட நிலையில்
சேர்ந்தேவரும் தவளையையும் கண்டான். ரத்தம் சொட்டசொட்ட
தவளை காண்டீபத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஈனஸ்வரத்
தில் ராமநாம ஜபத்தையும் அந்த பக்திபூர்வமான தவளையும்
விடாமல் ஸ்மரிக்கிறது. தம் பிராணன் போகும் அந்நிலையி
லும், மரண வேதனைப்படும் அந்நிலையிலும், தம்மைக்குத்தியது
யார் என தெரிந்த அந்த நிலையிலும்!

**"அது அந்த ராம நாமத்தை ஜபிக்கிறதென்றால்**

**"உங்கள் பக்தியின் நிலை என்ன"???**

சற்று சிந்திக்கவும். !

கணவன் மனைவி குழந்தை, அம்மா அப்பா உறவிலோ, அதன் **"வினை"**
யின் காரணமாக உபாதைகளோ, இழப்போ ஏற்பட்டால்,

**"உங்கள் இறை நாம ஸ்மரணையோ"?** அல்லது

**"உங்கள் குரு நாம ஸ்மரணையோ"??**

**"ஸ்மரிக்க திறம் இருக்கிறதா"???**

நன்றாக கருத்தூன்றி உங்களுக்குள்ளேயே உணருங்கள்.
இதற்கு பூர்வபுண்ணியமும் வேண்டும். இறை கருணையும் வேண்டும்!
இவ்விரண்டும் உங்களுக்கு இருக்கிறதென யாம் உறுதி கூறுகிறோம்!!

**"காரணம் நீங்கள் எம் குழந்தைகள்"!!**

அந்த தவளையின் நிலை கண்டு **"கருணையின்"** நிலையில்
அக்காண்டீபத்திலிருந்து தவளையை மெதுவாக பிரித்தெடுத்தான்.
காண்டீபத்தைத் தம் தோளில் மாட்டினான். தம் இடக்கரத்தில் தவளை
யை வைத்து, தம் அபய கரத்தால் அதை சற்று மிருதுவாக வருடினான்.
தம் பவளவாய் கொண்டு ஊதினான். எம்பெருமானின் கருணையின்
கண்களில் கண்ணீர் பனித்து நின்றது. இறைவனின் கரஸ்பரிசத்
தாலும், அவன் ஊதிக் கொடுக்கும் சக்திவாய்ந்த "வாய் தென்றலினாலும்"
அதன் வேதனை பரிபூரணமாக குணமாகிவிட்டது. அந்தவளை ஈனஸ்வரமான
பார்வையினால் எம் ராமபிரானை தரிசித்தது. உடனே தவளை கூறியது.



உ

(3)

தவளை :- ஹே ப்ரபோ! தீனதயாளா! கருணாமூர்த்தி! ஹே கோதண்டராமா!
முதலில் உன் கண்ணீரைத் துடை. அது பூமியில் படலாகாது.
என் கதை முடிந்த கதை தானே? இதற்கு வருந்த வேண்டாம்.

ராமன் :- ஏ மாண்டூகமே! (தவளையே) (இதை மண்டூகம் எனவும் அழைக்கலாம்)
எம்முடைய கவனக் குறைவினால் இந்நிலை அடைந்து விட்டாயே?
சற்று சப்தம் செய்திருக்கக் கூடாதா? நீ இருக்கும் சப்தத்தை கேட்டாவாவது சற்று ஒதுங்கிப் போயிருப்போம்.
எம் கோதண்டத்தையும் சற்று விலகி நிறுத்தியிருப்போம்.

ஶ்லோகத்தை கவனிக்கவும்!

குழந்தைகளே!

தவளை (மண்டூகம்) யும் ஆமையும் ஞானசாதனைக்கு ஓர் கருவியாக கொள்வர் ஞானியர். ஆத்ம தத்வ விளக்கத்திற்கு 24 தத்துவங்களை கூறுவர் (பஞ்சபூதம் 5, ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5, பஞ்சகோசங்கள் 5, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய கரணங்கள் 4. ஆக 24 ஆகும்) அதுபோல ஶ்ரீ தவளைக்கு உடலுடன் இணைந்த நாக்கின் நீளம் 24 முழமாகும். இது பருவகாலங்களில் ஜலத்தை குடித்து கோடை வறட்சியான 6 மாத காலங்களுக்கு சேமித்து வைத்துக் கொள்ளும் திறமையுடையது.
இது நமக்கு அறிவுறுத்துவது யாதெனில் :- உங்கள் வாக்கே ஜகத்ஜீவ ஈஸ்வராதிகாரமாக இருப்பதாலும்; உங்கள் வாக்கே உங்களை சுட்டெரிக்கும் அக்னியாக இருப்பதாலும், வார்த்தை அடக்கு என்கிறது ஶ்ருதி!
அதைப்போல இந்த தவளையும் தன் காலதேவனை சர்ப்பத்தை தானே தன் குரல் கொடுத்து அழைத்து தம் மரணத்தை தேடிக் கொள்கிறது. இதனை நமக்கு அது உணர்த்துவது யாதெனில் "வார்த்தை அடக்கு" என்கிறது தவளையாகிய மண்டூகம்.

இதை வேறொரு முறையிலும் பிரித்துப் பார்க்கலாம். அதாவது?
மண்டூகம் :- மண் + உண்டு + ஊகம் = மண்டூகம்.
அதாவது அனைத்திலும் மண் உண்டு அதை நீ ஊகம் பண்ணிப்பார்.
வெளி நாமரூபத்தை கண்டு மயங்காதே; அனைத்தும் மண்ணே என உணர்.
இப்படி ஓர் பேருண்மையை உணர்த்துவது மண்டூகம். ஆனால் ஆமை ஆள் அரவம் கேட்டவுடனேயே தன் நான்கு கால் ஒரு தலை இவ்வைந்தையும் தன்னுள் இழுத்துக் கொண்டு ஓர் ஓடு மாத்திரமாக தெரிவது போல் ஞானி தன் ஞானேந்திரியங்கள் ஐந்தையும் தனக்குள்ளாக இழுத்துக்கொண்டு ஓர் பிரேதம் போல் சஞ்சரிக்கக் கடவன் என்கிறது ஆமை.





தவில் :- ஹே சீதா ராமா! அது நான் செய்த பாக்யம்.

ராமன் :- குழந்தாய்! மரணத்தையும், அதன் வேதனையையும் ஓர் பாக்கியமாக கருதுகிறாயா?

தவில் :- ஏ கௌசல்யா ராமா! உன் அம்புகளால் அடிபடுவதற்கே புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும்! அதுவும் உன் வில்லால் நீயாக விரும்பி கொடுத்த இந்த "இன்பக்கனலை" வேறு எவர் பெறமுடியும்?

கனல் = தகிப்பு அதாவது எரிப்பு, அது துன்பம்.
இன்பம் = ஓர் மனோ சுகம் இது தற்காலிகம்.
} துன்பமே இன்பமாக மாறுகிறது.

ராமன் :- ஏ தவிலே! உன் இயல்பான குணம் சப்தம் செய்வது. ஆனால் இன்று சப்தம் செய்யாதிருந்த காரணம்?

தவில் :- எமதய்யனே! என் இனத்தவர் போன்று நான் கத்திக் கொண்டிருப்பவனன்று! என் பூர்வபுண்ணியத்தால் நான் உன் நாமாவை அதாவது ராம நாமாவை ஜபிப்பவன். எதிரியின் பயமோ, சரீர பயமோ விபத்துகளோ அடியேனுக்கு வந்தால் உன் ராமநாமா தான் அப்போதைக்கப்போது என்னை ரட்சிக்கும்.

ராமன் :- குழந்தாய்! உன் நிலை பரிதாபகரமானதே! உன்னை இந்நிலைக்கு ஆளாக்கி விட்டோமே? எம்மை மன்னிப்பாயா? யாம் உன்னை பூரண குணமாக்கி பழைய நிலை பெறச் செய்துவிடுகிறோம் நீ அனுமதி தந்தால்?

தவில் :- பிரபோ! அப்படி எதுவும் செய்ய வேண்டாம். நான் இதை மன ஒருமையுடன் ஏற்றுக் கொள்கிறேன்.

ராமன் :- உன்னை இதுவரை காத்து வந்த ராமநாமா இன்று ஏன் உன்னை கைவிட்டுவிட்டது? இப்போது இந்த குறையை எவரிடம் சொல்லி முறையிடுவாய்?

தவில் :- அந்த ஐஸ்வர்யமான மரணநிலையிலும் சிரித்தது தவில்! ஹேபிரபோ! ஆபத்து, விபத்து, துன்பம், துயரம் இவைகளில் ராம நாமா வே காப்பாற்றியது உண்மைதான். இன்று அந்நாமாவுக்குரிய பரம்பொருளே ஓர் காரியம் செய்யும்போது எவரிடம் சொல்ல முடியும்? ஆனால் இது விபத்தோ, ஆபத்தோ, கஷ்டமோ, துன்பமோ, மரண வேதனையோ இல்லவே இல்லை.

இது "**ராம நாம அனுக்ரஹம்**"!! அதாவது இதுகாலபரியந்தம் நான் ஜபித்து வந்த ஸ்ரீ ராம நாமம் முழுமையாக பலன் தந்து விட்டது.





தவளை:— வேறு எந்த வகையிலும் எனக்கு மரணம் சம்பவிக்கவில்லையே. வேறு வகையில் மரணம் சம்பவித்திருந்தால் ராமநாமா பயனற்றதாகிவிடும். இப்போதும் என்ன கெட்டுப் போகவில்லை. உன் "ஸ்ரீ ராமநாம பலத்தினால்" உயரிய பதமோ, உயர் பிறவியோ அவஸ்யம் உண்டு. இது முடிந்த கதை!

இப்போது நீ எனக்கு ஓர் வரம் தரவேண்டும். அதாவது அடுத்து வரும் பதமுக்தியிலோ அல்லது அடுத்த உயர் பிறவியிலோ மேலும் மேலும் "எந்த பிறவியிலும்"

**"உன் நாமாவை மறவா நிலை வேண்டும்"**

தவளை தன் கோரிக்கையை பணிந்து முடித்துக் கொண்டது. ஸ்ரீராமனும் அதன் கோரிக்கையின்படி அந்த வரத்தை முடித்தான். அதற்கு உயர் பதத்தைக் கொடுக்கவில்லை. உயர் பிறவியை (ஓர் மனிதனாக) கொடுத்தான். அதன் மூலம் சாதனை செய்து மோட்சம் அடைந்தது.

---

## ௨. அடக்கம்

தண்டகா ஆரண்யம் ராமன் லக்ஷ்மணன் சீதை ஆகிய மூவரும் பிரவேசிக்கிறார்கள். அங்கு தங்கும் நிமித்தம் ஓர் பர்ணசாலை (குடிசை) போடும் நிமித்தம் இடம் தேடுகிறார்கள். இடம் அமைந்தது. அனுமதி தர ஆளையிடம் நபரை தேடுகிறார்கள், அந்த நபர் கிடைக்கவில்லை. சுற்று முற்றும் தேடி வரும் சமயம் ராமன் காலில் ஓர் விஷ முள் தைத்து விட்டது. ரத்தம் கொட்ட ஆரம்பித்தது. ராமன் சிரித்தான். லக்ஷ்மணனும் சீதையும் திகைத்தனர். அண்ணா அடியேன் என்ன செய்ய வேண்டும் என அண்ணன் ஆணைக்கு காத்திருந்தான் இளையவன். தம்பி அதோ அச் செடியின் சில இலைகளை பறித்து அதை கசக்கிப் பிழிந்து அதன் சாறை இதில் ஓர் மூன்று சொட்டு விட்டால் ரத்தமும் நிற்கும், ரணமும் உடனே ஆறிவிடும் என்றான் ராமன். இளையோன் உடனே அதிதுரிதமாக இவ்விலையைப் பறிக்கக் குனிந்தான். ராமன் தடுத்தான் தம்பி தாவர வர்க்கங்கள் அனைத்தும் (மரம், செடி, கொடி, புல், பூண்டு) ஓரறிவும், உயிரும் உள்ளது. அவை சஞ்சாரம் செய்யாதே தவிர உயிரும் உண்டு, உணர்வும் உண்டு. ஆகவே அவைகளின் **"அனுமதி இன்றி"** இலையையோ பூக்களையோ, பிஞ்சு, காய், கனி இவைகளை நாம் பறிக்கலாகாது. அவைகளிடம் பணிந்து நாம் அனுமதி கேட்டால் அவை அனுமதி தரும். அதன் அனுமதியாக அதை தலையை அசைக்கும். நீ நன்கு கூர்ந்து கவனித்தால்



உ (6)

அந்த ஆசையானது சற்று இலேசாக குறைந்தால் நாம் உணவையும் வீடுகளிலும் நம் சொந்த இடங்களிலும் நம் இடம் உள்ள செடி கொடி தானே என்றோ, நாம் நட்டு வைத்து வளர்த்த செடி தானே என்றோ எண்ணி விடக்கூடாது.

## "அனைத்தும் அவனுடையதே"!

அவன் அனுமதியின்றி எதையும் நமக்கு தொட உரிமை இல்லை. அதை மீறியும் தொட்டால் "அதன் குணமும், அதன் வினையும்" நம்மைப் பிடிக்கும் என அறிவுரை கூறினான் அருள்மிகு ராமன். உடனே இளையோன் அண்ணன் ஆணையை சிரமேற் கொண்டு அச்செடி அருகே மண்டியிட்டு அமைதியாக விண்ணப்பித்தான். அதாவது ஏழிலைகைச் செடியே! உன் இலைகள் எம் அண்ணனின் கால்களுக்கு மருந்து நிலையில் தேவைப்படுகிறது. சில இலைகளைப் பறித்துக் கொள்கிறோம் என்றான். அச்செடியும் இலேசாக குலுங்கி அனுமதி கொடுத்தது. அக்காரியம் முடிவுற்றது.

ஸ்ரீராமன் சொன்னான், தம்பி! இந்த வனத்திற்கு ஓர் அதிபதி உண்டு. அவரை சற்று தேடிக் கண்டு பிடித்து அவரிடம் ஓர் குடிசை போட அனுமதி வாங்கி வா என்றான். இளையோன் சொன்னான் அண்ணா! கடும் வனத்திலும் அனுமதியா? என்றான். அண்ணன் சொன்னான் இப்பூமியில் எங்கும் ஓர் இடம் என தீர்மானித்து அமர வேண்டும் என்றால் அவன் அனுமதி அவசியம் வேண்டும். நாம் சஞ்சாரம் செய்யும் போது அனுமதி தேவையில்லை.

சஞ்சார நிலையில்:- பிராப்தாதீனமாக சஞ்சாரம் நடைபெறுகிறது. அங்கு கருவி கரணங்கள் வேலை செய்கின்றன. பிரவிருத்திதாமமாக நடைபெறுவதால் அங்கு அனுமதி தேவை இல்லை.

அமர்ந்த நிலையில்:- இது ஓய்வு நேரம். இங்கு அமைதி தேவை. இந்த அமைதியை குலைக்கும் வேறு எந்த நிகழ்ச்சிகளும் அங்கு நேர்ந்து விடக் கூடாது. ஆகவே அங்கு அவன் அனுமதி தேவை.

இளையோன் கேட்டான். அண்ணா! இவ்வனம் நம் ராஜ்யத்திற்குட்பட்டது தானே? நம் இடத்தில் நாம் தங்க அனுமதி வேண்டுமா? அண்ணன் சொன்னான் தம்பி! நாம் இப்போது அரசனா? ஆண்டியா? என்ன வேஷம் தரித்திருக்கிறோம் என்பது கூட உனக்கு விளங்கவில்லையா? மேலும் அரசன் அதிகாரம் அந்த அரண்மனை மட்டே. வெளியேறி ஊருக்குள் வந்து விட்டாலோ



உ



ஊரார் அனுமதி வேண்டும்; வனத்திற்கு வந்துவிட்டாலோ வன அதிபதி அனுமதி வேண்டும்.

எங்கும் ஏதேச்சாதிகாரமும், சர்வாதிகாரமும் கொண்டால் அது அழிவுப்பாதையில் தான் செல்லும்.

அங்கு இளையோன், அண்ணாவின் ஆணைக்கு அடிபணிந்தான். வன அதிபதியை தேடி தேடி அலைந்தான் எவரையும் காண முடியவில்லை மாலை ஆகிவிட்டது. இளையோனும் சோர்ந்து போனான். சரி இனி அண்ணாவிடம் நடந்ததை சொல்வோம் என வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஓர் மருதமரத்தினடியில் "ஓர் சிவலிங்கம்" இருக்கக் கண்டான். இவரே இவ்வன அதிபதி எனத் தெளிந்தான். அச்சிவலிங்கத்தை நமஸ்கரித்தான் இளையோன். திடீர் என அம் மருதமரத்தின் பின்இருந்து ஓர் வேடன் தோன்றினான். உடனே இளையோன் வேடன் யார் எனத் தெரிந்து கொண்டான். அதாவது?

## "இவரே அவர் அவரே இவர்"

எனத் தெளிந்துணர்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். பின் எழுந்து பவ்யமாக ஐயனே! இவ்வனத்திற்கு அடியேனும், எம் அண்ணன் ராமச்சந்திரமூர்த்தியும், அவர் தர்மபத்தினியான ஜானகிதேவியாரும் வந்திருக்கிறோம். இங்கு ஓர் குடிசை போட அனுமதி வேண்டும் எனப் பணிந்து கேட்டான் இளையோன்.

வந்தவரும் புன்முறுவலாக சிரித்துக்கொண்டே ஒன்றும் பேசாமல் மௌனமாக சைகை மட்டும் காட்டி விட்டு மறைந்துவிட்டார். அவர் சைகையாவது

"தேழ்குறியின் மர்மஸ்தானத்தை தம் இடக்கரத்தால் பொத்தினார்",
"தம் வாயை வலக்கரத்தினால் பொத்தினார், தம் தலையை அசைத்தார்.

அதுதான் அவர் செய்த சைகை!

இது இளையோனாகிய லக்ஷ்மணனுக்கு விளங்கவில்லை. சரி நம் அண்ணாவிடம் சொல்வோம் என வந்தான். அண்ணனை வணங்கி விட்டு நடந்த சம்பவத்தை விளக்கமாகச் சொன்னான். அண்ணனாகிய ராமனும் அதிக மகிழ்வுடன் தம்பி! நாம் குடிசை போட அனுமதி கிடைத்துவிட்டது என்றான்.





தம்பிக்கு அந்த சைகை புரியாத் தன்மையினாலும், அண்ணன் அனுமதி கிடைத்து விட்டது என ஆனந்தமாக சொன்னதாலும் சற்று தடுமாறினான். அண்ணா! அடியேனுக்கு இவை ஒன்றும் புரியவில்லையே யாம் புரியும் அளவுக்கு சற்று விளக்கம் கொடுத்தால் நல்லது என்றான் தம்பி. அண்ணன் ராமனும் விளக்கம் தந்தான், அதாவது,

தம்பி! நாவடக்கமும், குறியின் புலனடக்கமும் இருந்தால் நீ குடிசை போடலாம் என அனுமதி கொடுத்தார். இவை இரண்டும் நம் இருவரிடமும் இருக்கிறது ஆகவே நாம் இங்கு குடிசை போடலாம் என்றான் ஸ்ரீ ராமன்.

எம் ஆனந்த குழந்தைகளே! "இவ்வுலகில் நமக்கு எதிரிகள்" வெளியே இல்லவே இல்லை. நமக்குள் இருக்கும் "**ஓட்டைகளே**" நமக்கு பயங்கரமான எதிரிகளாகும். அதாவது கண், காது, நாசி, வாய், குறி, ஆகிய ஐந்தாகும். இவை ஐந்திலும் பிரதானமான வாசல் வாயாகும். அந்த வாய்க்கு இரண்டு வேலைகள் இருப்பதால் சரீவசதாவும் அனர்த்தத்தைத் தேடி கர்மாவை பெருக்கிக் கொள்கிறது. மேலும் அடுத்ததாக அந்த ஐந்து ஓட்டைகளிலும் கர்மா பீஜமாயும், பிறவியின் பீஜமாயும், அமைந்த கருக்குழியின் தலைமை யிடம் "**குறியாகும்**"

---

# 3. வைராக்யம்.

ஆதிசங்கரரின் பிரதான சீடர் பத்மபாதராகும். அவர் ஓர் நரசிம்ம உபாசகர். இந்த பத்மபாதர் ஓர் சமயம் பூஜை, பஜனை, நாம சங்கீர்த்தனம் இவைகளின் உருக்கத்தால் ஸ்ரீ பகவான் நரசிம்மமூர்த்தியை தேடினார். பலகாலம் முயற்சி செய்தும் பலன் அளிக்காததால் அதிகமாக பக்தியில் சோர்ந்து போய் வனங்களில் சஞ்சாரம் செய்து கொண்டு அந்த நரசிம்ம மூர்த்தியை தேடிக்கொண்டிருந்தார். வனங்களிலும் பலகாலம் தேடியும் நரசிம்மரை தரிசிக்க முடியாததால் மிகவும் அயர்ந்து ஓர் மரத்தடியில் படுத்திருந்தார்.



உ



அப்போது தெய்வாதீனமாக ஓர் வேடுவன் வந்தான். அவனை ஸ்ரீ ஸ்வாமிகள் கண்டார். அவனும் ஸ்வாமிகளை கண்டான், வந்த வேடுவன் ஸ்வாமிகளை வணங்கினான்.

வேடுவன் :- கும்பிடுறேன் ஸ்வாமி, ரொம்ப களைத்துப் போய் சோர்ந்து படுத்திருக்கிறீர்களே! ஏதாவது காரணம் உண்டா? தாங்கள் யாரையோ தேடிக் கொண்டிருந்திருக்கிறீர்கள் போல் தெரியுது. அதன் விபரத்தை அடியேன் அறியலாமா?

ஸ்வாமிகள் :- நீ நலம் பெறுவாய்! எம்மைப் பற்றி விசாரிக்காதே! யாம் நொந்து போய் வேதனையால் படுத்திருக்கிறோம். நீ உன் வந்த வழி செல்வாயாக.

வேடுவன் :- ஒருவருக்கு ஒருவர் உபகாரம் செய்வது தானே மனிதப் பண்பு? ஒருவர் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு அவருக்கு உதவி செய்யாமல் இருப்பது ஓர் மனிதனுக்கு அழகில்லையே! அதனால் தான் கேட்டேன்.

ஸ்வாமிகள் :- அப்பா! எம் கஷ்டம் உன் போன்றவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது? உன் தொழிலோ கொலைத் தொழில் எம் காரியமோ ஜீவ காருண்யம். இவ்விரண்டையும் பார்த்தால் "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் நிலை போன்றதாகும்?" எம்பிராணனை வாங்காதே (சற்று சினந்தே கூறினார்)

வேடுவன் :- (சிரித்துக் கொண்டே) ஏன் ஸ்வாமி! இந்த கோவம் உங்கள் நிலைக்கு ஆவாது. நான் கோவப்பட்டால் அர்த்தம் உண்டு. நான் படியாத பாமரன், ஆனால் தாங்களோ அனைத்தையும் கற்றறிந்த ஸாது. கோவம் சண்டாளன் என எங்க பெரியவங்க சொல்லக் கேள்வி!

ஸ்வாமிகள் :- (திடுக்குற்றார், துணுக்குற்றார்) ஓர் வேடுவனா இப்படி பேசுவது என அவனை ஏற இறங்கப் பார்த்தார்? நீ யார்? பெரிய வார்த்தைகள் எல்லாம் பேசுகிறாயே! சரி எம் உண்மையான காரியம் உன்னாலாகாது என எண்ணித் தான் சொல்லத் தயங்குகிறோம். மேலும் யாமே பற்பல வருஷங்களாக பிரயத்தனப்பட்டும் இன்று வரை எந்த பலனும் அளிக்கவில்லை. அது உன் நிலைக்கு (வேடுவ தொழிலுக்கு) அப்பாற்பட்டதாகும்.



உ



வேடுவன்:— ஸ்வாமிகளே! ஓர் பழமொழி உண்டு. அது தெரியுங்களா உங்களுக்கு? "சிறு துரும்பும் பல் குத்த உதவும்" பல்லைக் குத்தி அக்கழிவை யெடுத்து தூர எறிந்து விட்டு அத்துரும்பையும் தூரக் கடாசி விடுகிறோம் பாருங்க! அந்நிலையில் என்னையும் பயன் படுத்தி விட்டு உங்கள் காரியம் முடிந்தவுடன் என்னையும் தூக்கி தூர எறிந்து விடலாமே? என்ன யோசனை சொல்லுங்க சாமி என துரிதப் படுத்தினான் அவ்வேடுவன்.

ஸ்வாமிகள்:— (ஓர் வேடுவனா இப்படி பேசுவது என எண்ணினார்) பின்னும் தன்னை சமாளித்துக் கொண்டு இவ்விதம் சொன்னார். தம்பி! (அவன் பாணியில் சொன்னார்) யாம் ஓர் மிருகத்தை தேடிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் அம்மிருகம் நீ கண்டதும் இல்லை கேள்விப்படவும் இல்லை. ஆகையால் தான் உன்னிடம் சொல்லத் தயங்குகிறோம்.

வேடுவன்:— ஓ சாமி நீர் நாட்டு மனிதர்! நான் காட்டு மனிதன். நாட்டில் உள்ளதை பற்றி உமக்குத்தான் தெரியும்! ஆனால் காட்டில் உள்ளதை பற்றி எனக்குத்தான் தெரியும்!! காட்டில் உள்ள மரம் செடி கொடிகளையும் மிருகங்களையும் பற்றி எனக்குத் தான் தெரியும். நீங்கள் தேடி வந்த மிருகம் எந்தனையது? கொஞ்சம் சொன்னால் என்னால் இயன்ற உபகாரம் செய்வேன்?

ஸ்வாமிகள்:— நண்பா! அன்பனாகவும் இருக்கிறாய்! ஓர் உபகாரியாகவும் இருக்கிறாய்! யாம் தேடி வந்த மிருகத்தின் நாமம் "**நரசிம்மம்**".

வேடுவன்:— என்ன சொன்னீர்கள்? நரசிம்மமா? அப்படி ஒரு மிருகத்தை கேள்விப்பட்டதும் இல்லை நான் பார்த்ததும் இல்லை. சிம்மம் உண்டு; நரசிம்மம் ஏது? நீங்கள் சொல்லும் மிருகம் உங்கள் வாய் மொழியிலிருந்து சிம்மச் சிரசாகவும் மனித உடலாகவும் இருக்குமென தெளிவாக தெரிந்து கொண்டேன். இந்த விநோத மிருகம் காட்டிலுள்ளது தானா? நானோ என் தந்தையோ என் பாட்டனாரோ அல்லது எங்கள் வம்சத்தினரோ இதுவரை சொல்லவே இல்லையே?





ஸ்வாமிகள்:- தம்பி அதனால் தான் முன்பே சொன்னேன். அது உன்னால் இயலாத காரியம் என்று.

வேடுவன்:- தாங்கள் பொய் பேசமாட்டீர்கள்! இல்லாமல் அந்த மிருகத்தை இப்படி தேடி அலையவும் மாட்டீர். இந்த ஓர் உபகாரம் தாங்களுக்குச் செய்யாமல் இந்த சரீரம் இருந்து என்ன பயன்? ஸ்வாமி இப்போது இது காலைப் பொழுது சரியாக சூரிய அஸ்தமன வேளைக்குள் அம்மிருகத்தை எப்படியும் கொண்டு வந்து விடுவேன். இல்லையேல் நான் இருந்தும் வீணே! என சபதம் கூறிச் சென்று விட்டான்.

ஸ்வாமிகளும் அதே பகவத் த்யானத்தில் அழுது உருகி ஹே பிரபோ! ஏன் இப்படி சோதிக்கிறாய்? யாம் அழியும் வஸ்துக்களையா விரும்புகிறோம்? ஸத்ய நித்ய வஸ்துவான உன்னைத்தானே தேடுகிறோம்? யார் யாருக்கெல்லாம் எப்படி எப்படியெல்லாம் அருள் பாலிக்கிறாய்! இந்த அபலையின் அழுகுரல் உன் செவியில் எட்டவில்லையா? ஹே கருணாமூர்த்தி! கருணைக்கடலே! கருணை புரிவாய் எம் ஐயனே எனக் கதறி அழுது கொண்டிருக்கிறார். அந்த வேடுவனோ நரசிம்மனைத் தேடி காடு முழுவதும் அலைந்து விட்டான். அப்படி ஓர் மிருகம் இருந்தால் தானே அவன் தேடியவுடன் கிடைப்பதற்கு? மாலை ஆகி சூரியன் அஸ்தமிக்க ஆரம்பித்து விட்டான்.

அந்த வேடுவன் வைராக்யம் கொண்டான்.

ஹே இறைவா! நீ கருப்போ சிவப்போ? ஆணோ? பெண்ணோ? எந்த உருவமோ? எந்த பெயரோ? நீ நல்லவனோ? நீ கெட்டவனோ? இந்த மூடன் அறியேன். ஆனால் இறைவன் ஒருவன் உண்டு என சொல்லக் கேள்வி. "**அந்த நம்பிக்கை**" எனக்கு இருக்கிறது. ஓர் பெரியவருக்கு கொடுத்த "**வாக்கை**" காப்பாற்றாமல் நான் பூமிக்கு பாரமாக இருந்தென்ன? இறைவா! ஒன்று என் வாக்கை காப்பாற்றும் நிலையில் அந்த பெரியவர் தேடும் நரசிங்கத்தை காட்டிக் கொடு. இல்லையேல் இந்த உயிரை எடுத்துக் கொள் என வேண்டியவண்ணமே ஓர் மரத்தின் மீதேறி ஓர் காட்டுக் கொடியைக் கொண்டு மரத்தில் கட்டி அதில் சுருக்கிட்டு அதனுள் தன் தலையை விட்டு தூக்கில் தொங்கப் போனான்.

# அருளுரை



உ (12)

குழந்தைகளே!

ஸத்யத்திற்காகவே வாழும் ஒரு துடிப்பான பக்குவ ஆன்மா, தன் நம்பிக்கையிலும் வைராக்யத்திலும் சில சமயம் அவசரமும் வேகமும் கொண்ட ஓர் முடிவெடுத்தால் அதையும் இறைவன் நிறைவேற்றி வைக்கிறான். இதில் காரியபக்தியும், கூட நம்பிக்கையின் பக்தியும் இணைந்து சரீரத்தில் வெறுப்பு ஏற்பட்டு

ஓர் "அஸம்பாவிதமான" நிகழ்ச்சியை நிகழ்த்தினால்
"ஒரு சிலருக்கு சாதகமாய் அமைவதுண்டு"! அனேகருக்கு அப்படி
"இன்னலை விடாமல் தந்து விடுவதும் உண்டு"!

## "ஆனால் நலம் நிச்சயம்"!!!

வேகமும் அவசரமும் கொண்ட பக்தியின் நம்பிக்கையும் வைராக்யமும் தரும் பலனை விட "**சாத்வீகத்தில்**" விளையும் பக்தியும் அதன் சிரத்தையும் வைராக்யமும் நலமும் சுகமும் தரும்.

அவசரத்திலும் வேகத்திலும் பழுக்கும் பழம் காயை கனிய வைப்பதாகும். சாத்வீகத்தில் பழுக்கும் பழம் மரத்தில் தானே பழுக்கும் பழம், கனிந்த ருசியான பழமாகும்!

## கனியும்வரை காத்திரு! அங்கு

சுகம்பெறுவாய், நலம்பெறுவாய்!!

இனி கதையைக் கேளாய்!

இவனுடைய திடபக்திக்கும், முரட்டுத்தனத்திற்கும், இவன் வைராக்யத்திற்கும் இறைவன் கட்டுப்படுகிறான். ஓர் குகையிலிருந்து சிம்ம கர்ஜனை கேட்டான். உடனே அவசர அவசரமாக மரத்தை விட்டிறங்கி அக்குகையை நோக்கி ஓடினான்.

அங்கு எம்பெருமான் நரசிம்ம வடிவாய், நான்கு கரங்களையும் இருபுறமும் அகல விரித்த வண்ணம், எந்த ஆயுதமும் இன்றி, எம் வேடுவ பக்தனை எதிர்பார்த்த வண்ணம், சுகமாக



உ



படுத்திருந்தான். எம் வேடுவ பக்தனை கண்டவுடன் நம் கர்ஜனையை அதிகப்படுத்தினான் எம் இறைவன். அந்த வேடுவ பக்தனும்

அடே சிங்கமே நீதான் நரசிம்மமா? உன்னை இதுகால பரியந்தம் என் ஆயுள் முழுவதும் கண்டதும் இல்லை காதுகளால் கேட்டதும் இல்லை. இன்றுதான் உன்னை முழுமையாகக் காண்கிறேன். உன்னைத் தேடி தேடி ஓர் பெரியவர் ஓய்ந்து போய்விட்டார். அவரிடம் நீ எழுந்து வருகிறாயா? அல்லது என் முறையில் உன்னை இழுத்துச் செல்லவா? என முரட்டுத்தனமாக கேட்டான் அவ்வேடன்.

அந்த நரசிம்மமூர்த்தியும் அடம்பிடிப்பது போல் புரண்டு புரண்டு தம் நான்கு கைகளையும் பலமாக அசைத்த வண்ணம் இரு திருவடிகளையும் உதைத்த வண்ணம் பலமாகத் தம் தலையை அசைத்தார்.

அது வர முடியாது என்பதைப் போல் சைகை போலும்? அது எம் வேடுவ பக்தனுக்கு மட்டும் தெரியும், மற்றவர் உணரார். அவனும் எம் இறைவனை விட அதி உக்ரமாக உறுமிக் கர்ஜித்துக் கொண்டு என்னிடம் உன் வாலை ஆட்டுகிறாயா? நான் யார் தெரியுமா? எத்தனை கொடிய மிருகங்களையும் வேட்டையாடி அழித்தவன். நான் அவரிடம் உன்னை பிடித்து வருகிறேன் எனக் கூறி வந்தேனே தவிர உன்னை அடித்துக் கொண்டு வருகிறேன் எனச் சொல்லவில்லை. ஆகவே நான் நல்லதனமாக கூப்பிட்டால் நீ வரமாட்டாய். ஆனாலும் நான் உன்னை விடமாட்டேன் எனக் கூறிக் கொண்டு,

“அன்பர்களுக்காக பாதம் நோக நடந்த திருவடியை”!!

அன்பர்களின் சரண கமலாலய திருவடியை!!

பக்தர்கள் சரண் புகும் புகலிட திருவடியை!!

கோடிக் கணக்கான ஜீவர்களை உஜ்ஜீவிக்கும் திருவடியை!!

அனைத்து ஜீவர்களும் முடிவில் ஒடுங்கும் திருவடியை!!

காட்டுக் கொடிகளால் கட்டி ஓர் மிருகத்தைப் போல் கல்லும் முள்ளும் குன்றும், குழியும், பாறையும், புதரும், மோதி எம் பெருமான்



உ



சரீரமெல்லாம் ரணமாகி குருதி கொட்டோ கொட்டென
கொட்ட தர தர தர தர வென இழுத்துக்கொண்டு வந்து எம்
ஸ்ரீ பத்மபாதர் முன் இழுத்துப் போட்டான், அவ் வேடுவ
பக்தனென்றும், மூடபக்தனென்றும், முரட்டுப்பக்தன்.

(கல்முள் பாறைகற்கள் இடித்ததோ குருதி கொட்டியதோ,
அனைத்தும் பொய்யே! இது அவனுடைய மாயா நாடகம்.
அது கட்டுக்கொடியல்ல வேகத்தில் விளைந்த அன்பு பிணைப்பாகும்.) இதுவே மூடம்.

குழந்தைகளே!

வேதங்களாலும் காட்ட முடியாதது, கட்ட முடியாத
உவமையான வார்த்தையால் சொன்னால் "மஹா மேரு பர்வதம் போல்"
இருக்கும் ஒன்றை, உன் உள்ளங்கைகளில் அடக்கிக்கொள்ளலாம்.

அனைத்தான்

"**அன்பென்னும் பிடியில் (அகப்படும்) மலையே!!**
**(அடங்கும்) மலையே!!**"

என்றார்கள் அன்பர்கள்.
எம் அன்புச் செல்வங்களே!

உங்களாலும் அவஸ்யம் முடியும்.

உங்கள் உடல் உலக உணர்ச்சிகளை மறந்தால்?
உங்கள் பந்தபாசப் பிணைப்பை முழுவதும் கெடுத்தால்?
உங்கள் வீண் கற்பனை மனதை அவன் மீது செலுத்தினால்?
உங்களுடைய அனைத்தும் நிர்க்கதியாகி சத்கதியைப் பெற்றால்?
உங்களுடைய துர்குணங்களில் விலகி சத்வகுணம் ஓங்கினால்?

"**முடியும்**"

இந்த முரட்டு மூடபக்தன் பார்வைக்கு "நரசிம்மம்" என்ற மிருகம்.
பக்தியில் திளைத்த அன்பர் கண்களுக்கு "நரசிம்ஹ சொரூபம்".
நம் பத்மபாதர் கதறினர், பதறினர், அலறினர், அழுபுலம்பினர்
உம்மை இக்கதிக்கு ஆளாக்கி விட்டோமே, எமக்கு மன்னிப்பே
கிடையாதே! எமக்கு எந்த தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள்
என இறைஞ்சி வேண்டினர் எம் பத்மபாதர். இறைவன் சொன்னான்,
குழந்தாய்! நீ எந்த தவறும் செய்யவில்லையே! இந்த குழந்தையும் எந்த
தவறும் செய்யவில்லையே அப்படி இருக்கும் போது யார் யாரை மன்னிப்பது?
யார் யாரை தண்டிப்பது?



உ

(15)

நீ எம் ராமாவதாரத்தையோ, எம் கிருஷ்ணாவதாரத்தையோ
எண்ணி உன் சாதனையை தொடர்ந்திருப்பாயானால் யாம் சுலப
மாக உன் பக்திக்கு கட்டுப்பட்டிருப்போம். நீ ஏற்றுக் கொண்ட
உபாசனையோ "உக்ர நரசிம்மம்" இதற்கு முரட்டுத்தன
மாகவும், திடமாகவும் சாதனை செய்தால் தான்
கட்டுப்படுவோம். இதைப்போலவே "ஹனுமான்"
சொரூப தரிசனத்திற்கும் செய்யும் சாதனை முரட்டுத்தனமா
கவும் திடமாகவும் இருக்க வேண்டும். இதைப்போலவே

**"உக்ர சொரூபங்களுக்கும்"**

உபாசனை நிலைக்குத்தக்கபடி,
அதிஉக்ரமாகவும், அதிமுரட்டுத்தனமாகவும், அதிதிடமாகவும்
(திடம்:- அசைக்கமுடியாத நம்பிக்கை, விசாரணை பண்ணாத நம்
பிக்கை, தம் உடலே சிதைந்து போனாலும் திடவைராக்யம்.)
இருக்க வேண்டும். உன் சாதனையோ **"சாத்வீகம்"**
அதனால் எம் இந்த உருவத்தை கட்டுப்படுத்த முடியாது. ஆனாலும்
உனக்கு யாம் கட்டுப்படவும் வேண்டும்; காட்சி கொடுக்கவும்
வேண்டுமே? என் செய்வோம்? ஆகவே யாமே அந்நிலைக்கு
ஓர் வேலைக்காக வடிவெடுத்து வந்தோம். இந்நிலையில் உன்
சாதனையையும் முடித்துக் கொடுத்தோம். எம்மை நம்பியவர்
களை எக்காலமும் கைவிடோம். எந்த நாமரூப இறைவனை
வேண்டி சாதனை செய்தாலும் அந்தந்த நாமரூப குண சொரூ
பத்தை பொருத்திருக்க வேண்டும் உங்கள் சாதனை. சிறிது
மாற்றமாக செய்தாலும் உங்களை சங்கடப்படுத்தோம்.
அந்த சிரமங்களை யாமே ஏற்றுக் கொள்வோம். வேறு ரூ
பத்தில் வந்து அதை நடத்தி அவசியம் உங்கள் நம்பிக்கையை
ஆர்த்தி செய்வோம் இது உறுதி! ஆனால் சாதனையாளருக்கு
அவன் **நம்பிக்கையும், வைராக்யமும் தான்**"
அவன் காட்டியாகிய சாதனையின் பலன் என கனியக் கனிய
மொழிந்தான் எம் இறைவன்



உ

# 4. குருபக்தி.

ஓர் குருதேவர் ஓர் சத்சிஷ்யனுடன் தன் யாத்திரையை தொடர்ந்து கொண்டிருந்தார். ஓர் கிராமம் வந்ததும் தாம் ஓர் மரத்தடியில் அமர்ந்தவண்ணம் குழந்தாய்! இந்த ஊருக்குள் சென்று ஏதேனும் பிட்சை வாங்கிவா யென தம் உத்தம மாணவனை அனுப்பினார். அவனும் தம் ஸ்ரீ குருதிருவடிகளில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு "அவர் ஆணையுடன்" அந்த கிராமத்திற்குள் சென்றான். ஆறு இடங்களில் பிச்சை கேட்டான். யாரும் போடவில்லை. சரி இன்று உபவாசம் தான் இது இறைவன் திருவுள்ளம் என மகிழ்ந்து வந்து கொண்டிருந்தான்.

வரும் வழியில் ஓர் பெரிய வீடு இருந்தது. அவ்வீட்டின் மாடியிலிருந்து ஓர் அன்னை இந்த பிரம்மச்சாரியை கண்டாள். அவசரமாக கீழே இறங்கி வந்தாள். ஸ்வாமிஜி இன்று இவ்வேளையின் இல்லத்தில் அமுது ஏற்றுக் கொள்ளவும் என பணிந்து கனிந்த நிலையில் பரிவோடு சொன்னாள். அப்பிரம்மச்சாரியும் அம்மா! இன்று பிட்சை முடிந்துவிட்டது என்றான். அதற்கு அந்த அம்மணியும் மண்டியிட்டு அந்த உத்தம சிஷ்யனின் திருவடிகளை பற்றிய வண்ணம் ஸ்வாமி! இன்று பௌர்ணமி திதி பூஜைக்காக நிவேதனம் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஓர் நொடியில் முடிந்துவிடும். மேலும் தாங்கள் நிலையும் அடியாள் அறிவோம். தாங்கள் ஆறு இடங்களுக்கு மேல் பிட்சை ஏற்கவா காது தான் அதையும் அடியாள் மாடி மீதிருந்தே கவனித்தோம்.

"தாங்களாக பிட்சை ஏற்க வரவில்லை!"

"யாமாக இறைவன் கருணையினால் மனமுவந்து கொடுக்கிறோம்!!"

இதில் எந்த தோஷமும் இல்லையென எமக்குத் தெரியும். கருணைபுரியுங்கள் ரங்கநாதா என்றாள். அந்த உத்தம சிஷ்யனின் நாமாவும் ரங்கன் போலும். அவள் ஸ்ரீ பகவந் நாமாவை சொல்லி அவ்விதம் உறுதி யதேச்சையாக சொன்னாள் அது அப்படியே ஆகிவிட்டது போலும்? முதலில் ரங்கன் திகைத்தான். பின் அவள் உள்ளத்தையும் அவள் அன்பின் ஆணையையும் விதிமுறை கலாச்சாரத்தையும் கண்டு ஆமோதித்து அவ்வீட்டின் முன் உள்ள ஓர் மரத்தடியில் அமர்ந்தான்.





அமுது தயாரானதும் பூஜையும் முடிந்தது. அந்த வீட்டு
அம்மாளும் அவர்களைவரும் அந்த ரங்கன் திருவடிகளில் புஷ்பம்
போட்டு நமஸ்கரித்துவிட்டு, ஓர் இலையில் அனைத்து பிரசாதங்களை
யும் வைத்து பவ்யமாக நமஸ்கரித்து கொடுத்தார்கள். நம்
ரங்கனும் அதை ஆனந்தமாக வாங்கி வந்து நம் ஸ்ரீ குருதேவருக்
கு முன்பாக படைத்து தான் ஒதுங்கிகொண்டு ஒதுக்கிக்கொண்டு அருகில்
நின்றார். அவரும் உணவருந்திய பின் மீதியை தம் குழந்தையை
(ரங்கனை) சாப்பிடும்படி பணித்தார். அவனும் உண்டு முடித்தான்.
அன்று பொழுது முடிந்தது. மறுநாள் ஸ்ரீ குருதேவருக்கு செய்யும்
பணிவிடைகள் யாவும் முடித்து தம் காலைக்கடன் களையும் முடித்
து பிட்சைக்குத் தயாரானான் நம் ரங்கன்.

ஸ்ரீ குருதேவர் சொல்வார் குழந்தாய்! ரங்கா! நேற்று
ஆகாரம் பிரமாதம். இன்றும்,
"அதே வீட்டில்! அந்த அம்மாவிடமே! அதே இலையில் ஆகாரம்!"
நீ வாங்கி வர வேண்டும். இது உன்னால் முடியும் என

**"அன்பின் ஆணையாக சொன்னார்."**

நம் ரங்கன் முதலில் திகைத்தான். பின் தெளிந்தான்
ஆனந்தத்துடன் சென்றான் அவ்வீடு நோக்கி!

குழந்தைகளே!
இதை நன்கு கவனிக்கவும்.

அந்த வீடும் இருக்கலாம். அந்த அம்மாவும் இருக்கலாம்
ஆனால் அதே ஆகாரம் அதே இலையில் கிடைக்குமா???

நம் ரங்கன் பவதி பிட்சாந்தேஹி என்றான். அந்த இல்லத்தின்
அன்னையும் வெளியே வந்து பார்த்தாள். நேற்று வந்த பிரம்மசா
ரியே வந்திருக்கிறான் என கவனித்துவிட்டு பிட்சையை எடுக்க
உள்ளே சென்றாள். நம் ரங்கன் அம்மா! என அழைத்தான். அந்த
அம்மாவும் இரு சாமி! போய் எடுத்து வந்து தருகிறேன் என்றாள்
நம் ரங்கனும் சற்று பொறுங்கள் அம்மா! நேற்று தந்த ஆகாரமே
இன்றும் வேண்டும் என்றான். நேற்றுத் தந்த ஆகாரமா அது எப்படி
முடியும்? நேற்று பௌர்ணமி திதி அதற்காக பூஜையின் நிமித்தம்
அப்படி செய்தோம். அது செய்யவும் முடிந்தது. இன்று எப்படி முடியுமென்றாள்





அம்மா! தாங்களால் முடியாத காரியம் ஒன்றுண்டா? ஸ்வாமி அன்றும், இன்றும், என்றும் ஒரே மாதிரியாகத்தானே இருக்கிறார். அவர் என்றுமே தாம் தம் நிலையில் என்றுமே மாறுவதில்லை; அதைப்போலவே "அன்னபூரணியாகிய" தாங்களும் என்றும் மாறமாட்டீர்கள். தாங்கள் கைப்பக்குவம் உணவும் என்றென்றும் மாறாது.

அவள் சொன்னாள்; என்னை ரொம்ப ரொம்ப புகழாதே! தெய்வமும் நாமும் ஒன்றாக முடியுமா? தர்மம் கேட்பதிலும் ஓர் வரைமுறை இருக்கிறது. எங்கும் எந்த உணவு அன்பாக தரப்படுகிறதோ அதை அன்பாக வாங்கிச் செல்லவேண்டியதான் முறை! அதைவிடுத்து உங்கள் இஷ்டத்துக்கெல்லாம் தயார் செய்து கொடுக்கமுடியுமா?

ரங்கன் கேட்டான் அம்மா தாங்கள் சொல்வது உலகுக்குப் பொருந்தும் அம்மா; அது உங்களுக்குப் பொருந்தாது. காரணம் எம்பரம் குருதேவர் சொன்ன ஸத்யவாசகம் வீண் போகாது அவர் சொன்ன வார்த்தையாவது:— அதே வீடு; அதே அம்மா; அதே ஆகாரம் என தாங்களைத்தான் குறிப்பிட்டு சொன்னாரே தவிர வேறு வீட்டையோ, வேறு அம்மாவையோ, வேறு ஆகாரத்தையோ குறிப்பிடவில்லையே ஆகவே தாங்களால் முடியும்.

அவள் சொன்னாள் உன் குருதேவர் சொன்னால் அது அப்படியே பலிக்கும் என்ற எண்ணமா? அது என்ன வேதவாக்கா? உன் குருதேவரை அத்தனை உயர்வாக எண்ணிப்பேசுகிறாயே! உன் குருதேவர் உன்னைப் பார்த்து அடே! உன் கண்ணைக் கொடு என்றால் கொடுத்துவிடுவாயா உங்களைப் போல் எத்தனையோ சாமியார்களையும் சிஷ்யர்களையும் நான் பார்த்திருக்கிறேன் (என ஏளனமாக சொன்னாள் அந்த பெண்)

ரங்கன் சொன்னான்:— அம்மா நீ கோடானுகோடி சாமிகளை கண்டிருக்கலாம். ஆனால் எம்பரம் குருதேவரைப் போல் நீ இந்த உலகில் என்ன எந்த உலகிலும் கண்டிருக்கமாட்டீர்கள். எம்பரம் குருதேவருக்காக இந்த கண்கள் என்ன. என் பிராணனையும் கொடுக்க சித்தமாக இருக்கிறோம். எம் உடல், பொருள், ஆவி அனைத்தும் அவரே. அவருக்கு அன்னியமாக எதுவும் இல்லை

அவள் சொன்னாள்:— தம்பி இளமையான சின்னச்சாமியாரே! இப்படி வீராப்பு பேசிவிடலாம் ஆனால் எவருமே நடந்ததில்லை. (அவள் குதர்க்கமாக இவ்வார்த்தையை சொன்னாள்) எங்கே உன் குருதேவருக்காக நான் கேட்கிறேன், உன் ஒரு கண்ணை கொடு பார்க்கலாம் (என விளையாட்டாக கேட்டாள்) நீ அப்படி ஒரு கண்ணை கொடுத்து விட்டால்



உ



அதே ஆகாரம் செய்து கொடுத்து விடுகிறேன் என்றார்.

ரங்கன் சொன்னான்:- இவ்வளவு தானா?

"எமக்கு எம் குருசேவையே முக்கியம்; எம் கண்கள் முக்கியமல்ல"!

உடனே தம் விரலை விட்டு தோண்டி ஓர் கண்ணையே எடுத்து அந்த அன்னபூரணியின் பாதங்களில் வைத்து விட்டான் எம் ரங்கன். அந்த கண்ணை தோண்டி எடுக்கும் போது அவன் சொன்ன வாசகம்

**"குருரங்கார்ப்பணம்"!!!**

என குருவையும், திருவையும் இணைத்தே அழைத்த வண்ணம் தம் கண்ணைக் கொடுத்து விட்டான்.

அந்த மாதரசியும் திகைத்தாள் (செய்வதறியாது) பதைத்தாள் (வழி தெரியாது) புலம்பினாள் (உடல் தெரியாது) என்ன சொல்லவேண்டும்! என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல் உணர்வற்ற நிலையில் கீழே சாய்ந்து விட்டாள்.

நம் ரங்கன் அந்த அம்மாவை மூர்ச்சை தெளிவித்து சமாதானப்படுத்தினான்

"முடிந்த கதை தொடராது, நடப்பது நலமாகவே நடைபெறும்"!

என்றான். அவளும் ஒருவாறு சமாதானம் ஆனாள். இறை உணர்வில் மனதை கரைத்தாள். நேற்றைய தினம் போல் இன்றும் பாகமாகி விட்டதும் இறைவனுக்கு முன்பு படைத்தாள். இறைவன் பிரசாதமாகவே இன்றும் உணவை கொடுத்து அனுப்பி வைத்தாள் அந்த பெண் பாவை. நம் ரங்கனும் அந்த ஓட்டை கண்ணை ஓர் துணி கொண்டு அடைத்தான், உணவுடன் தம் ஸ்ரீ குருதேவரிடம் வந்து சேர்ந்தான்.

ஸ்ரீ குருதேவரும் ரங்கனின் கண்ணைப் பார்க்காத பாவனையில் உணவை ஏற்றார். தம் சிஷ்யனைப் புகழ்ந்தார். ரங்கா! உன்னைப் போல் ஓர் ரத்தின குழந்தையைப் பெற யாம் என்ன தவம் செய்தோமோ? அதை அவனே அறிவான். **அதே உணவு!** **அதே சுவை!!** இதை எப்படி அந்த அன்னையால் சமைக்க முடிந்தது! (குறும்புச் சிரிப்பாக சிரித்துக் கொண்டே, அவன் முகத்தை நோக்குவது போல் நோக்கினார் ஸ்ரீ குருதேவர்) என்னவாயிற்று உன் ஒரு கண்? ஒரு கண்ணை தானம் செய்து விட்டாயா? அந்த பெண்ணுக்கு உன் ஒரு கண்ணை கொடுத்து தான் இந்த உணவை ஏற்று வந்தாயா? அந்த பெண் கேட்டாளென்று ஒரு கண்ணை கொடுத்திருக்கிறாயே யாம் கேட்டால் அந்த மற்றொரு கண்ணையும் கொடுத்து விடுவாயோ என்றார்?





உ

ஹே குருதேவா! ஸத்குருவார்யா! ஸத்ய சொரூபா!

இது என்ன கோர்ஷி?

"அனைத்தும் உமதுடைமை ஆனபின், எமக்கென ஏது உண்டு"???

"அனைத்தும் உமதுடைமையே! எல்லாம் நீயே"

என்ற சர்வார்ப்பணத்தில் கரைந்தவண்ணம் நான்கு தோன்றுவது போல் அந்த ஒருகணியையும் தோண்டியெடுத்து ஸ்ரீ குருதேவர் பாதங்களில் வைத்தவண்ணம் தம் கரங்களால் தாளம் போட்டு இந்த ஓர் வாசகத்தையும் சொன்னான்.

"குரு ரங்கார்ப்பணம்"!!!

அவன் பாடிய பாடலாவது!

ஆபத்பாந்தவா! ஆனந்தரூபா!!
அமைதி அருள்வாயே!
ஸத்குருவார்யா! சாந்தஸ்வரூபா!!
சாந்தி அருள்வாயே!
மௌனதேசிகா! ஞானஸ்வரூபா!!
ஞானமருள்வாயே!
சச்சிதானந்தா! ஸத்யசொரூபா!!
யாம் அதுவென ஆனயே!

என ஆனந்தத் தாண்டவமாடினான் எம் ரங்கபக்தன்! அந்தரங்க சிஷ்யன். அவன் அந்தரங்கபக்தியும் ஸத்குரு உருக்கமும் இணைந்த தன்மையினால்

குருவே திரு (ரங்கன்) ஆனாரா? திருவே அங்கு ரங்க ஸ்வரூபத்தில் வந்தானா? யாம் அறியோம். ஆனால் அங்கு இருவர் உளர். அதாவது ஸ்ரீ குருதேவரும் ஸ்ரீ ரங்கநாதனும் இருந்தார்கள். எம் ரங்கநாதன் குருஅம்ஸமாயிருந்த ரங்கனை ஆரத்தழுவி முத்தமிட்டு அவன் கண்களை தம் அபயகரம் கொண்டு தடவினான். அந்த ரங்கனின் கண்கள் பூரண ஒளியுடன் விளங்கின. வந்த ரங்கன் அக்குழந்தை ரங்கனை அனுக்ரஹித்தார். இருந்த குருதேவர் தம் குழந்தையை தடவி கொடுத்து ஆசிர்வதித்தனர். இந்த விதமாக குருசேவையில் ஈடுபட்டிருந்த நம் ரங்கன் ஒன்றும் பிரம்மசாரியை அவ்வூர் அரசன் பவனிவரும்போது சந்திக்கிறான். அந்த பிரம்மச்சாரியின் தேஜஸில் அரசன் திக்பிரமை கொண்டவனாய் அவனைப் பணிந்து வணங்கி தம்





அரண்மனைக்கு கொண்டு செல்கிறான். அங்கு அவ்வரசனின் படோ
டோப உபசரிப்பை அந்த உத்தமன் நிராகரிக்கிறான். அப்போது
நம் ரங்கன் சொல்லும் வாசகம்!

அரசே!

அழகு ஆபத்து! ஆடம்பரம் அழிவுப்பாதை!
புகழ்ச்சி மரணக்குழி! பணம் உயிர்கொல்லி! வீண் பேச்சு
வினைத்தொடர்! இப்படி இந்த ஐந்திலும் நாங்கள் ஜாக்கிரதையாக
இருப்போம் "எதுவும் எங்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும்"!
உங்களுக்கு அவைகள் இல்லாமல் உலகம் இல்லை!!
எங்களுக்கு அவைகளோ உலகமோ தேவையில்லை!!
நீங்கள் அவ்வுலகுக்கு பயன்பட வேண்டும்!!
எங்களுக்குள் அவ்வுலகம் பயன்படும்!!

குழந்தைகளே!

இவ்வசனங்களைக் கேட்ட அவ்வரசன்
முதலில் ஆடிப்போனான். ஆனாலும் தம் ஆணவத்தால் தெளிந்தான்
ஏ வாலிபனே! மிக அழகாக தத்துவங்களை எடுத்துரைத்தாய்.
இவை கேட்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது, ஆனால் அவை
அனுபவத்திற்கு ஒத்து வராதவை. உன்னைப் போல் ஆயிரம் சந்நி
யாசிகளையும் சாமியார்களையும் நான் பார்த்திருக்கிறேன். இப்படி
வாய்பேச்சு நிறைய பேசுவார்கள், பின் பெட்டிப்பாம்பாக அடங்
கிவிடுவார்கள்.

"**சாமி - யார்**" என்ற கேள்விக்குறியாகத்தானே இருக்கிறது!
"**சாமி - நான்**" என்ற பதில் இது வரையில் கேட்டதில்லையே!!
சரி அது போகட்டும், இது வரை நான் ஆயிரத்திற்கு மேலான சாமியா
ர்களைப் பார்த்திருக்கிறேன். முதலில் கட்டவிழ்த்து பேசுவார்கள்,
பின் என்னைப் புகழ்ந்து ஓர் பாடல் பாடி விட்டு தக்க சன்மானமும்
பெற்றுச் செல்வர் இது நான் இங்கு பழக்கம். நானும் சாஸ்திரம்
வேதம் வேதாந்தம் கற்றவன்தான். என் சபையிலும் அப்படி மஹான்
கள் எப்போதுமே இரண்டொருவர் உண்டு என அவர்களையும்
சுட்டிக் காட்டினான் அரசன். பின் தன்னைப் புகழ்ந்து ஓர் பாடல்
பாடும்படி ஆணையிட்டான்.

நம் ரங்கனும் முதலில் சிரித்தான் அரசு, ஆளுமை, ஆட்சி
என வந்து விட்டாலே ஆணவம் அதிகாரம் பின் அழிவு இவை வந்து
தானே தீரும் அதில் நீ என்ன விதிவிலக்கா? நீயும் சாமியே!
யாமும் சாமியே! ஆனால் நீ உணராதவன் யாம் அதை உணர்ந்தவன்.
யாம் தெய்வஸ்துதி, குருஸ்துதி, இவைகளைப் பாடும் வாயால் நரஸ்துதி பாடுவதில்லை.



(22)

உ

ஏ பிரம்மச்சாரியே! வேதாந்தம் கற்ற உனக்கு நரன் - நாரணன் இரண்டும் ஒன்றென உனக்கு உறைக்கவில்லையா?

நீ நரன், நான் நாரணன்! பின்னர் நரனை, எம்பிரானை யாக இருக்கும் நீ, அரசனாகிய நான் நாரணனாக இருப்பது உனக்கு புரியவில்லையா? பின்னர் என்னைப் புகழ்ந்து ஏன் பாட்டு பாடக்கூடாது? (அவையிலுள்ளோர் அனைவரும் அரசனுக்காக கை தட்டி ஆர்ப்பரித்து பாராட்டி வரவேற்றனர்)

நம் ரங்கன் முதலில் ஏளனமாகச் சிரித்தான், பின் சொன்னான். நீ நல்ல விளக்கமே கொடுத்தாய் இது வேதாந்தத்திற்கு பொருந்தும் தான். ஆனால்?

**“நீ நாரணனாக இல்லையே, நரிப்போலவே”**

அதாவது அகங்காரத்தாலும், ஆணவத்தாலும், அதிகாரத்தாலும் மமதையாலும், **நான். நான். நான்.** என்று கெட்டுப்போனாயே நீ நாரணனாக அந்த பரந்தாமன் நாராயணனாக இருந்தால் இந்த ரஜோ தமோ குணங்கள் உன்னிடம் தலை காட்டாது. சத்வ குணம் ஒன்றே உன்னிடம் நிறைந்திருக்கும். அப்படி இருக்கும் பட்சத்தில் யாம் இங்கு வந்த உடனேயே உன்னைக் கோமானவே தெய்வ ஸ்துதியில் பக்தன் என்ற நிலையில் உன்னையும் இணைத்தே பாடியிருப்போம். ஆகவே யாம் பாட நீ தகுதி அற்றவன் என்றான் நம் ரங்கன்.

அரசன் அரசமமதையினாலும் அகங்காரத்தினாலும் தன்னையே மறந்தான் அதிகார ஆணவத்தோடும் இருகைகளையும் உரக்க தட்டினான். அங்கு காவலர்கள் வந்தனர்.

“இந்த துஷ்டனை நாடு கடத்தி விடுங்கள்”! என ஆணையிட்டான். அரசன் ஆணையின்படி நம் ரங்கன் நாடு கடத்தப்பட்டான். இந்த விபரம் பரம் குருதேவர் அறிந்தார். அவர் அரசன் மீதோ அவன் ஆட்சியின் மீதோ எந்த குற்றம் குறை காணவில்லை, வேகம் இல்லை, கோபம் இல்லை, சாபம் தரவில்லை. அவரும் அவர் சிஷ்யன், ஆகிய இருவர் உடைமைகளையும் ஓர் மடிசஞ்சியில் போட்டுக் கொண்டார் அமைதியாக சிஷ்யன் போன வழியே தானும் நடந்தார். போகும் வழியில் தான் எம்பெருமான் சேஷன் மேல் பள்ளி கொண்ட திருக்கோலம் கொண்ட ஆலயம் இருந்தது போலும்? அந்த ஆலயத்தை ஓர் முறை உற்றுப் பார்த்தார். பின் கர்பக்கிருஹத்தை பார்த்தார் எம தய்யன் ஆனந்தமாக அனந்த சயனத்தில் கள்ளத்தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான் போலும்?





எம் ரங்கநாதன் கண்களை திறப்பதும் மூடுவதும். திறப்பதும் மூடுவதுமாக என்ன ஆணை வருமோ என காத்திருந்தான் போலும்?

குருநாதர்:- ஏ ரங்கநாதா?

பெருமாள்:- ஏன் பிரபோ?

குருநாதர்:- அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

பெருமாள்:- கள்ள தூக்கம் தூங்கிக் கொண்டே கபடமாக இச்ஜீவர்கள் அறியா வண்ணம் அவர்கள் கர்மாவை இயக்குவதே எம் வேலை.

குருநாதர்:- சரி சரி இங்கு இனி தூங்கியது போதும்!

பெருமாள்:- அடியோம் இனி என்ன செய்ய வேண்டும்? ஆணையிடுங்கள். அடியோம் காத்திருக்கிறோம்?

குருநாதர்:- நீ கெட்ட கேட்டிற்கு ஆதிசேஷனின் ஒரு படுக்கையா? நீங்கள் இருவரும் தூங்கிக் கொண்டே உலகை பாழாக்குங்கள். கேட்டால் ரட்சிக்கிறோம் என்கிறீர்கள்.

பெருமாள்:- ஏ மஹானுபாவா! வார்த்தையை மாற்றிச் சொல்லாதீர்கள் அது அப்படியே பலிதமாகிவிடும். நாங்கள் "**பாழாக்கவில்லை. பால் ஆக்குகிறோம்.**"

குருதேவர்:- சிரித்தார் பால் ஆக்குகிறீர்களா?

பெருமாள்:- ஆமாம் ஸ்வாமி! அனைவரும் பால் போன்ற உள்ளங்களே. சகவாச (குண) தோஷங்களால் அந்த பால் திரிந்து (கெட்டுப்) போகிறது. அதை திரும்பவும் கழுநீரில் ஊற்றி அதே பசுவை குடிக்கச் செய்து அந்த பசுவின் மூலமாகவே சுத்தமான பாலாக கறந்து விடுகிறோமே

"பால் கெட்டது உலகத்தில்"!

"பால் சுத்தமானது பக்தியில்"!!

குருதேவர்:- அடேயப்பா! உன் விளக்கம் ரொம்ப நல்லாத்தான் இருக்கிறது. இங்கு பேசிக் கொண்டிருக்க நேரம் இல்லை. எம் குழந்தை இந்த நாட்டை விட்டே போகிறான் இது அவன் விதி.

"எம் குழந்தை இருக்கும் இடமே எம் இருப்பிடம்!"

"யாம் இருக்கும் இடமே உன் உறைவிடம்!!"

நீ படுத்திருக்கும் பாயை (ஆதிசேஷனை) சுருட்டிக் கொண்டு எம்மோடு வா. உனக்கு இங்கு வேலை இல்லை என்றார் ஸ்ரீ குருதேவர்.



உ



குழந்தைகளே!
"அந்தரங்கநாதனும் அப்படியே மஹாத்மா!
என்றான். பைநாகப்பாம்பை பாயாக சுற்றினான்; ஓர் கக்கத்தில்
இடுக்கிக் கொண்டான். தம் சங்கு, சக்ர, கதையை (வீட்டு பாத்திர
ங்களை ஒருகையில் அடுக்கி பிடிப்பது போல்) ஒரே கையில்
அள்ளியெடுத்துக் கொண்டான். அமைதியாக ஸ்ரீ குருதேவரை
பின்தொடர்ந்தான் எம் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள்.
இது காலபரியந்தம் பிரகாசமாக இருந்த ஊர்
களை கெட்டு விட்டது. அதாவது பட்டப்பகலிலேயே இருள்
அடைந்தது போல் ஓர் நிலையைப்பெற்று விட்டது. அரசன்
செய்தியையும் அறிந்தான்; நடந்த நிகழ்ச்சிகளையும்
உணர்ந்தான். ஓடோடி வந்தான்; தம் ஊர் தெய்வமா
கிய ஸ்ரீ ரங்கநாதர் திருவடியில் விழுந்தான், அழுதான், தொழு
தான்; எம்பெருமானும் ஸ்ரீ குருதேவர் திருவடியை காட்டி
னான். அரசனும் ஸ்ரீ குருதேவர் திருவடிகளை பற்றி கெஞ்சி
கதறி அழுது பார்த்தான். ஸ்ரீ குருதேவரும் தம் உத்தம குழந்தை
யான ரங்கனின் திருவடியைக் காட்டினார். அந்த அரசனும்
நம் ரங்கனின் திருவடிகளில் விழுந்து கெட்டியாகப்பற்றிக்
கொண்டு கதறி, பதறி, அலறி ஓ மஹாத்மா! அடியேன் அறிவி
லாமல் நடந்து கொண்டதை அறிவு சொரூபமாகிய நாங்
கள் தான் மன்னிக்க வேண்டும். என் வித்வத்வமும், பணச்
செருக்கும் வீண் கர்வமும் அதிகார அஹங்காரமும் இவ்வா
று செய்து விட்டது என மன்னிப்பு கேட்டான். அம்மூவரும்
அதன் இருமையின் பழைய நிலைக்கு வந்து விட்டனர்.
குழந்தைகளே!
"குருபக்திக்கு கட்டுப்பட்ட தம் மாணவனுக்
காக ஸ்ரீ குருதேவர் எப்படியெல்லாம் தம்மை ஆக்கிக் கொ
ள்கிறார் என்பதை உணருங்கள். குருபக்தியால் தெய்வம்
தம்மை எப்படி ஆக்கிக் கொள்கிறது என்பதையும் உணருங்கள்
"**பணிவே பாதை**" என உங்களை ஆக்கிக்கொள்ளு
ங்கள் அனைத்தும் நலமாகவே நடைபெறும்.





## ௫. ஸ்ரீபகவத்சொரூபம் ஆச்சாரமா? உருக்கமா?

மஹாபாண்டித்யம் பெற்ற ஓர் ஸ்ரீபாகவதோத்தமர் இருந்தார். அவருக்கு ஓர் உத்தம மாணவன் இருந்தான். அந்த மாணவனை எங்கு சென்றாலும் உடன் அழைத்துச் செல்வார் அந்த பண்டிதர். அவன் அடக்கமே உருவானவன். உருக்கமே உள்ள சொரூபமானவன். ஸ்ரீ குருசுஷ்ருஷையில் அவனை எவரும் மிஞ்ச முடியாது. அத்தனை எளிமையானவன். இனிமையானவன். ஸ்ரீ பக்த சரித்திரங்களில் "**கஜேந்திர மோட்சம்**" அந்த மஹானுக்கு அதிக ப்ரீதியானது. அதை அதி அற்புதமாகவும் "அலங்காரமாகவும்" சொல்லி ஜனங்களை மகிழ்விப்பார். ஓர் உண்மையென்னவென்றால் ஸ்ரீமந் நாராயணனை அலங்காரப்பிரியனாக பாவனை பண்ணி பாவனை பண்ணி பழகிவிட்டார். இறைவனை எந்த வினாடியும் "சர்வாலங்கார பூஷிதனாகவே" மனநேத்திரத்தால் கண்டு களிக்கின்றவர்.

ஓர் நாள் இந்த மஹானுக்கு உடல் நலக்குறைவாகி விட்டது. அன்று கதை சொல்லப் போக முடியாத சூழ்நிலை ஆகிவிட்டது. தம் உத்தம மாணவனை அழைத்தார். இன்றொரு நாள் மட்டும் நீ கதை சொல்லிவிட்டு வா. உனக்குத்தான் எல்லா கதைகளையும் எம்மிடம் இருந்து சர்வசதா கேட்டுக்கேட்டு பழகிவிட்டாயே. பின்னென்ன மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? எம் பாணியில் "எம் கதையை" உன் பவளவாயால் சொல்லி வருவாயாக. இன்று கதையின் தலைப்பு "கஜேந்திர மோட்சம்" ஆகவே சிறப்பாக கதை சொல்லி வருவாயாக என பணித்து அனுப்பி வைத்தார். இந்த உத்தம மாணவனும் சபை சென்று அழகாக ஆனந்தமாக கதை சொல்லி வந்தான். குருதேவரும் ஆனந்தம் அடைந்தார்.

மறுநாள் ஸ்ரீ குருதேவர் வீட்டு வாசலில் ஓர் பத்துபதினைந்து பேர்கள் அவ்வூர் பிரமுகர்கள் கூடிவிட்டனர். குருதேவர் என்னவென பதறி கேட்டார்? அன்பர்களே நேற்று எம் மாணவன் கதை சொல்லியதில் குற்றம் குறை இருப்பின் எம்மை மன்னித்து விடுக. நேற்றைய தினம் எம் உடல்நிலை சற்று சரியில்லாததால் அவனை அனுப்பி வைத்தோம். இனி அவனை அனுப்ப மாட்டோம் அவன் சிறுபிள்ளை தானே? இனியாமே வந்து மற்ற கதைகளை சொல்லி முடித்து விடுகிறோம் எமக்காக அவனை மன்னிப்பீர்களாக என பணிந்துரைத்தார் ஸ்ரீ குருதேவர்.



உ



அவர்கள் அனைவரும் இணைந்த குரலில் சொன்னார்கள்.
ஸ்வாமிகளே! இனி கதை சொல்ல நீங்கள் வர வேண்டாம்
உங்கள் சின்னசாமியையே அனுப்பி வையுங்கள். இதுவரை
உங்கள் கதையை இப்படி ஒருவர் சொல்ல யாங்கள் கேட்டதே
இல்லை. கதை வெகு அற்புதம், கதை வெகு ரசனை, கதை வெகுவெகு
உருக்கம். இப்படியெல்லாம் ஏன் சுற்றி வளைத்துப் பேச வேண்டும்?
"ஸ்ரீமந்நாராயணனை உங்கள் சின்னசாமி வடிவத்தில் கண்டோம்"
அத்தனை பேரும் இதை சொல்லும் போது உருகிப் போனார்கள். பின்
அவர்கள் அவ்விருவரையும் வணங்கி விட்டு சென்று விட்டார்கள்.
குருதேவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

தம் சிஷ்யனை அழைத்தார். அருகில் வந்தான் குழந்தை!
அப்படி என்ன கதையில் புதுமையை புகுத்திச் சொன்னாய்? யாம்
சொல்லும் கதை தானே? எம்மிடம் கேட்ட கதை தானே? கதையின்
முக்கிய பாகமே ஸ்ரீ பகவான் வைகுண்டம் விட்டு கருடன் மீதேறி
வந்து முதலையை முடித்து யானையை ரட்சிக்கும் இடம் தானே?
"எங்கே இந்த இடத்தை எப்படி சொன்னாய்?"
சபையோர் உருகும் அளவுக்கு நீ கதையை மாற்றிச் சொன்னாயா?
இதைச் சொல்லும் போது குருதேவர் முகத்தை சற்று கடினமாக்கிக் கொண்டார்
அந்த உத்தம மாணவன் முதலில் சற்று திகைத்தான். பின் ஆனந்
தத்தில் திளைத்தான். பின் ஸ்ரீ குருதேவர் திருவடிகளில் வணங்கினான். பின்
எழுந்து அவர் முன் அமர்ந்து கதை சொன்னதை அப்படியே உணர்ச்சி
பொங்கவும், உணர்வு மேலோங்கவும், அபிமான அஹங்காரம் நாச
மாகவும் "கதை சொல்லவில்லை, அக்காரணத்தில் நின்றான்!"

அந்த உத்தம மாணவன் கதை சொன்ன விதம்!

குருதேவா!

கஜேந்திரன் முதலையின் பிடியில் அகப்பட்டு
சுமார் ஆயிரம் வருஷங்கள் போராடினான். ஜலத்தில் முதலைக்குத்தான்
பலம் அதிகம். யானையின் உறவினரும் (மற்ற யானைகளும்) தம் யஜமான
னை யானையை காப்பாற்ற முயற்சி செய்தும் முயற்சி பலன் கொடாது
போகவே அனைத்து யானைகளும் சென்று விட்டன. தனிமையில் போரா
டிய யானை தன் பிராணனுக்காக கடும் முயற்சி எடுத்தும் ஒரு
பயனும் இல்லை. முடிவில் அந்த யானை தன்னை ரட்சிப்பவர் எவர்
என ஒரு கணம் சிந்தித்தது. அந்த யானைக்கு எந்த இறைவனை அழை
ப்பது என்றே தோன்றவில்லை. காரணம் இறை நாமா என்றால் எது
என அதற்குத் தோணவில்லை. முடிவில் அந்த யானை தெய்வபலத்தால்





இப்படி எண்ணியது :— அதாவது அனைத்து ஜீவகோடி களுக்கும் "ஆதியாக" இருப்பதுவே அந்த இறைவன் என முடிவு பண்ணி

"ஏ ஆதிமூலமே" !!! என

கூப்பிடவில்லை! அழைக்கவில்லை! புலம்பவில்லை! கத்தவில்லை! ஒரே நாமம்! ஒரே குரல்! ஊண் உருக! நெக்குருக! அனைத்து ஜீவ கோடிகளும் உருகும்படியாக "கதறி அலறியது!!!

இப்படி உருகிய அலறலானது வைகுண்டபதியாக இருக்கும் எம்பெருமான் செவியில் புகுந்தமாத்திரத்தில் அனந்த சயனத்தில் ஆனந்த யோக நித்திரை செய்து கொண்டிருந்தாம் இறைவன்.

ஆகா! ஆகா!! என எழுந்தான் !!!

உனக்கா இந்த கதி என்றான்!

படுத்திருப்பவன் மகுடம் அணிந்தா படுத்திருப்பான்?

படுத்திருப்பவன் சங்கு, சக்ர, கதை, பத்மத்தோடா படுத்திருப்பான்!

இல்லவே இல்லை. இடக்கரத்தை தலையணையின் மேல் அணையாக வைத்து, ஒருக்களித்த நிலையில், தம் அபயகரமாகிய வலக் கரத்தை வலது தொடையில் விஸ்ராந்தியாக விட்டவண்ணம், தம் இரு பொற்பாதங்களையும் ஒன்றின் மேல் ஒன்றாக சற்று சாய்த்து விஸ்ராந்தியாய் சாய்ந்த நிலையில் யோக நித்திரை செய்கின்றான். அவன் ஆயுதமும் தாமரை மலரும் அந்த சேஷன் மஞ்சத்தில் துயில் கொள்கிறன.

அவைகள் உயிருள்ளவை சக்தி வாய்ந்தவை!

அவைகளுக்கும் அவன் ஆனந்த நித்திரை தேவை!!

இந்த நேரத்தில் அந்த கஜேந்திர பக்தனின் அலறிய, கதறிய, குரல் கேட்டது.

ஸ்ரீ பகவான் தம் ஆயுதங்களாகிய சக்கரம், சங்கு, கதைகளை எடுக்க நேரமில்லை. பத்மத்தையும் எடுக்க நேரமில்லை, மகுடத்தை எடுத்து தலையில் வைக்கவும் நேரமில்லை, படுத்த நிலையில் இடுப்பில் அணிந்திருந்த வஸ்திரத்தை திருத்தவும் நேரமில்லை. மேலே போட்டிருந்த பச்சை நிற அங்கவஸ்திரத்தை மட்டும்



உ

(28)

அப்படியே அள்ளி மேலே போட்டுக்கொண்டான், கலைந்த கேசத்தை சரிப்படுத்தவும் நேரமில்லை, இடுப்பில் கட்டி இருந்த மஞ்சள்பட்டாடை அவிழும் நிலையில் இருந்ததால் அதை தம் இடக்கரத்தால் தாங்கிக்கொண்டான். தம் வலக்கரத்தால் அபயஸ்தம் காட்டிய நிலையில்

குழந்தாய்! "இதோ வந்தோம், வந்தோம்!! அருள் தந்தோம், தந்தோம்!! உன்னை ரட்சித்தோம், ரட்சித்தோம்!! என அபயகுரல் கொடுத்த வண்ணம் வான வீதியில் ஓடோடி வந்தான்"!!!

அந்த நேரத்தில் அந்த கஜேந்திரனுக்கு அவன் துதிக் கையில் ஓர் தாமரை மலர்மட்டும் கிடைத்தது போலும்? அதை அப்படியே வான வீதியில் தூக்கி எறிந்தது. அதை எறியும் போது "ஸ்ரீ பகவத் அர்ப்பணம்"!! எனச்சொல்லி வீசி எறிந்ததை தம் வலக்கரமாகிய அபயஸ்தக் கரத்தில் பற்றிக் கொண்டான் ஸ்ரீ பகவான். சங்கு, சக்ர, கதை எம் ஸ்ரீ பகவானை பின்தொடர, நவரத்ன கசிதம குடம் ஸ்ரீ பகவானை பின்தொடர, கலைந்த கேசத்துடனும், அவிழும் வேட்டியை பிடித்த வண்ணம் பக்த ரட்சிப்புக்காக ஓடோடி வரும் ஸ்ரீ பகவானை காண்கிறேன் என்றான் அந்த உத்தமமான வளுகிய பக்தன்! கன்னத்தில் போட்டுக் கொண்டார்

"அபசாரம், அபசாரம்"! என தம் காதுகளை மொத்தினார் ஸ்ரீ குருதேவர். என்ன காரியம் செய்து விட்டாயடா குழந்தை? சர்வாலங்கார பூஜிதனை, அலங்காரப்பிரியனை இப்படி விரகதாபத்துடன் சொல்லி அசிங்கப்படுத்தி விட்டாயே? இதுதான் நீ கதை சொன்ன லட்சணமா? இதையும் அன்பர்கள் இப்படி ரசித்து கேட்டிருக்கிறார்களே? கதை சொன்ன உனக்கும் பாபம்,



உ



கதை கேட்ட அவர்களுக்கும் மஹாபாபம் சம்பவிக்குமே? இதற்கு யாம் தான் பிராயச்சித்தம் செய்யவேண்டும்?

**அலங்கார சொரூபனை, அவலட்சண சொரூபனாக** ஆக்கிவிட்டாயே?

அந்த பக்தன் "**யாம் காண்கிறோம்**" என்றதையும் இவர் "**அபிமான அஹங்காரத்தால்**" மறந்தாரோ அவன் மறைத்தாரோ யாம் அறியோம். அன்றைய காலம் முடிந்தது!

ஒருவாரம் உருண்டோடியது. ஓர் நாள் அந்த ஸ்ரீபாகவதோத்தமர் எண்ணெய் ஸ்நானம் செய்ய வேண்டி இருந்தது. அவர் கதா சபைக்கு செல்லும் போது தவிர எட்டு விரல்களிலும் எட்டு மோதிரமும், ஒரு கையில் தங்க காப்பும் ஒரு கையில் தங்கச் செயினில் வாச்சும், கழுத்தில் ஓர் மைனர் செயினும் ஓர் ஏழுமலையான் சொரூப டாலருடன் கூடிய தங்கச் சங்கிலிகளும், இடுப்பில் நான்கு விரல் அகலத்தில் ஓர் ஜரிகை கட்டு வேஷ்டியும், மேலே ஓர் ஜரிகை அங்கவஸ்திரமும், தாம்பூலத்தால் சிவந்த வாயும், இரு காதுகளிலும் வைரக் கடுக்கண்கள் அசைந்து பிரகாசிக்கவும், நெற்றியில் ஏழுமலையான் போன்றே அகலமான நாமமும், வாரி விடப்பட்ட கேசங்களின் சுருள் முடிகளும் ஒருவர் பார்க்கும் நிலையில் "**மன்மதன்**" போல் அனைவரையும் கவரும் நிலையில் இருப்பார். அணிமணிகள் இல்லாமல் இவர் வெளியே வந்ததில்லை.

அன்று எண்ணெய் ஸ்நானம் செய்வதால் எந்த வஸ்திரமோ, அணிமணிகளோ இல்லாமல் "கௌபீன தாரியாய்" "கொழு கொழு என மொழு மொழு என" ஓர் பலகையில் அமர்ந்திருந்தார். அதுசமயம் அவர் உத்தம சிஷ்யன் ஓடோடி வந்தான். இரைக்க இரைக்க மேல் மூச்சு வாங்கி நின்றான். அவனை ஏறஇறங்கப்பார்த்தவர் இப்பர பண்டித சிகாமணி. என்னடா? என்னடா? என்றார் வந்தவன் சொன்னான்.

ஸ்வாமிஜீ! தாங்கள் குமாரன் மணிகண்டன் இந்த தெருக்கோடி ஆத்துக் கிணற்றினுள் கால்தவறி விழுந்து விட்டான். உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறான் ஏகப்பட்ட கூட்டம். நானும் பார்த்தேன். உடனே அங்கு நிற்க முடியாமல் இங்கு உங்களை அழைத்துப் போக வந்தேன் என்றார்.



உ



நம் ஸ்ரீ பாகவத ஸ்வாமிகளுக்கு இவனே ஒருமையன். இச்செய்தியைக் கேட்டதும் இரண்டொரு நொடி அவர் மூச்சே நின்றுவிட்டது. திக்பிரமைபிடித்தவரானார். பின் தெளிந்தார் ! எந்தவீடு, எந்த கிணறு? எந்தவீடு, எந்தக் கிணறு? எந்தவீடு எந்த கிணறு?? என அலறியபடி பரபரக்க துடிதுடிக்க ஓலமிட்டவாறு தெருவுக்கு வந்து அவர் அந்த கடைக்கோடி வரையிலும் ஓடிவந்துவிட்டார். அவர் சிஷ்யனும் அவரைத் தொடர்ந்தே பின்னே ஓடிவந்தான். அந்த தெருவிலுள்ளோர் அனைவருமே வெளியே வந்துவிட்டனர். நம்ஸ்வாமிகளை "இந்த நிலையில்" எவருமே கண்டது கிடையாது. அத்தெருஜனங்களுக்கும், வீதியில் போவோருக்கும், இக்காட்சி ஓர் விநோதக்காட்சியாகவே தென்பட்டது. ஒருநாளும் நம்பாகவதர் இக்கோலத்தில் வெளியே வந்ததேயில்லையே ஆச்சர்யம் கொண்டு அனைவரும் தம் மூக்கில் விரலைவைத்துக் கொண்டனர். நம் ஸ்வாமிகளும் தெருமுடிவிடம் வந்ததும், மேலும் பரபரப்பில் "டேய் கண்ணு! எந்த வீடடா? எந்தக் கிணறுடா!" என்றார். நம் கண்ணனாகிய அந்த உத்தம சிஷ்யனும் சரேலென அவர் திருவடிகள் இரண்டையும் சாஷ்டாங்கமாக பற்றினான்.

"**குருதேவா! என்னை மன்னிக்க வேண்டும்!!!**" என்றான்.

உங்கள் செல்வக்குமாரன் மணிகண்டன் நம் வீட்டு புழக்கடைவெளி (அடுத்த) தெருவில் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கிறான் எனச் சொல்லி அவரை சமாதானப்படுத்தி வீட்டிற்கே அழைத்து வந்துவிட்டான். வீட்டில் வந்ததும் தம்மகனை அணைத்து அவனைத் தம் கண்களால் கண்டபிறகுதான் தான் சமாதானம் ஆனார். நம்பாகவதர் கேட்டார்:- ஏண்டா! திருட்டுப்பயலே! என் அன்புமகன் கிணற்றில் விழுந்து விட்டான்; உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான் என ஏண்டா பொய் சொன்னாய்? நம் சிஷ்யன் கண்ணன் சொன்னான்:- ஹே குருதேவா! தாங்கள் குழந்தை கிணற்றில் விழுந்து விட்டான் எனக் கேட்டதும் தாங்கள் மனம்பட்டபாடென்ன? உங்கள் சரீரநிலையையே மறந்த நிலையென்ன?? அந்த நேரம் உங்கள் ஆடை அணிகளெங்கே? பொன்பூஷணமெங்கே? உங்கள் மனைவி மற்றும் உறவுகளின் நிலை எங்கே? உங்கள் மாளிகையான இந்த வீடுதான் எங்கே? நீங்கள் எக்கோலத்தில் இருக்கிறீர்கள் என்ற நிலை எங்கே? இத்தனையும் மறக்கடித்து விட்டது உங்கள்



உ



குழந்தையின் மேல் உள்ள பாசம்?

ஏன் ஸ்வாமி! தெரியாமல் தான் கேட்கிறோம்.
உங்கள் குழந்தையின் மேல் இத்தனை பாசம் அன்பு இருக்கு
மானால். உலக ரட்சகனான இறைவனுக்கு நம் குழந்தையான
கஜேந்திரன் மீது எத்தனை அன்பு பாசம் இருக்கும்?

அந்த யானை தன்னை நோக்கி அலறியதும்? அக்குரலைக்
காதுகளால் கேட்டதும்?
முடியை கோதிவிடவும். அதன்மேல் மகுடத்தை வைத்து
தன் முகத்தை நிலைக்கண்ணாடியில் ஓர் பார்வை பார்த்து எல்
லாம் சரியா? என அழகு பார்க்கவும், ஒவ்வொரு ஆயுதங்களையும்
தேடி சேகரிக்கவும், சகுனம் பார்க்கவும், தம் ஆடை, அணி
கலன்கள் (பொன்னாபரணங்கள்) சரியா இருக்கிறதா என
சரிபார்க்கவும்!!!

**"அவருக்கு நேரம் ஏது"?**

**"மாப்பிள்ளை கோலத்திற்கா போகிறார்"??**

ஓர் ஜீவனை காப்பாற்ற சண்டையிட்டாவது அதை காப்பாற்ற
வேணுமென்ற ஓர் உத்வேகத்தில் **தாங்களைப்போல்**
குழந்தையின் அன்பின் பாசத்தால் செல்லப்பட்டவனுக்கு
**"அவன் போனநிலை சரிதானே?"** ஸ்வாமி
என அவர் திருவடிகளில் பணிந்து பாதங்களை பற்றிய நிலையில்
ஓர் உத்தமமாணவன் கேட்டான்.

ஸ்ரீ குருதேவர் தம் அன்பு சிஷ்யனின் தாள்களில் விழுந்தனர்
அந்த உத்தம சிஷ்யனும் அதை தடுத்து ஸ்ரீ குருதேவர் பாதங்
களில் வீழ்ந்து எம் குருதேவா இது அபசாரம் என்றார். அதற்கு
ஸ்ரீ குருதேவர் சொன்னார் யாம் ஆடம்பரப்பிரியனாகவும், அலங்
காரப்பிரியனாகவும், சுகஸ்துதிப்பிரியனாகவும், விளம்பரப்
பிரியனாகவும், வியாபாரப்பிரியனாகவும், இருந்ததால்
எம் நிலைக்கு ஸ்ரீ பகவானையும் உயர்த்திப் பார்த்தேனே
தவிர உன் போன்ற உள் உணர்வோடு கூடிய ஸ்ரீ பகவா
னின் **"எளிமைக்கும் எளிமையான"** பக்தியை





உள் ஆழ்ந்த பக்தியை உணராது போனேமே? உன்னால் இறைவனின் உண்மையான பக்தி என்ன? அவன் பக்த வாத்ஸல்யத் தன்மை என்ன? அந்த பக்த ரட்சகன் எவ்வாறு பக்திக்கு இறங்கி அருள் பாலிக்கிறான் என்பதையும்? உன் மூலமாகவே எம் இறைவன் எமக்கு அறிவுறுத்திவிட்டான். நீ இப்போது இறை அம்சமாகவே எமக்குத் தோற்றுவதால் **"நீயே குருவுக்கும் குரு"**!! என்றார் தம் அன்பின் பெருக்கால். அங்கு இரண்டும் சமமாயின!!

—×—×—×—×—×—×—×—

# 6. இறைபக்தி

ஓர் கிராமத்தில் ஜடிலன் என்ற சிறுவன் இருந்தான். அவன் தன் ஊருக்கு அடுத்துள்ள கிராமத்தில் சென்று படித்துவருவான். அந்த கிராமத்திற்கும் இந்த கிராமத்திற்கும் இடையே ஓர் காடு இருந்தது. இக்காட்டை கடந்துதான் அவ்வூர் பள்ளிக்கூடம் இருந்தது. போகும் குழந்தைகள் ஆணும் பெண்ணுமாக இருந்தாலும் ஐந்தாறு பேராக கூடிக் கூடித்தான் பள்ளி செல்வார்கள். தவிர எந்த குழந்தையும் அக்காட்டின் தனி வழி வந்ததில்லை; காரணம் அங்கு மிருக பயம் உண்டு. இந்த ஜடிலனும் அவ்வாறே தன்னையொத்த மாணவர்களுடன் சேர்ந்தே போவான். சில சமயம் இவன் வீட்டுப் பாடம் ஸ்கூலிலேயே எழுதிக்கொண்டிருந்தால் இவனை விட்டுவிட்டு வந்துவிடுவர் சக தோழர்கள். தனிவழியில் பயந்தே வருவான். இந்த மாணவர்கள் அனைவரும் புத்தகப் பையை தோளில் மாட்டிக்கொண்டு ஒருகையில் மதிய உணவுப் பாத்திரமும், மறுகையில் ஓர் கோலும் கொண்டு செல்வர். காரணம் மிருக பயத்திற்காக. இந்த ஜடிலனும் பலமுறை தனிவழி பயந்து பயந்து வந்திருக்கிறான்.

ஓர் நாள் தன் அன்னையிடம் அம்மா! சில சமயம் நான் தனியே வர வேண்டி இருக்கிறது. எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. நீ சாயங்காலம் உன் வேலையை சீக்கிரம் முடித்துவிட்டு என்னை பள்ளி வந்து கூப்பிட வாயேன் என்றான்? அவன் அன்னை சொன்னாள். குழந்தாய் ஜடிலா! எனக்கு சில வீடுகளில் செய்யும் வீட்டு வேலையே சரியாக இருக்கிறது. பின் இரவு சாப்பாட்டுக்கு உனக்கும் எனக்கும் பார்க்க வேண்டியிருக்கிறது. எனக்கும் வேறு ஓய்வு ஒழிவில்லை. என்னால் முடியாது. ஆனால் உனக்கொன்று சொல்கிறேன் கவனமாக கேள்.



உ (33)

அன்னை சொன்ன பொய் அனுபவத்தில் ஸத்யமாகி விடுகிறது!
அவள் சொன்ன பொய் இது தான்!

குழந்தே! ஜடிலா! உனக்கு ஓர் அண்ணன் உண்டு; அவன் பால்யத்திலேயே நீ பிறக்கும் முன்பே என்னுடன் இருக்கமாட்டேன் என சொல்லி விட்டு அக்காட்டிற்குள் ஓடி விட்டான்.

ஜடிலன்:— அவன் அக்கானகத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறான்?

தாய்:— அவன் அங்கு சில மாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்!

ஜடிலன்:— அவன் அங்கு சாப்பாட்டுக்கு என்ன செய்வான்?

தாய்:— காடுகளில் காய் கனிகள் நிறைய உண்டு அவைகளை தேவைக்கு சாப்பிட்டுக் கொள்வான்.

ஜடிலன்:— ஆமாம் அக்காட்டில் மிருகபயம் உண்டே? அவைகள் அவனை ஒன்றும் செய்து விடாதா?

தாய்:— அவன் காட்டிலேயே பழகி விட்டதால் அம்மிருகங்களும் அவனுடன் பழகிக் கொண்டன.

ஜடிலன்:— அவன் பெயர் என்ன அம்மா?

தாய்:— அவன் பெயர் **கண்ணன்**

ஜடிலன்:— அவன் எப்படி இருப்பான் அம்மா? என்னைப் போல் கருப்பாயிருப்பானா? அல்லது உன்னைப் போல் சிவப்பாக இருப்பானா?

தாய்:— குழந்தே ஜடிலா! அவன் உன்னை விட யானைக் கருப்பு!

ஜடிலன்:— ஐயே! இவ்வளவு தானா? என்னை மாதிரிக் கூட இருக்கமாட்டானா? அவன் அங்க அடையாளமென்ன?

தாய்:— உங் கண்ணன் கண்ணன் உன் உயரம் தான் இருப்பான் உன் உடம்பு தான் அவன் பருமனும். ஆனால் அவன் உன்னை விட வெகு வெகு அழகாயிருப்பான். சுருள் சுருளான கேசம், இடையில் ஓர் மஞ்சள் துணியை வேட்டியாக கட்டியிருப்பான். மேலே ஓர் பச்சை நிற துண்டைப் போட்டிருப்பான். ஓர் ஜரிகைத் துணியில் ஓர் மயில் இறகை மட்டும் பின்னித்து தம் தலையில் கேசம் கலையாவண்ணம் கட்டியிருப்பான். சந்தன கோபி நெற்றியில் அணிந்திருப்பான். சிறிய அளவில் ஜல்ஜல் ஜல் என ஒலிக்கும் ஓர் தண்டையும் அணிந்திருப்பான். கால்களில் இடக்கரத்தில் ஓர் ரட்சையின் காப்பும், வலக்கரத்தில் ஓர் பொன் காப்பும் அணிந்திருப்பான். அவன் இரு கைகளிலும் மாடு மேய்க்கும் கோல் ஒன்றும், ஓர் புல்லாங்குழல் ஒன்றும்





வைத்திருப்பான். அவன் கருவிழி வெகு வெகு அழகாக
உருண்டு உருண்டு சுழலும். அவன் வாய் செக்கச் செவே ரெ
ன்று சிவப்பாயிருக்கும். என் ஜடிலா அவன் மொத்தத்தில்

# கொள்ளை அழகு!!!

ஜடிலன்:- அம்மா! அண்டாங் கரும்பு என்கிறாய். ஆனால்
கொள்ளை அழகு என்கிறாய். நீ சொல்லும் எங்கண்ணன்
கண்ணனை அவசியம் பார்ப்பேன். அவனை சமாதானம்
படுத்தி நம் வீட்டிற்கு கூட்டி வந்து விடுவேன்
இது உறுதி என சபதம் செய்தான்.

மறுநாள் ஜடிலன் வழக்கம் போல பள்ளிக்கூடம் சென்றான். வேண்
டுமென்றே சற்று தாமதமாக வெளியே வந்தான், அக் காட்டினூர்
வரும் போதே பொழுது சாய்ந்து இருட்ட ஆரம்பித்து விட்டது.
சற்று தூரம் நடப்பதற்கு முன்பே இருட்டி விட்டது. உண்மையாகவே
பயந்து போனான். பாதையும் சரிவரத் தெரியவில்லை. இருப்பினும்
முன் நடை அனுபவத்தை வைத்தே மெதுவாக தட்டுத் தடுமாறி
நடந்தான். உண்மையாகவே பயம் கொண்டதால் சற்று அவரியே
அண்ணா, அண்ணா, என இரண்டு பயந்த நிலையில் அழைத்து
பார்த்தான். கண்ணனாகிய அண்ணன் வரவில்லை. சற்று ஓடத் தலைப்
பட்டான். ஆனால் கால்கள் பயந்ததால் பின்னின. தெய்வாதீனமாக
அருகில் ஓர் மிருகம் உறுமும் சப்தம் கேட்டது. அவ்வளவு தான்
பயந்ததால் அண்ணா கண்ணா, அண்ணா கண்ணா, அண்ணா கண்ணா!
என அலறிக் கத்தி அழைத்துப் பார்த்தான் அப்போதும் எம் இறை
வனாகிய கண்ணன் வரவில்லை!

ஓர் மிருகம் துரத்தி பின்னாலேயே வருவது போன்று
ஓர் உணர்வு உண்டாயிற்று. அவ்வளவு தான்
கால் வலியாக ஓட்டம் போக ஆரம்பித்தது பயந்ததால்!
ஓட முடியாத தன்மையினால் முதலில் தன் தோளில் மாட்டியிருந்த
அந்த நகப்பையை தூக்கி தூர எறிந்தான்.
மேலும் மரணபயம் கவ்வியதால் தன் சாப்பாட்டு பாத்திரத்தைத்
தூக்கி எறிந்தான்.
மேலும் மிருகபயம் வெகு அருகில் தோன்றியதால் கண்ணா, கண்ணா
கண்ணா என அலறியவண்ணம் ஓடினான் அப்போது அவன் கைகளில்
காவல் குச்சி இருந்தது. அந்த சமயத்திலும் கண்ணன் வரவில்லை.



2 

மேலும் முடிந்த முடிவான "**மரணபயம்**"! தோற்றும்போது
அக்காவல் குச்சியையும் தூக்கி தூர எறிந்தான்.

இங்கு ஜடிவனால் எதுவும் செய்ய இயலவில்லை.

இங்குதான் நம் மூதியோர் வாக்யம் முழுமையான உண்மையானது
"**தனிக்கவைப்பான்**", பின் "**தவிக்கவைப்பான்**"
முடிவில் "**ஒன்றும் இயலாத் தன்மையை கொடுப்பான்**"
பின் எங்குமாய் ஏகமாய் அவனே நிறைந்திருப்பான் என்ற ஸத்ய
வாக்குப்படி இங்கு ஜடிவனுக்கு அனுபவம் உண்மையாயிற்று!

இதை உணர வேண்டும்!

ஜடிவனது உடைமையாக புத்தகப்பை, தூக்கும் பாத்திரம்,
ஓர் பாதுகாப்புக்கோல். இம்மூன்றும் இருந்தது.

இவைகளை ஒவ்வொன்றாக பிடுங்கி எறிந்தான் எம் இறைவன்.
முதலில் உதவிக்கு எவரும் இல்லாது தனிக்க வைத்தான்!
இரண்டாவது எதுவும் உதவ முடியாத நிலையில் தவிக்க வைத்தான்!!
மூன்றாவது முடிந்த மரணபயத்தை உண்டுபண்ணி ஒன்றும் இயலாத்தன்மை
யைக் கொடுத்தான்!!!

அந்நிலையில் ஜடிவன் சரீரம் பிரக்ஞையற்று கீழே சாயும்
நேரம் கண்ணன் வந்து தம் அபய கரம் நீட்டி ஓர் கரத்தால்
சாய்ந்து விடாதபடி தாங்கிப்பிடித்தான். மற்றோர் கரத்தால்
தம் அபய கரத்தால் அவன் கரம் பற்றி.

"**யாமிருக்க பயம் ஏன்!!**" என்றான்
"**இதுவே எம் இறை கருணை!!!**"

இதற்கு நீங்கள் தயார் நிலையில் உள்ளீர்களா???
இத்தனை கஷ்டம் உங்களுக்குத் தேவையில்லை இது உறுதி!
அத்தனையும் உங்களுக்காகவே அனுபவித்த ஒருவன் துணை
இருப்பதால் அனைத்தும் சுகமாகவும் சுலபமாகவும் முடியும்.

**இறை காட்சி வேண்டாம்**/ அவன் உங்களுடனே இருக்கிறான்.
**இறை கருணை வேண்டும்!!** அது உங்களுக்கு கிடைத்துவிட்டது.





# 7. விதியை மதியால் வெல்லலாம்

விதியை நின் மதியால் வெல்லலாம். அதாவது விதிக்கப்பட்ட விதியை இறை கருணையால் வெல்லலாம். இந்த உண்மையை ஓர் உதாரணத்தால் விளக்குகிறேன்.

ஓர் கிராமத்தில் ஓர் விவசாயி இருந்தான். அவனுக்கு தெய்வாதீனமாக விவசாயத்தின் உழைப்பினால் கொஞ்சம் பணம் சேர்ந்தது. அந்த பணத்தை வைத்து ஓர் கைதொழில் செய்யலாம் என முடிவு பண்ணினான். அவன் இறைவனிடம் கெஞ்சி இவ்விதம் முறையிட்டான். இறைவா இப்போதுள்ள பணத்தை வைத்து ஓர் தொழில் தொடங்கப் போகிறேன். அதன் மூலதனம் நீயே! நஷ்டமோ லாபமோ அது உனக்கே அர்ப்பணம். ஆகையால் என் ஜாதகத்தை முதலில் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி ஓர் ஜாதக பண்டிதரைத் தேடி அடுத்த கிராமத்திற்குப் போனான். இக் கிராமத்திற்கும் அக்கிராமத்திற்கும் இடையே ஓர் கரும் வனம் இருந்தது. இவன் புறப்பட்ட நேரம் மாலை 3 மணி. ஜோசியர் வீடு சேரும் போது 5 மணி ஆகி விட்டது. தெய்வாதீனமாக ஜோஸ்யர் வீட்டில் இருந்தார். அவர் ஜாதகத்தை வாங்கி பிரித்துப் பார்த்தார். ஓர் 5 நிமிடம் கூட பார்த்திருக்க மாட்டார், அந்த ஓலைச் சுவடியை அப்படியே கட்டி விட்டார்.

ஜோஸ்யர் சொன்னதாவது; ஐயா இன்று பொழுது போய் விட்டது. ஆகவே நாளை காலையில் வாருங்கள் பார்ப்போம் எனச் சொல்லி ஜாதகத்தை தாம் வைத்துக் கொண்டே அவரை அனுப்பி விட்டார். அவனும் நேரம் இன்று சரியில்லை நாளை காலையில் வரலாம் என எண்ணி ஜோஸ்யரை ஓர் நமஸ்காரம் மட்டும் செய்து விட்டு தம் கிராமத்திற்கு புறப்பட்டுப் போனார். இந்த ஜோஸியர் அந்த ஜாதகத்தை பார்க்காத காரணம், அந்த ஜாதகர் இன்று நள் இரவு 12 மணிக்கு சர்ப்பம் தீண்டி மரணம் எய்துவான் என இருந்தது தான் காரணம். நாளை இவர் இருக்க மாட்டார். அப்படி யாரும் தொழிலைப் பற்றி பேசி என்ன பிரயோஜனம் எனக் கருதியே அவரை வீட்டிற்கு அனுப்பி விட்டார் அந்த ஜோஸ்யர். இந்த ஜாதகரும் இறைவன் கருணை எப்படி இருக்கிறதோ அப்படி முடியட்டும் என எண்ணி இறைவன் மேல் பாரத்தை போட்டு விட்டு சென்றார். அக்காட்டின் ஆரம்பத்திலேயே கனத்த மழை பிடித்துக் கொண்டது.



உ



சிறிது தூரம் கூட சென்றிருக்கமாட்டார். மழையும் காற்றும் அதி உக்ரமாக அடிக்கத் தொடங்கி விட்டது. காற்றின் வேகத்தால் மரக்கிளைகள் முறிந்து விழுகின்றன. ஒவ்வொரு மரமாக நின்று நின்று பார்த்தார் காற்று மழை வேகத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் இறைவா ஓர் வழியை காட்டு! என வேண்டினார். இவர் உருக்கத்திற்கு இறைவன் செவிசாய்த்தான் போலும்? பளிச் பளிச்சென்று மின்னும் மின்னலில் அங்கு ஓர் பாழ் அடைந்து போன சிவன் கோயிலை கண்டார். ஓடோடிச் சென்று அக்கோயிலின் முன் மண்டபத்தின் கீழ் போய் நின்று கொண்டார். ஓரளவு அமைதி அடைந்தார். மழை நின்றபாடில்லை. காற்றின் உக்ரமும் தணிந்தபாடில்லை. மின்னல் மின்னும் வேகத்தில் அக்கோயில் முழுவதும் நன்கு தெரிந்தது. உள்ளே கர்ப்பக் கிருஹத்தில் ஆனந்தமாக சிவபெருமான் லிங்க வடிவில் காட்சி கொடுக்கிறார். அங்கு பூஜை நடந்தே பலகாலம் இருக்கும் போல் தெரிகிறது. இந்த விவசாயி அந்த கோயிலை மின்னல் வெளிச்சத்தில் ஓர் நோட்டம் விட்டார். அப்படியே தம் தெய்வீக கற்பனையையும் ஓடவிட்டார்.

அவர் கற்பனை யாவது?

இறைவா! உன் ஆலயம் இப்படி சீர்கெட்டு சிதைந்து போயிருக்கிறதே. இதை கவனிப்பார் யாரும் இல்லையா? எம்பிரபோ! நான் நாளை துவங்கும் தொழிலில் உன் கருணையால் கிடைக்கும் வருமானம் அனைத்தும் உன் ஆலய திருப்பணிக்கே! உன் ஆலய திருப்பணி முடிந்த பிறகு எனக்கு எப்படி விதித்திருக்கிறதோ அது அப்படி நடக்கட்டும். என முதலில் உறுதி செய்தான்.

பின் உன் கருவறையை சாலிக்கிராம கற்களால் அமைப்பேன். மூன்று பிரகாரம் முறையோடு செய்வேன்.
அர்த்தமண்டபம் இப்படி இந்த இடத்தில் அமைப்பேன்.
நூறுகால் மண்டபம் இந்த இடத்தில் அழகாக அமைப்பேன்.
இந்த இடத்தில் தீர்த்தக்கிணறு அழகாக அமைப்பேன்.
மூன்று பிரகாரத்திலும் சலவைக்கல் அழகாக பதிக்கச் செய்வேன்.
ஆலய முன்பு ஓர் மாபெரும் தெப்பக்குளம் ஒன்று உருவாக்குவேன்.
ஐந்து வாசல் உள்ள ஓர் கோபுரம் சிற்ப வேலைப்பாடுகளுடன் சிறந்த முறையில் அமைப்பேன்.



உ

(38)

## "இந்தவிதமாக தெய்வீக கற்பனையால்"

நிறைந்திருந்தான் அந்த விவசாயி. சுமார் இரவு 12 இருக்கலாம்
ஓர் இடியும் மின்னலும் இணைந்த சப்தத்தில் அந்த கானகமே அதிர்
ந்தது; இவன் நின்று கொண்டிருந்த மண்டபமும் பாழ் அடைந்
திருந்ததால் ஓர்புறம் இடிந்து விழுந்தது. தெய்வாதீனமாக
இவன் மேல் எதுவும் படவில்லை. ஆனால் இடிந்த காரையிலிருந்து
ஓர் பருமனான கல்லானது இவன் பாதம் வரை உருண்டு வந்து,
இவன் பாதத்தில் படாவண்ணம் உராய்ந்த நிலையில் கிடந்தது.
ஆனாலும் அந்த கலவர நிலையிலும் தன் த்யான கற்பனையை
விடாமல் செய்து கொண்டிருந்தான்.

இரவு படுக்கவும் நேரமும் இல்லை; இடமும் இல்லை;
தூக்கம் வரவும் இல்லை. மறுநாள் காலைமணி 5-30 ஆகிவிட்டது
கிழக்கும் வெளுத்து விட்டது. விவசாயி எண்ணினான்; இனி ஊர்
போய் எப்போது ஜோஸ்யரை காணவருவது? இப்படியே போய்
ஜோஸ்யரைப் பார்த்து விட்டு நேரேயடியாக ஊருக்குப்
போய்விடலாம் என எண்ணியவனாய் ஜோஸ்யர் வீட்டுக்கு
நடந்தான். காலைமணி 6 ஆகிவிட்டது. ஜோஸ்யரும் தூங்கி
விழித்து முகம் அலம்பிக் கொண்டு சூர்ய நமஸ்காரம் செய்
வதற்காக வீட்டு வாசலுக்கு வரவும், இந்த விவசாயி அவ
ரை சந்திக்கவும் நேரம் சரியாக இருந்தது.

ஜோஸ்யர் விவசாயியைக் கண்டதும் உடனே
திடுக்கிட்டு முதலில் பின் வாங்கினார்; பிறகு அவன் கால்களைப்
பார்த்தார்; அது பூமியில் நன்கு பதிந்திருந்தது. தன்னை
கைகளால் ஓர் முறை கிள்ளி விட்டுப் பார்த்தார். தான் காண்பது
கனவு இல்லை யென ஒருவாறு தெரிந்து தெளிந்து கொண்டார்.
என்ன ஐயா! இப்படிப் பார்க்கிறீர்கள்? ஓர் பேயைப் பார்ப்பது
போல் மிரண்டு மிரண்டு பார்க்கிறீர்களே ஏன் என்றான் விவசாயி.
நான் காண்பது கனவில்லையே? நிஜமாகவே என் முன் நிற்கிறாயா
என்றார் ஜோஸ்யர். ஏனய்யா என்ன காரணம் என்று கேட்டான் விவசா
யி; உடனே ஜாதகபலனை அவனிடம் சொல்லி நீ நேற்று இரவே
இறந்திருக்க வேண்டியவன் இப்போது எப்படி உயிருடன் இருக்
கிறாய் என்று தான் தெரியவில்லை? அது சரி இரவு எங்கிருந்தாய்?





உ

என்ன செய்து கொண்டிருந்தாய் என கேட்க; அவன் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் ஆதியோடந்தமாக சொல்லி முடித்தான். விவசாயி. சரி வா. அந்த இடம் வரை சென்று வரலாம் என்று விவசாயியையும் அழைத்து வந்து அந்த கோயில் அருகே அவன் நின்றிருந்த மண்டபத்தையும் நோக்கும் போது, அவன் காலடியில் உருண்டு விழுந்த கல்லினிடையே ஓர் நல்ல பாம்பு நசுங்கி இறந்து கிடக்க இருவரும் கண்டனர்.

எம் அன்புக் குழந்தைகளே! இக்கதையிலிருந்து நீங்கள் என்ன உணர்கிறீர்கள் என்றால்? விதி வலிதாகவும், கொடுமையாகவும், கடுமையாகவும், மரணம் சம்பவிக்கும் நிலையில் இருந்தாலும்?

**இறைசிந்தனை, இறைகற்பனையோடு; இறைஎண்ணத்தோடு!!!** இருக்க நாம் பழகிக் கொண்டோமானால் நம் விதியை சற்று மாற்றவோ! சற்று விலக்கி நிறுத்தவோ!

**வேறொரு கர்மாவில் அதை இணைக்கவோ பர இறைவன் கருணை உண்டு.**

இதைபடித்தவுடன் உங்களுக்கு சில சந்தேகம் எழலாம்? அதாவது ஓர் பக்தனுடைய காலில் உண்டான வலியை ஓர் காலில் இருந்து மற்றொரு காலுக்கு மாற்றி அமைத்த இறைவனுக்கு அதிகாரம் இல்லை! என்றும் இதைப் போல பல கதைகளைச் சொல்லி விதியை மாற்ற இறைவனுக்கும் அதிகாரம் இல்லையென்றும் சொன்னது நினைவிருக்கலாம்? இதைப் படித்தவுடன் சற்று குழப்பமாக இருக்கலாம். சற்று நிதானமாக செயல்படுங்கள்!

முன்பு ஓர் பாடத்தில் பரகருணையால் விதியை வெல்லலாம்! என்று கொடுத்ததை முழுமையாக உணர்ந்து அனுபவித்தீர்கள். இப்போது தான் இதை உணர்ந்தும் பக்குவம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என யாம் உணர்கிறோம்.



உ

(40)

குழந்தைகளே! ஓர் ஸத்யவாசகம்

**இறைவன் என்றால் கருணை, கருணை என்றால் இறைவன்.**

இது பிரமாண உண்மையாகும். இதைப்போலவே,

**இறை கருணை என்றும், பர கருணை என்றும்**

இரண்டுண்டு என இனி உணர்வீர்களாக!

இறை கருணை:— முறைப்படி வேதம் ஓதி சாஸ்திரம் கற்று இறைவனுக்கு ஏதேனும் ஓர் நாமரூபத்தை கொடுத்து, அந்த சகுணமூர்த்தியை தியானம் செய்து, அந்த நாம ஜபத்தினாலோ, பஜனைகளினாலோ, பக்தி ஆராதனைகளினாலோ நாம் பெறுவது இறை கருணையாகும்.

பர கருணை:— கடவுளே என்றும், இறைவா என்றும், தெய்வமே என்றும், ஆண்டவா என்றும், இன்னமும் பலவிதமாக,

**ரூபம் இல்லாமல் நாமத்தை மட்டும்!!**

கொடுக்கும் பக்தரோ பாமரரோ அவனையும் ரக்ஷித்தாக வேண்டுமே என்ற கருணையால் இறங்கி வருவது பர கருணையாகும்.

இறை கருணையால் விளையாகிய விதியை மாற்ற முடியாது!

பர கருணையால் விளையாகிய விதியை மாற்ற முடியும்!! ஆனால்

**"அழிக்க முடியாது!"**

சிவனே, முருகா, கண்ணா, விநயகா, ராமா என இன்னமும் விதவிதமான நாமரூபத்தோடு கூடிய இறைவன் மேலும் நாம் பெறுவது இறை கருணையாகும்.

இதில் லிங்க சொரூபம் ஒன்று மட்டும்

**"ரூபம் இல்லாதது நாமத்தோடு"** கூடியது!

இதைப்போல ஓம் நம சிவாய, ஓம் சிவாய நம, ஓம் நமோ நாராயணாய, ஓம் சரவணபவா என்று சொன்னாலும் வெறுமனே ஸ்மரணை செய்தால் அது பர கருணை சம்பந்தமாகும்!

மேலே கூறிய நாமாக்களை மந்திரமாகவும் உச்சரிக்கும் போது அதற்குரிய நாமரூபத்தையும் எண்ணி ஸ்மரணை செய்தால் அது இறைகருணையாகும்!



உ



குழந்தைகளே!

வினையென்பதும், விதியென்பதும் ஒரேபொருள்; ஆனால் நிகழ்ச்சிகளில் சற்று மாறுபடும். எப்படியென்றால் வினையென்பது ஓர் நிகழ்ச்சியாகும்; விதியென்பது அதை நடத்தும் முறையாகும்.

உதாரணம் :— ஒருவன் காலில் ஓர் அடிபட்டு ரணமாகும் வினை இருந்தால், அதாவது அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு இடம், காலம், பொருள் ஆகிய இம்மூன்றையும் ஓர் நாடக பாணியில் அமைத்துக்கொடுப்பது விதியாகும். இந்த விதி இல்லாமல் அந்த வினை நடைபெறாது!

இனி கதைக்கு வருவோம் :— பொதுவாகவே ஸத்தான தெய்வீக கற்பனை செய்தால் அது நல்ல பலனைத் தரும் என்பது தெளிவாகிறது. நம் விவசாயியும் சற்று தெய்வபலம் உள்ளவன் தான். ஆகவே அப்பாம்பு அடைந்த நோயில் தெய்வாதீனமாக விதியசத்தால் கண்டான். மரணவிதி பலம் இருந்தாலும் பரசொரூப தெய்வ ஸத்தான ஸத் கற்பனை பலத்தால் அவ்விதி சற்று மாற்றி அமைக்கப்பட்டு விட்டன. அவ்விதி மாற்றி அமைக்கப்பட்டதே தவிர விதியை விலக்க வில்லை. அவ்விதி அந்த நேரம் அவனை விட்டு விட்டது. பின் இவன் ஓர் தொழிலை தன் மகன் பேரில் ஆரம்பித்தான். அவன் அத்தொழிலை கவனித்துக் கொண்டான். பின் ஒருநாள் தன் மாட்டுக்கு புல் அறுக்க காட்டிற்கு சென்றான். அங்கு இவன் முந்தைய விதி இங்கு இவனை முடித்துவிட்டது. அங்கு ஓர் சர்ப்பம் தீண்டி இந்த விவசாயி மரணம் அடைந்தான்.

தெய்வ பலத்தை விட தெய்வ நாமபலம் அதிக சக்தி வாய்ந்தது என மஹான்கள் சொல்லக் கேள்வி. கண்ண பரமாத்மாவே ஓர் இடத்தில் சொல்கிறான். கண்ணனும் தாருகன் என்ற சாரதியும் ஓர் அசுரனிடம் கடும் போர் செய்து கொண்டிருக்கும் சமயம் துச்சாதனால் பாஞ்சாலி கௌரவ சபையில் துயில் உரியப்படுகிறாள். அதுசமயம் பாஞ்சாலி ஆபத்பாந்தவா, அநாதரக்ஷகா, தீனபந்துவே, தீனதயளூ, தீனரட்சகா என கதறி அழைத்து மானம் காக்க பிரார்த்தித்தாள். அங்கு கண்ணன் வரவில்லை, மானம் காக்கப்படவில்லை.



2

(42)

இப்படி கூக்குரல் இடும் போதெல்லாம் அப்பாஞ்சாலி
"தன்மான முயற்சியில்!!
ஈடுபட்டிருந்தாள். அதாவது ஒரு கரத்தால் தன் துகிலை கட்டி
யாக பற்றிக் கொண்டு ஒரு கரத்தை ஆகாயத்தில் தூக்கி அசை
ந்த வண்ணம் தான் கதறினள், கத்தினள், அழுதாள், அவலம்பினள்.
இங்கும் அவள் கணவர்மார்களை விட்டுப்பிரித்து "தனிக்க வைத்தான்"
சபையோரும் கணவன்மார்களும் இயலாத் தன்மையினால் அச்
சபையில் "தவிக்க வைத்தான்"! தன் சுயபலமும் முடியாத் தன்
மையை உண்டு பண்ணி "இயலாத்தன்மையை கொடுத்தான்"
அனைத்தும் பாஞ்சாலியை விட்டு நீங்கியது!
"ஹே ஹிருதய வாஸி" என ஓர் குரல் மட்டும் கொடுத்தாள்.
இரண்டு கரமும் மேலே தூக்கப்பட்டது. பின் அந்த ஒலியும் சிறுகச்
சிறுக ஓய்ந்து அவளுள் அடங்கி விட்டது!
"கண்ணன் வெளியில் இருக்கிறான்!
"சாந்தம் (உண்மை) அவளுள் இருக்கிறது!!
அவள் ரட்சிக்கப்பட்டாள். கண்ணன் சொல்கிறான்:—
அப்பாஞ்சாலியை யாம் காப்பாற்றவில்லை. எம் நாமா
(பரகருணை) காப்பாற்றியதாக சொல்கிறான்.
இறை கருணை என்றால் நாமரூபம்!
பரகருணை என்றால் நாமா மட்டும்!!
இவை எப்படி நிறைவேறும் என்றால்
"உலக இனிமையை விட்டாலன்றி!
இவை சாத்தியமாகா! ஓர் நாணயத்தின் இருபக்கம் இன்பம்
துன்பம். அதாவது புண்ணியபாபம்; இதையே சுகம் என
அனுபவிக்கும் ஜீவர்களுக்குத் தேவை தான்; உங்களுக்கு
தேவை இல்லை. கோடானுகோடி ஜன்மா எடுத்து எடுத்து
அனுபவித்துவிட்டீர்களே போதாதா? உங்களால் முடியும்
முடித்துவிட்டோம்.





உ

# 8. மஹாதபஸ்.

**ஸ்ரீராமன்**, தம்பி லக்ஷ்மணன், வித்தைக் குரு விஸ்வாமித்திரர், ஆகிய மூவரும் வேள்வியை அழித்த தாடகை, சுபாகுவையும் மற்றும் சில அரக்கர்களையும் அழித்துவிட்டு மிதிலையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். வழியில் கௌதமர் ஆஸ்ரமம் இருக்கிறது. அதை நோக்கி ராமனையும் லக்ஷ்மணனையும் அழைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார் விஸ்வாமித்திரர்.

கௌதமரையும் அகல்யையும் பற்றி சற்று தெரிந்து கொள்ளுங்கள்!

**கௌ**தமர் மஹா தபஸ்வி. அவர் தர்மபத்தினி தான் **அ**கல்யை.

"ராமா" என்பது நாமா, "ராம்" என்பது மந்திரம்.

இந்த சம்பவம் நடந்த காலம் திரேதா யுக காலம்.

முந்தைய ஸ்ரீமஹான்கள் அனைவரும் வரும் காலம் எப்படி இருக்கும், அச்சமயம் இறைவன் அவதாரம் எப்படி அமையும், இறைவன் அவதார காலங்களில் யார் யார் எல்லாம் எப்படி தொழில் ஆற்றுவர் என்று பூர்வ விருத்தாந்தம் தெரிந்தவர்களாக இருந்தார்கள். பல ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீ ராமனாக பகவான் அவதரிக்கப் போகிறார் என்ற விஷயம் நம் கௌதமர் உட்பட அனேகருக்குத் தெரியும். ஆகவே இது விஷயம் பற்றி நம் கௌதமர் தம் பத்தினி அகல்யையிடம் விளக்கமாக விளக்கி சொன்னார். அதுசமயம் நாம் எல்லாம் இருக்க மாட்டோம் எனவும் சொன்னார். ராமனைப்பற்றியும், அவன் அழகைப்பற்றியும், அவன் ஆற்றலைப் பற்றியும், ஸத்யம் பேசி தர்மத்தை ஸ்தாபித்து, ஒருவில், ஒரு சொல், ஒரு இல் (வாள்) என்பது பற்றியும் விளக்கமாக விரித்துரைத்தார் கௌதமர்.

முடிவில் அகல்யை தம் ஸ்ரீபதியின் திருவடிகளில் பணிந்து எழுந்து "ஹே பதி பரமேஸ்வரா" அடியாளுக்கு ஓர் வரம் வேண்டுமென கனிந்து பணிந்து கேட்டாள்.

முனிவர்:- சிரித்துக் கொண்டே பெண்ணே! நம் திருமணம் முடிந்தே பற்பல ஆயிரம் வருஷங்கள் ஓடி விட்டது. இதுகால பரியந்தம் "உனக்கென இது வேண்டும்" என இதுவரை கேட்டதே இல்லை. இன்றுதான் உன் பவள வாய் திறந்து இந்த வரம் வேண்டுமென கேட்கிறாய். இறைவன் கிருபையினால் அவசியம் தருவோம்.



உ



பத்தினி:— ஹே பிராண நாதா! நாம் இன்னும் சிலகாலம் தான் இருப்போம் எனத் தோற்றுகிறது. ஆனால் அடியாள் தாங்கள் திருமையினாலும், வரப்பிரசாதத்தினாலும் ஸ்ரீ ராமாவதார காலம் வரை இருந்து,

"**ஸ்ரீ ராம தர்ஸனம்**"!! செய்தபிறகே மோட்சம் பெறவேண்டும். ஸ்ரீ ராம தர்ஸனம் பெறும் முன்பு மோட்சம் வேண்டாம். இந்த வரம் தாங்கள் இந்த அடியாளுக்குத் தந்தருள வேண்டும்.

முனிவர்:— ஹே பேதைப்பெண்ணே! உன் ஆசை மாபெரும் பாக்யம். அது சாமான்யமாக கிடைக்காதே எனத்தான் சற்று யோசிக்கிறேன்.

பத்தினி:— ஹே பிரபோ! யோசிக்க நேரம் இல்லை. அந்த ஸ்ரீராமனை தரிசிக்க அடியாள் என்ன செய்ய வேண்டும்? அதை மட்டும் கூறுங்கள். அதை நடப்பிக்க வேண்டிய வரமும் தாருங்கள். உங்களால் முடியாத தொன்றுமில்லை. எம்மை இந்த வேளையில் கைவிட்டுவிடாதீர் என அவர் திருவடியைப் பற்றிக்கொண்டு விக்கிவிக்கி அழுது அவர் பாதங்களை தம் கண்ணீரால் கழுவினாள் அந்த தர்ம பத்தினி!

முனிவர்:— பெண்ணே! ஸ்ரீ ராம தர்ஸனம் அத்தனை எளிதல்ல. ஒவ்வொரு சதுர்யுகத்திலும் ஸ்ரீ ராம ஜனனம் உண்டு. மற்ற எந்த மூர்த்திகளாலும் "<u>நம்முடைய கற்பனையை உருதியாக்கினால்</u>" அவஸ்யம் மனக்கண்ணால் காணமுடியும். அதேபோல் திரிகர்த்தாக்களையும் இறை தருணையால் பெற்ற "**தபோபலத்தால்**"/ <u>சூட்சுமஸ்வரூபத்தை</u> நம் தவக்கண்களால் அதிசிரமப்பட்டு தரிசிக்க முடியும். விநாயகன், முருகன், அம்பாள் இவர்களை கூட உபாசனையால், பஜனையால், மனோ உருக்கத்தால் ஒரளவு முறைமைய கண்ணால் சூட்சுமரூபத்தை தவஸ்வரூபமாக <u>ஜோதிவடிவில்</u>" தரிசிக்கலாம். இங்குமனே உறுதியினால் அறிவு முகமாக தரிசிக்க வாய்ப்புண்டு ஆனால்???





ஸ்ரீ ராமாவதாரத்தையும், ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தையும்
சாமான்யர்களால் தரிசிக்க முடியாது. காரணம்;

# ஸ்ரீ ராமாவதாரம் பூர்ணாவதாரம்!
# ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் பரிபூர்ணாவதாரம்!!

ஆனால் இங்கு இந்த இரண்டும் நிலைமாறி காட்சிக்கு வரும்.
அதாவது கிருஷ்ண ஸ்வரூபம் ஆழ்ந்த, கரைந்த, உருகிய
"**பக்திக்கு கட்டுப்படும்!**"
ஸ்ரீ ராமஸ்வரூபம் அபேத திருஷ்டிக்குத் தான் கட்டுப்படும்!
ஆனால் இது பூரண ஞானமாகாது! பூரணத்தின் அஸ்திவாரம்.
காரணம்!

இப்பூவுலகில் "அவதார புருஷர்களைத் தவிர"
அவதார சொரூபங்களும் (தேவ தெய்வங்களும்) பக்தர்களும்,
சித்தர்களும், யோகிகளும், ராஜரிஷிகளும், மஹா முனிவர்களும்,
ஸத்யத்தையும் தர்மத்தையும் காப்பாற்றி நீதியை நிலை நாட்டிய
அரசர்களும் "என் ராமனைப் போல்",

# "வரவும் இல்லை! வாழவும் இல்லை!!"
# "பிரகாசிக்கவும் இல்லை"!!!

ஸ்ரீ ராமாவதாரத்தை யோனி சம்பந்தம் எனவும் சொல்லலாம்!
ஸ்ரீ ராமாவதாரத்தை அயோனி சம்பந்தம் எனவும் சொல்லலாம்!
அதாவது!

பக்தி நிலையில் யோனி சம்பந்தமாகவும்; ஞான நிலையில் அயோனி சம்பந்தமாகவும் சொல்லலாம்! காரணம், பக்தி எனயாம் சொன்னது மனதின் கூர்ந்த திருஷ்டிக்கு உட்பட்டது. ஞானம் எனயாம் சொன்னது அறிவின் ஸ்திர தன்மைக்கு உட்பட்டது. அதாவது மனோமய கற்பனையின் அசைக்க முடியாத நம்பிக்கை. (உறுதி) நம் அறிவினால் "அது தான் அது" என்ற அகண்டாகார விருத்தியில் இரண்டற்ற ஒன்றுபட்ட தன்மை!



உ



ஆகவே எம் பெண் பாவாய் ஸ்ரீ ராம தர்ஸனம் அத்தனை
எளிதல்ல பல ஆயிரம் வருஷம் கடும் தபஸ் செய்ய வேண்
டும். உன் தபஸினால் புற்று மூடினாலும், புதர் மண்டி அடர்ந்
தாலும், அவை காலத்தின் கோலத்தால் அழிக்கப்படும்.
ஆனாலும் உன்னைப் பெண் என்றும் தபஸுக்கு உரியவள் அல்ல
என்றும் யாம் சொல்லமாட்டோம். ஆனால் உன் உறுதியில்
எக்காலும்

## "அசையாத அசைக்காத கருங் கல்லாக"!

இருக்க வேண்டும்
"முடிவைச் சொல்; அருள் யாம் தருகிறோம்"!

பத்தினி:- ஹே பரமேஸ்வரா! "அவன் அருளால் அவன்
தாள் வணங்கி" என்றபடி உங்கள் அருளால்
அனைத்தும் நடைபெறும். உங்கள் கிருபையால் யாம்
பெரும் பாக்யசாலியாவோம். தாங்கள் சித்தப்படி
யே எம்மை அவ்விதம் ஆக்குக என்றாள்.

குழந்தைகளே!
எம் கௌதமரும் அவள் தர்மபத்தினி
யை ஓர் கருங்கல்லாக மாறும்படி "வரம் தந்தார்"!
(சபிக்கவில்லை) அந்த தர்மபத்தினியும் ஓர் கல் வடிவத்தில்
இருந்து கொண்டே "ராம நாமாவை" ஜபிக்கத் தொடங்கினாள்.
பல ஆயிரம் வருஷங்கள் உருண்டோடின. ஸ்ரீ பகவானும்
ஸ்ரீ ராமாவதாரம் எடுத்தான்; பால்யத்திலேயே ஸ்ரீ மாதா பிதா
சேவையும், ஸ்ரீ வஸிஷ்டரிடத்தில் குரு சேவையும், வித்தைக்
குரு விஸ்வாமித்திரரிடமும் சேவையும் செய்து அனைத்து சக்
திகளையும் தமக்குள் அடக்கிக் கொண்டு

## "ஆத்மஸ்வரூபமாய்" விஸ்வாமித்திரர் முன்

செல்ல, தம்பி லக்ஷ்மணன் பின்னால் வர, தாம் நடுவில்
அமைதியின் ஆனந்தமாக மிதிலையை நோக்கி வந்து கொண்
டிருக்கிறான். வழியில் கௌதமர் ஆஸ்ரமம் வருகிறது.
இதன் குறிப்புகளை உணர்ந்த விஸ்வாமித்திரர் தவக்கோல
மாக இருக்கும் அக்கல்லை நோக்கி ஸ்ரீ ராமனை அழைத்து
வருகிறார் தவசிரேஷ்டர் விஸ்வாமித்திரர்.



2 (47)

சற்றுதூரத்திலேயே எம் ராமன் அக்கல்லைக்
கண்டான். சற்று அசையாமல் நின்றான், கூர்ந்து நோக்கினான்.
ராமன் உடம்பு சிலிர்த்தது; புளகாங்கித ஆனந்தம் கொண்
டான், தம் காண்டீபத்தையும் அம்புறாத்தூணியும் தம் தம்பி
லக்ஷ்மணன் கரங்களில் கொடுத்தான். அப்படியே அந்த
தவ சிரேஷ்டக் கல்லை நோக்கி சாஷ்டாங்க தண்டனிட்டான்
எம் ராமன். முன்னே சென்ற விஸ்வாமித்திரர் ராமனின் ஒவ்
வொரு செயல்களையும் கூர்ந்து நோக்குகிறார். தம்பி லக்ஷ்ம
ணன் திகைக்கிறான் அண்ணன் செய்கையைக் கண்டு!

எம் ஸ்ரீ ராமன் வலது கையை தம் நெஞ்சில் வைத்து
ஓர் கணம் கண்ணை மூடினான். வலது காலால் பூமியில் மண் சித
றும்படி வேகமாக ஓர் தட்டு தட்டினான். ராமன் கால்பட்டு சித
றிய துகள் அதாவது "**ஸ்ரீபாததூளி**" அந்த
உத்தமியின் தவக்கல்லின் மீது வேகமாக பட்டது தான் தாமதம்
அப்பத்தினி பெண்ணாகிய அகலிகை புதுப்பொலிவுடன்
மண்டியிட்டு வணங்கிய நிலையில் இருக்கிறாள். எம் ஸ்ரீ ராமனே
மீண்டும் ஓர் முறை அந்த தபஸ்வியை அகலிகையை நோக்கி
சாஷ்டாங்கமாக தண்டனிட்டு வணங்கினான். விஸ்வாமித்
திரருக்கோ ஒரே ஆச்சர்யமாக இருந்தது.

எம் குழந்தைகளே!

விஸ்வாமித்திரர் கேட்கிறார்.
ஏ கௌசல்ய புதல்வா! இது என்ன விநோதம்? இந்த மாத
ரசி கல்லாக இருக்கும் போதும் விழுந்து நமஸ்கரித்தாய்
ஸ்வயரூபம் பெற்ற பிறகும் நமஸ்கரித்தாய் இதன் காரணம்
என்ன? உன்னால் ஸ்ரீ ராம தரிஸனத்தால் ஜன்ம சாபல்யமாகி
உன்னை வணங்கி ஆசிர்வாதம் பெற இருக்க நீ அவளிடம் ஆசிர்
வாதம் பெற்ற நிலை என்ன? மேலும் அவள் உன் பாதஸ்பரி
சம் பட்டு தான் சுயரூபமாய் எழ விதியிருக்க உன் பாத
தூளிபட்டு அவள் சுயரூபம் வரக் காரணம் என்ன? இந்த மூன்று
கேள்விகளும் எமக்குள் எழுகின்றன. இதற்கு ஏதாவது காரணம்
இருக்கும் இல்லாமல் நீ இவ்வாறு செய்யமாட்டாய். மேலும்
நீ பரமாத்ம சொரூபம் உன்னை வழிபடத்தான் இங்கு அனைவரும் காத்
திருக்கின்றனர். ஆனால் அதற்கு மாறாக இக்காரியம் நடைபெற காரணம்
என்ன?

## அருளுரை



உ

(48)

விஸ்வாமித்திரர் நான்கு கேள்விகளுக்கும் ராமன் தரும் விளக்கம்

1. ஹே மஹானுபாவா! தவசிரேஷ்டரே!
இத்தவ சிரோன்மணி
கௌதமரின் தர்மபத்தினியாகும். இந்த
**"புனித ராம தரிசனத்தை"!**
பெற வேண்டி பல ஆயிரம் வருஷம் ஸ்ரீ ராம நாம ஜபத்துடன் ஓர் கல் சொரூபத்தில் தவஸ் செய்த மாதரசி எனும் முதல் வணக்கம் செலுத்தினேன்.

2. யாம் கல்லாகக் கண்ட தபோதனி ஸ்வரூபம் பெற்று எம்மை ஓர் தருவியாக்கி அவர் காரணஸ்வரூபமாக எழுந்ததில் கண்டு இரண்டாவது வணக்கம் செலுத்தினேன்.

3. யாம் இந்த அவதாரத்தில் "பூரணமாக" இருப்பதால் இதில் காமம் கலந்திடவாகாது. யாம் "ஏக பத்தினி விரதன்" ஆகவே ஓர் பெண் சொரூபத்தை "காவால் தீண்டினாலும்" அந்த பெண்ணை தொட்டதாகத் தானே அர்த்தம். ஆகவே நான் எம் பாததூளியைக் கொடுத்து எம் தரிசனார்த்தத்திற்காக அவளை ஸ்வரூபம் பெறச் செய்தோம்.

4. மேலும் இந்த அவதாரம் "மனுஷ்ய ஜன்மா"; யாம் தேவ தெய்வங்களோடு சேரமாட்டோம். ஆகவே யாம்

**"வணங்குதற்குரியவனேயன்றி"!**
**"வணக்கத்திற்குரியவனன்று"!!**

எம் அடுத்த அவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ணவதாரம் "பரிபூரணவதாரம்" அதில் அவரின் வணக்கத்தையும் யாம் ஏற்றுக் கொள்வோம்.

மேலும் ஸ்ரீராமன் சொல்வதாவது!

குழந்தைகளே!
ஸ்ரீமத் பாகவதத்தில் இறைவன் அவதாரம் நிறைய சொல்லப்படுகிறது. வேதவியாசர் அம்சமாகிய ஸ்ரீ ஜயதேவஸ்வாமிகள் பாகவதத்தில் இறைவனுக்கு 10 அவதாரங்கள் எனச் சொல்கிறார். அவைகளாவன
மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ஸ்ரீராம, கிருஷ்ண, புத்த, கல்கி என 10 ஆகும். அவைகளில் புத்தாவதாரம் வேறொரு மதம் சம்பந்தம் கொண்டதால் அந்த புத்தாவதாரத்தைத் தள்ளி, கிருஷ்ணவதார





காலத்தில், கிருஷ்ணனின் அண்ணனாகிய ஆதிசேஷ அம்சமாகிய பலராமனை சேர்த்துக்கொள்கிறார்கள் இன்றைய பெரியோராகிய மேதாவிகள். அது பொருந்தாது, காரணம் ஏககாலத்தில் இரண்டு அவதாரம் இருந்திருக்கமுடியாது. இணைக் கூடாது, இது பிரமாண உண்மை. மேலும் ஸ்ரீபகவானின் அவதாரங்களில் எட்டு அவதாரங்களுடன் பூர்த்தி ஆகிவிடுகின்றன. மச்ச அவதாரத்தில் ஆரம்பமாகி கிருஷ்ணாவதாரத்துடன் முடிந்து விட்டதும் என அன்பர்கள் உணரவேண்டும்.

இதன் விபரத்தை எம் கண்ணன் பால்ய லீலையில் காணலாம்.

மேலும் விநாயகனை, முருகனை, சிவனை, அம்பாளை, விஷ்ணுவோ, பற்பல வடிவங்களில் தோன்றியிருக்கலாம். ஆனால் அவை அனைத்தும் **பூரணத்வம்** ஆகவில்லை, பெறவும் இல்லை, பெறவும் முடியாது. காரணம்

“**ஸ்ரீராமாவதாரம்**” ஒன்றே பூரணத்வம் பெற்றது எனப்பிரமாணமாகச் சொல்கிறோம் இந்த நான்கு யுகங்களிலும் (கிருதா, திரேதா, துவாபர, கலியுகம்) தேவதெய்வங்களின் அவதார சொரூபங்களும், ஆனந்த சொரூபங்களும், வல்லமை சொரூபங்களும், ரூபலாவண்ய சொரூபங்களும், மகிமைப் பிரவாக சொரூபங்களும், கோடானுகோடி உண்டு. ஆனால் ஸ்ரீராமாவதாரம் போல் எதுவும் இல்லையென்றே பிரமாணமாகச் சொல்லலாம். காரணம் தெய்வமே மனிதனாகப் பிறந்து ஸத்யம் பேசி, தர்மம் செய்து, அடக்கத்தோடு, கருணையும் காருண்யமும் இணைந்து, ஒரு மனிதன்

“**எப்படிவாழவேண்டுமென வாழ்ந்து காட்டிய அவதாரம் ஸ்ரீராமாவதாரம்**”

எம் ஸ்ரீராமனை வாழ்ந்தால் பரிபூரண சொரூபமாகிய ஸ்ரீகிருஷ்ணனை பிரகாசிக்கலாம் என வலியுறுத்திக் காட்டியதே இந்த ஸ்ரீராமாவதாரம்.





# ஸ்ரீ பகவத் கிருபையும், குரு கிருபையும்!!

## 9. (ஸ்ரீ நாமதேவர்)

ஒன்றைமட்டும் உணருங்கள், ஸ்ரீ பகவத் கிருபை இல்லாமல் குரு கிருபை கிட்டாது, ஸ்ரீ குரு கிருபை இல்லாமல் மோட்சம் கிட்டாது, இது பிரமாண உண்மை. இதை விளக்குவதே இந்தக் கதை.

பூலோக வைகுண்டமாம் பண்டரியில், தையல் தொழில் செய்யும் தாமஷேஸ்டி என்பவருக்கு புத்திரப் பேறு இல்லாதிருந்து ஸ்ரீ விட்டல் (பாண்டுரங்கன்) கிருபையினால், உத்தவரின் பூரணத்வமான ஓர் குழந்தை சந்திரபாகா நதியில் ஓர் பேழையில் மிதந்து வர, அதை எடுத்த தாமஷேஸ்டி அக்குழந்தைக்கு **"நாமதேவ்"** என நாமகரணம் இட்டு தம் குழந்தையாகவே வளர்த்து வந்தார்.

அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்றபடி அந்த ஸ்ரீ பாண்டுரங்கன் கிருபையால் பாண்டுரங்கனுக்கே அன்னம் ஊட்டவும், நாமதேவருக்கு பகவான் அன்னம் ஊட்டவும், பகவானுக்கு துணிமணிகளை அலசிக் கொடுத்து அவருக்கு இவர் அணிந்துவிடவும், அவருக்கு இவர் குளிப்பாட்டி உடலில் சந்தனம் பண்ணி துடைக்கவும், அவருக்கு இவர் அன்னபானாதி ஊட்டியவுடன் வாய்க்கு தாம்பூலம் மடித்து கொடுக்கவும், அவர் உச்சிஷ்ட தாம்பூலத்தை இவர் தாம் ஏற்றுக் கொள்ளவும், சில சமயம் இவர் உச்சிஷ்ட தாம்பூலத்தை அவர் தாம் ஏற்றுக் கொள்வதும், இருவரும் சிரித்துப் பேசி விளையாடவும், இப்படியாக

இவர் **"அவருக்கு ஓர் தாயாகவும்"!**

அவர் **"இவருக்கு ஓர் சேயாகவும்"!**

சுமார் நாற்பது ஆண்டு காலங்கள் இக்கலியுகத்தில் வாழ்ந்து ஓர் புதுமையை படைத்து விட்டார்கள்.

இதில் ஓர் ஒற்றுமை என்னவென்றால் ஸ்ரீ பகவான் நாமதேவரை ஓர் **"குழந்தையாக"** பாவனை செய்து கொள்வார். ஸ்ரீ நாமதேவர் ஸ்ரீ பகவானை ஓர் **"குழந்தையாக"** பாவனை செய்து கொள்வார்.

**"ஓர் நிலையில் இருவரும் குழந்தைகளே"!**

ஸ்ரீ பகவான் நினைக்கிறார்!





உ

இந்த நாமதேவ் நமக்கு ஓர் செல்வக்குழந்தையாகவே இதுகாவரியந்தம் இருந்து விட்டான். அதாவது பக்தியில் திளைத்து நம்மை கரைத்துக் கொண்டான்.

இனி அவனை ஓர் முதியவனாக (ஞானப்பழமாக) ஆக்க வேண்டுமென திருவுள்ளம் கொண்டார். அதற்காக நம் அம்சமான "**ஸ்ரீ ஞானேஸ்வரர்**" என்பவரை வரவழைத்து அவர்வசம் பரிவுடன் ஒப்படைத்து ஞானேஸ்வரரையும் நாமதேவரையும் தீர்த்தயாத்திரை செய்துவரும்படி திட்டமிட்டு அனுப்பி. அவர்கள் ஓராண்டுகாலம் தீர்த்தயாத்திரையை முடித்துக் கொண்டு பண்டரிபுரம் வந்தார்கள். ஸ்ரீபகவான் இருவரையும் அந்த தீர்த்தயாத்திரை பூரணத்வம் பெற வேண்டுமானால் ஸ்ரீஅடியார்களை அழைத்து ஓர் சமாராதனை செய்ய வேணுமென்று ஸ்ரீபகவான் திட்டம் செய்தார். அந்த ஸ்ரீஅடியார்கள் திருக்கூட்டத்தில் எல்லா இனத்தவரும் (பிராமணர் முதல் ஈன ஜாதியினர் வரை) சமமாக கலந்து கொண்டார்கள். சமாராதனை முடியும் தருவாயில் ஸ்ரீபகவான் கோராகும்பர் (குயவரை) என்பவரை இங்குள்ள பாண்டங்களில் (பக்தர்களில்) வெந்த பாண்டம் எது? வேகாத பாண்டம் எது? எனப் பரீட்சிக்கச் சொன்னார். அந்த கோராவும் சக்கரம் சுழற்றும் தடி கொண்டு ஒவ்வொரு அன்பர்கள் மீதும் ஒவ்வொரு அடியாக அடித்துக் கொண்டே வந்தார். நம் நாமதேவை அடிக்க வரும்போது

**"நான் என்ன குற்றம் செய்தேன்"?**

**"என்னை" ஏன் அடிக்க வேண்டும்"??**

என தடுத்தார் நாமதேவ். உடனே கோரா சிரித்துக் கொண்டே ஹே தேவாதிதேவா! "இதுவே வேகாத பாண்டம்" எனச் சொன்னார். எப்படிக் கண்டு கொண்டாய் என சிரித்துக் கொண்டே பகவான் கேட்டார். அதற்குக் கோரா, இங்கு அஹங்காரம், அபிமானம் அழியவில்லை என்றார். அதாவது "**நான் என்னல் என்னுடையது**" முழுமையாக அழியவில்லை என்றார். அங்குள்ள அன்பர்கள் அனைவரும் சிரித்துவிட்டனர். இதுவே நாமதேவருக்கு பெருத்த அவமானமாகி விட்டது. தலையை குனிந்து கொண்டார். எம் பகவான் அவரைத் தேற்றினார். அதாவது!



உ



## ஸ்ரீ பகவான் வாக்யம்

வத்ஸ! வருந்தற்க! ஸ்ரீ ஸத்குருமார்கள் தம் உத்தம சிஷ்யர்களுக்கு சொல்ல யாம் கேட்டிருக்கிறோம். இது எம் சொந்த கருத்து அல்ல. இதை யாம் சொல்லக்கூடாது. யாம் சொன்னால் அஸத்யம் பேசியவனாவோம். யாம் தொழில் கர்த்தாவாக செயல்படுவதால் எம் தொழிலையோ, தொழில் சம்பந்த பொருள்களையோ குறைத்துப் பேசுவது கூடாது.

ஆனால்?

எம் ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்தில் மட்டும் ஒரே இடத்தில், ஒரே காலத்தில் மட்டும், "ஸத்குரு என்ற கீதாச்சாரியனாக" செயல்பட்டோம். அந்த சமயம் மட்டும் "ஸத்யம் பேசினோம்! இப்போது ஸத்யம் போல் பேசுகிறோம்."

ஆனால் உனக்கு இப்போதைக்கு சில உண்மையை மட்டும் உரைக்கிறோம் கவனமாக கேள்!

நாமரூபம் ஜடசொரூபம். அவை அனைத்தும் பிரகிருதியே. அதாவது "மண்மயமே" ஆனால் அவை ஓர் "உருவமாக" தோற்றுவது எம் மாயையே.

அந்த உருவத்திற்கு ஓர் பெயரை (நாமத்தை)யும் அதன் அசைவுக்கு (இயக்கத்திற்கு) தக்கபடி குணதோஷங்களையும் கற்பிதம் செய்தது அந்த மாயையில் பிரதிபலித்த "மாயாமனமே"! அந்த உருவத்தை வேறொன்றாக மாற்றி அமைத்து அதற்கு வேறு நாமமும் வைத்து அதன் அசைவுக்கு (இயக்கத்திற்கு) தக்கபடி குணதோஷங்களை கற்பிதம் செய்து அதிலிருந்து மீளமுடியாமல் அவஸ்தைப்படுவதும் இந்த "மாயாமனமே"! முதலில் மனோமய சிருஷ்டியை நிர்மூலம் செய்து அனைத்தும் இறை சிருஷ்டியாக (மகேசன் சிருஷ்டியாக) பாவனை பண்ணினால், மனோமய சிருஷ்டியில் பின்னிக் கொண்டிருக்கும் நான், என்னால், என்னுடையது, முழுவதும் அழிந்து போகும். எல்லாம் இறைவன் சிருஷ்டி என ஆகிவிட்டால் விளையாடலாமே தவிர உரிமை கொண்டாட முடியாமல் போய்விடும். முதலில் செயற்கையின் வாஸனைகளை அழித்துவிட்டால் அனைத்தும் இயற்கையின் ஸத்வகுண வாஸனை ஒன்றுவேயே திருப்தி, நிறைவு, சாந்தி, மௌனம், பொறுமை, அன்பு, கருணை, ஆனந்தம் என்ற



உ



இறையருளில் நிலைத்து நின்று விடும். அய்யா! நாமதேவ்! உன் உடம்பை "நான்" என பாவனை செய்து வந்ததாலேதான் என்னுடைய தேகம் என அபிமானம் பாராட்ட ஆரம்பித்து விட்டாய். இதன் மூலகாரணமே எம்மை (மாயா சொரூபத்தை) மாயையை அகற்றி விட்டு நீயாக உணராமல்! எம்மையும் உன்னையும் வேறு வேறாக உணர்ந்து சொந்தம் கொண்டாட ஆரம்பித்து விட்டாய். இதுவே இப்போது இந்த

"உடல், உறவு, கொண்டாட"!

காரணமாகி இருக்கிறது. இவை முழுமையாக நீ உணரவும், அந்த அதீத நிலை பெறுவதற்கும் ஸ்ரீ சத்குரு கிருபை அவஸ்யம் வேண்டும்! அந்த காரியத்தை அடியேன் செய்ய இயலாது! செய்யக் கூடாது! சற்று தூரத்தில் ஓர் கிராமத்தில் "விசோபாகேசர்" என்ற மகான் வசித்து வருகிறார். நீ சென்று அவரை சரண் புகுவாயாக! என ஓர் மார்க்கத்தையும் காட்டி அருளினார் ஸ்ரீபகவான்.

ஸ்ரீபகவத் கிருபை!

குழந்தைகளே!

உபசார பக்தியாகவும், வியாபார பக்தியாகவும், விளம்பர பக்தியாகவும், படோடாப பக்தியாகவும் செய்து வழிபட்டால் இவை பந்த கர்மாவாகவும், காமிய கர்மாவாகவும் நிலைகொண்டு இடம் பெறும். இங்கு புண்ணிய பாப கர்மா உண்டு! அதனால் அவஸ்யம் பிறவியும் உண்டு.

உருகிய பக்தியாகவும், கரைந்த பக்தியாகவும், கதறி அழுத பக்தியாகவும், "எந்த வேண்டுதலும்" இல்லாத பக்தியாகவும் செய்து வழிபட்டால் இவற்றில் புண்ணியமோ பாபமோ அவஸ்யம் இணையாது. இப்போது செய்த வினைகளையும் பழைய வினைகளையும் அவஸ்யம் கழித்து விடும். பிறகு அவஸ்யம் இப்பிறவியிலேயே

"அந்த பக்தியை ஞானகுருவிடம் இணைய வைக்கும்"!!

"அவஸ்யம் முக்தி உண்டு" காரணம் முந்தைய பிறவிகளின் எண்ணத்தால் பிறவி உண்டு. முந்தையதில் எண்ணம் முழுவதும் சர்வார்ப்பணமாகி விட்டதால் வினையும் இல்லை பிறவியும் இல்லை. இங்கு இந்த ஸ்ரீபகவத் கிருபையானது அந்த பக்தனை ஓர் நிலைக்கு பக்குவப்படுத்தி "உயரவைத்து" ஞானகுருவிடம் இட்டுச் சென்று அவைகளை பஸ்பமாக்க உபகாரமாக இருக்கிறது!





இவ்வாறாக நம் உத்தம பக்தனை, குழந்தை போன்றவனை அந்த உத்தம ஸத்குரு விசோபா கேசரிடம் அனுப்பி வைத்தான் நம் பாண்டுரங்கன். நாமதேவரும் அந்த உத்தம குருவை நாடிச் சென்றார். அந்த ஸ்ரீ குருதேவரோ இருந்த நிலை!

1. ஓர் சிவலிங்கத்தின் மீது தம் கால்கள் இரண்டையும் தலையணை போல் வைத்துக் கொண்டு படுத்த நிலையில் இருக்கிறார்.
2. மல மூத்திரம் எல்லாம் தம் படுக்கையிலேதான்; அதனால் அச்சிவலிங்கமும் மலத்தையே சந்தனமாக பூசியது போல் காட்சி அளிக்கிறது.
3. ஊரில் உள்ள குப்பைகள் எல்லாம் அங்கேயே கொட்டியது போன்று ஒரே குப்பை மேடாக காட்சி கொடுக்கிறது.
4. புண்ணிய நதி போல் ஊரில் உள்ள சாக்கடை எல்லாம் அங்கேயே சங்கமமாகி (உவகோர் மூக்கைப் பிடிக்கும் அளவுக்கு) அதி அற்புதமாக அந்த இடம் காட்சி கொடுக்கிறது.
5. அந்த ஸ்ரீ குருதேவர் தாம்பூலம் போட்டு அந்த தாம்பூல எச்சிலையும் அந்த சிவலிங்கத்தின் மீதே உமிழ்ந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அபிஷேக, அலங்கார, ஆராதனைகளை இந்த உத்தம சிஷ்யனாகிய நாமதேவர் கண்டார். தம் அங்கவஸ்திரத்தால் தம் மூக்கை பொத்திக் கொண்டார். ஒரு கரத்தால் தம் வேஷ்டியை தூக்கிப் பிடித்துக் கொண்டார். கால் அடி எடுத்து வைக்க முடியாமல் தட்டுண்டு தடுமாறி அங்கு செல்லும் சமயம்.

**ஹரே ரங்கா! ஹரே ரங்கா!! பாண்டு ரங்கா!!!** என்று பக்திமிகுதியாலும், அசூசையின் அவஸ்தையினாலும் அலறுகிறார் நம் நாமதேவர்.

**இதோ வந்தோம்! இதோ வந்தோம்!!**

என அன்பின் மிகுதியினாலும் அபயஹஸ்தம் கொடுக்கும் நிலையிலும் தம் அன்புக் குழந்தையை காணும் நிலையிலும் எழ முயல்கிறார் ஸ்ரீ குருதேவர்.

## இங்கு இரண்டும் ஒன்றே!!!

நாமதேவர் சொன்னார்:— எம் கஷ்டகாலம், அந்த பண்டரிநாதன் எம்மை உம்மிடம் அனுப்பி வைத்தானே?

ஸ்ரீ குருதேவர் சொன்னார்:— உன் போன்ற உத்தம குழந்தைக்காகவே யாம் காத்துக் கொண்டிருக்கிறோம் என்றார்!

ஸ்ரீ பகவான் சொன்னான்:— உன் கஷ்டங்களை போக்குவதற்காகவே யாம் அதிக கஷ்டத்தையும் ஆனந்தமாக ஏற்றுக் கொண்டுள்ளோம்.





ஓர் பக்தனை **"ஆட்கொள்ளும்"** (ஆத்மாவை ஆண்டு வினையை கொல்லும்) நிமித்தமாகவே அந்த காவாத்தை ஒன்று ஓர் காவத்தை ஏற்படுத்திக்கொண்டு இறைவனை கலந்து, மேலும் தெய்வீகத்தையும் தருந்து **"ஆட்கொள்ளும்"** (ஆத்மாவை ஆண்டு மனமாயையை கொல்லும்) நிமித்தமாக ஸ்ரீ ஸத்குருவாக அருள்கிறது!

நாமதேவர் எட்ட நின்றே கேட்கிறார் :- ஏன் ஸ்வாமிகளே! கொஞ்சம் சுத்தபத்தமாக இருக்கக் கூடாதா? நீர் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை! ஸ்ரீபகவானையும் அசுசைப் படுத்தி யாரும் அருகில் நெருங்க முடியாமல் வேறு வைத்திருக்கிறீரே இது முறையா? இந்த நாற்றம் எமக்கே குமட்டல் வருகிறது, அந்த பகவான் எப்படி அங்கு இருப்பார்? உம்மைப் போய் ஓர் மஹான் என்றும் உன் குரு என்றும் சொன்னானே அந்த ரங்கன். அவனும் எம்முடன் வந்திருந்தால் உம் நிலையைப் பார்த்து மூக்கைப் பொத்திக்கொண்டு இந்த பண்டரியை விட்டு வைகுந்தம் ஓடிப் போயிருப்பான். நல்லவேளை அவன் வரவில்லை. எப்படி இந்த சாக்கடை மலம் நாற்றத்தில் நீர் சுகமாக ஆனந்தமாக படுத்து ஒரு லிங்கத்தை தலையணையாகவும், ஒரு லிங்கத்தை கால் அணையாகவும் வைத்து அந்த

ஸ்ரீ ரங்கநாதப் பெருமானைப் போன்று வெகு அழகாக அனந்த சயனத்தின் மீது சயனிப்பவர் போன்று படுத்திருக்கிறீரே?

உமக்கு இது கேவலமாக தெரியவில்லை?

மலம் மூத்திரம் தாம்பூல எச்சில் எல்லாம் இங்கே தானா? என இவ்வாறு நாமதேவர் பேசிக் கொண்டிருக்கும் போதே ஸ்ரீ குருதேவர் பேசுகிறார் :- வந்திருப்பது யார்? ஏதேதோ பேசிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது? எமக்கு கண்ணும் சரியாக தெரியவில்லை, வயதாகி விட்டதால் காதும் சரியாக கேட்கவே! எம்மை மன்னித்துக் கொள். உனக்கு என்ன வேண்டும்? ரொம்ப நேரமாக பேசிக்கொண்டு அங்கேயே நிற்கிறாயே? கொஞ்சம் அருகில் தான் வாயேன் என அன்புடன் அழைத்தார் ஸ்ரீ குருதேவர்

நாமதேவர் :— நல்லகாலம் கண்ணும் தெரியலை, காதும் கேட்கலை, ரொம்ப சுத்தம். உம்மிடம் ஏன் அந்த ரங்கன் என்னை அனுப்பி வைத்தான்? நீர் என்ன உபதேசம் செய்யப் போகிறீர்? நான் எதை உம்மிடம் கேட்கப் போகிறேன்? ஆச்சாரம் இல்லாதவரிடம் உபதேசம்



உ



பெறுவது எப்படி? ஓர் பழமொழி சொல்லுவார்கள். அதாவது “பாபம் தீர்க்க காசிக்குப் போயும், அங்கும் ஓர் சொறிப்பார்ப்பன் (ரோகமுள்ள பிராமணன்) காலில் விழுந்தது போல் இருக்கிறது! என்கதையும்.

குருதேவர்:- என்ன குழந்தே! உனக்கு நீயே பேசிக் கொண்டிருந்தால் எப்படி காரியம் முடியும்?

நாமதேவர்:- ஐயா! ஸ்ரீ பகவான் என்னை அனுப்ப நான் தாங்களை நாடி வந்தேன். நம் பகவான் அனுப்பி வைக்கிறானே அப்படியானால் நம் குருதேவரும் ஓர் ஆச்சாரசீலராய் திருப்புண்டரம், துளசி மணிமாலை அணிந்து யோக தண்டு, கமண்டலம் இத்யாதி சொரூபராய் கம்பீரமாக இருப்பாரென வந்தால் தாங்கள் கோலம் அலங்கோலமாக இருக்கிறது. நீர் எப்படி எழுந்து உட்காருவீர்? அதற்கும் உடம்பில் பலமில்லை. உம்மை தூக்கி வைத்துப் பேசலாம் என்றால் இடமும் சரியில்லை.

குருதேவர்:- எம்மைப் பார்த்து வர உன் பகவான் உன்னை இங்கு அனுப்பி வைத்தானா? எமக்கென எந்த சக்தியும் இல்லை! உனக்கு உபதேசிக்கும் அளவுக்கு எமக்கு திறம் இல்லை! அப்படியே எது சொன்னாலும் வாக்கு விரயமே!

**“உன் நிலையில் உபதேசம் தேவை இல்லை”!!**

எம் உடம்போ எம் வசம் இல்லை. இங்கு எந்த “அசைவுக்கும்” இடம் இல்லை. யாம் எதுவும் சொல்லவும் தேவை இல்லை. நீயும் எதுவும் கேட்கவும் தேவை இல்லை.

யாம் செயலற்ற தன்மையில் இருக்கிறோம்!

நீயோ செயலுடன் கூடியவனாக இருக்கிறாய்!!

நீ இங்கு வந்ததற்கு ஓர் காரியம் மட்டும் செய்து விட்டு செல்வாயாக! எம் இரண்டு கால்களையும் சற்று தூக்கி **“சிவலிங்கம் இல்லாத”** இடத்தில் வைத்து விட்டுச் செல்வாயாக என்றார் ஸ்ரீ குருதேவர். நம் நாமதேவரும் கீழே விழாமலேயே இருகரம் கூப்பி நமஸ்கரித்தார். ஸ்ரீ குருதேவர் சிரித்தார். அதில் ஓர் காரணம் இருந்தது போலும்? நாமதேவர் மறு கால் தூக்கி வைக்கும் போது அங்கே கிடந்த ஓர் வாழைப்பழத் தோலில் கால் வைக்க அது சரேலென ஒரே வழுக்காக வழுக்கி ஸ்ரீ குருதேவர் பத்மபாதத்தின் முன் நீட்டி நிமிர்ந்து விழுந்து சாஷ்டாங்க அஞ்சலி செய்தார். குருதேவரும் அதை ஆனந்தமுடன் ஏற்றுக் கொண்டார்.



உ



அந்த சாஷ்டாங்க நமஸ்காரத்திலேயே
அந்த "**நலமும் சுகமும் பெறுவாய்!**" என்றார்.
ஆசீர்வதித்ததில் "மந்திர தீட்சை" முற்றும் பெற்று விட்டது!
அடுத்து நாமதேவர் விழும் போதே அவரை அறியாமலேயே
"**ரங்க குரோ**" என்றார்.
அந்த வார்த்தை தம் வாயிலிருந்து வந்ததாக அவர் உணரார்.
அவர் அந்தரங்கங்களை உணர்ந்த அந்த சாட்சாத் பாண்டு
ரங்கனே பேசினான் என்றே வைத்துக் கொள்ளலாம். காரணம்
அந்த ரங்கநாதப் பெருமானுக்கு நாற்பது ஆண்டுகள் சேவை
செய்தாரே இந்த நாமதேவர்!

"அதன் பிரதி உபகாரமாக"

இறைவனே இதைச் செய்தான் என வைத்துக் கொள்ளலாம்.
ஓர் பக்குவ ஆன்மாவுக்காக இறைவன் இதையும் செய்யவில்லை
யென்றால் அது இறைவனுக்கழகாகாது!

"இறைவன் இதை செய்தானா? செய்ய வைத்தானா?"

அவனே அவனே அறிவான்.

(இது பரம ரகஸ்யம்)

இங்கு தான் அதிசயம்!

நம் நாமதேவர் மெதுவாக குனிந்து ஸ்ரீ குருதேவருடைய இரு
திருவடிகளையும் பற்றி தூக்கி அருகில் லிங்கம் இல்லாத இடத்
தில் வைத்தார். அங்கும் அத்திருவடியின் கீழும் ஓர் லிங்கம்
இருந்தது. "ஹரஹர சிவசிவ" என்று உரக்கச்
சொல்லிய வண்ணம் மறுமுறையும் அப்பத்மபாதத்தை மெது
வாக பற்றித் தூக்கி வேறொரு இடத்தில் வைக்கப் போனார்.
அங்கும் சிவலிங்கம்; "ஹே பகவான் இது என்ன சோதனை"
என உரக்கக் கத்தினார். ஸ்ரீ குருதேவர் சொன்னார்
உன் மனவேதனை சோதனையால் துவம்சம் செய்யப்படுகிறது
என்றார். மற்றும் வேறொரு இடத்தில் ஸ்ரீ குருதேவர் திருவடிகளை
மெதுவாக மாற்றி வைக்கப் போனார் அங்கும் சிவலிங்கம்
நாமதேவர் அலறினார் "**ஹே குரு ரங்கப்ரபோ!**"





என்றார் நம் நாமதேவர். ஸ்ரீ குருதேவர் சிரித்துக்கொண்டே சொன்னார். குழந்தே! இன்னமும் கொஞ்சம் உறக்கக் கூப்பிடு என்றார். நாமதேவர் திகைத்தார். குருதேவரை உற்று நோக்கினார். அவருள் இருந்து ஓர் ஒளி தம்முள் பாய்வது போல் ஓர் உணர்வைப் பெற்றார் நாமதேவர். அடுத்து தம் தவத்தை ஓர் முறை சரிபார்த்தார் நாமதேவர். தாமே "ஓர் சிவலிங்கத்தின் மீது" நிற்பதை உணர்ந்தார். உடனே ஆவேசத்தினால் "**சிவ ரங்க குரோ**" என அலறி எகிறிக் குதித்தார். குருதேவர் மேலேயே விழுந்து விட்டார்.

ஸ்ரீ குருதேவர் நாமதேவரை தாங்கிய நிலையில் அமர்ந்தபடியே ஆரத்தழுவி உச்சி மோந்து முத்தமிட்டு "**சுகமாக, சும்மா இரு**" என்றார்.

நம் நாமதேவருக்கு மனக்கண் அடைபட்டது; அறிவுக்கண் திறக்கப்பட்டது!

முதலாவதாக "அவன் தம்முள் மயமாகி இருப்பதை உணர்ந்தார்"!

இரண்டாவதாக "தாமே அவனாக இருப்பதை உணர்ந்தார்"!

மூன்றாவதாக "மாயாவடிவமும் மறைந்து, தூலவடிவமும் கரைந்து,

"**அனைத்தும் காலாதீத ஒன்றென்**"

"**உணரப் பெற்றார்**"".

"சொல்லற சும்மா சுகமாக இரு" என்ற நிலையில் அமர்ந்துவிட்டார். பலமாதங்கள் ஆயின!

ஸ்ரீகுருதேவரைவிட்டு சற்று தூரத்தில் ஓர் மரத்தடியில் அமர்ந்துகொண்டார் நாமதேவர். ஸ்ரீகுருதேவரை தரிசிக்க வரும் மெய்யன்பர்கள் இவருக்கும் ஏதோ தெய்வாதீனமாக சில உணவுகளை இட்டுச் செல்வர். உணவை தேடிப்போவதில்லை; ஈஸ்வர பிராப்தியாக தேடிவரும் உணவையே நாமதேவர் ஏற்றுக்கொள்வார். ஆட்டம் பாட்டு, தேட்டம், அனைத்தும் இவரைவிட்டுப் போய்விட்டது. அனாதியாய் ஆதிக்கும் ஆதியாய் அமர்ந்துவிட்டார் நாமதேவர்.





அந்த திருடனாகிய பாண்டுரங்கன் நாமதேவரின் மனம் மலர்ந்ததாக இருக்கிறதா? மலர்ந்திலேயே கரைந்துவிட்டதா? (மலர்ந்ததாக இருந்தால் அதீதமான வாக்கு வரும்! மலர்ந்தில் கரைந்துவிட்டால் மௌனாநந்தம் ஒன்றே தோன்றும்) என சோதிக்கும் நிமித்தம் ஓர் நாடகமாடினான்! அதாவது

நாமதேவர் முன்பாக தோன்றுகிறான் எம் இறைவன். எப்படியென்றால்:— நான்கைந்துமாதமாக சாப்பிடாமல் இருப்பது போல் ஒற்பமும் மெலிந்த தேகம், ஒட்டிப்போனவயிறும், ஒட்டிப்போன கன்னமும், குழிவிழுந்த கண்கள், சுருளான பரட்டைத் தலை, இடுப்பில் அழுக்குப்பிடித்த மஞ்சள் வஸ்திரம், கிழிந்த நிலையில் அழுக்குத் தோய்ந்த பச்சைப்பீதாம்பரம் தோளில், ஒருவிரல் மந்தம் அழுக்கேறிய தேகம், கைமெலிந்த தன்மையால் கையில் உள்ள காப்புகளும் கழன்று விழும் நிலை, சாப்பிடாமல் இருந்ததால் சோர்ந்து போன குரல், சாப்பிடாமல் சோர்ந்து தள்ளாடிய நடை, யுடன்கூடி (இத்தகைய நாடகவேஷத்துடன்) தோன்றினான் பண்டரிநாதன்.

நம் நாமதேவரோ! கண் இருந்தும் குருடாய் (ஸத்தில் நிறைந்த பார்வையாய்) காது இருந்தும் செவிடாய் (அனைத்தையும் பிரணவமாய் ஒலிகளை உணரும் நிலையாய்) வாய் இருந்தும் ஊமையாய் (ஸத்தை மட்டும் புலம்பும் வாயை உடையவராய்) மோனானந்தத்தில் திளைத்து அதிலேயே நிலைத்தவராய் அமர்ந்திருக்கிறார். வந்த இறைவன் கேட்கிறான்:— எம் உண்மைத் தந்தையான நாமதேவா! பாசத்தோடும் பரிவோடும் எம்மை வளர்த்த நாமதேவா! உனக்கு யாமும், எமக்கு நீயும் தாயும் சேயுமான நாமதேவா! நீ இன்றி யாம் இல்லை, யாம் இன்றி நீ உண்டு என அமைந்த தந்தையே நாமதேவா! கன்றுக்குத் தாய் தான் கனிந்து இரங்குதல் போல் எம்மை வளர்த்த எம் அன்னையே நாமதேவா! தாய் அடித்தால் பிடித்தொரு தந்தை அணைப்பான், தந்தை அடித்தால் பிடித்தொரு தாய் அணைப்பாள், அந்நிலையில் திக்கற்றவனாகிய எமக்கு தாயும் தந்தையுமான நாமதேவா! அடாத பிள்ளையாக யாம் இருந்தாலும், தாய் தன்னை விடாத பிள்ளையாக இருக்கும் எம்மை இப்படி நிர்க்கதியாக விட்டு விட்டு இப்படி இருக்கலாமா?



உ

(60)

யாம் என்ன குற்றம் செய்தோம்? எட்டி உதைத்த காலை ஓர் உண்மைத்தாய் முத்தமிடுவாளோ யன்றி; வெட்டி யெறியமாட்டாள் அத்தகைய தாயாகிய நீ இந்த எளியேனை விட்டுவிட்டு இங்கு தனிமையில் அமர வாமா? யாம் என்ன குற்றம் செய்தாலும் அதை நீ மன்னிக்கக் கூடாதா? உன்னை பிரிந்த நாள் முதல் உணவில்லை! உறக்கமில்லை! உன்னுடைய எம் சரீரம் எப்படி இளைத்து விட்டது பார்! தாய்போன்ற உன்போல் எமக்கு உணவு ஊட்டயார் இருக்கிறார்கள்? நீ உய்யாவா பாடாமல் எமக்கு உறக்கம் போய் விட்டது! எம் துணிமணிகளை நீ தாய்மையை பதுத்தாமல் எம் துணிமணிகள் இருக்கும் நிலையை பார்! நீ எமக்கு ஊட்டவும் யாம் உனக்கு ஊட்டவும் அந்த இன்பமான நாள் இனி வராதா? நீ அடைக்காய் இலை மடித்துக் கொடுத்தும் யாம் உனக்கு மடித்துக் கொடுத்தும் தாம்பூல உச்சிஷ்டம் ஒருவருக்கொருவர் கொடுத்து இன்பமாய் கழித்த நாள் இனி வராதா? நீ எமக்காய் பாட யாம் உனக்காய் பாட அந்த ஆனந்தமான நாள் இனி வராதா?

ஊண் உறக்கம் இல்லாது அவதிப்படும் இந்த ஏழைக்கு சற்று இறங்கி கருணை காட்டலாகாதா? என

"அழும் நிலையில் அழகாக சொன்னான்"!

"கதறும் நிலையில் கனிவாக சொன்னான்"!

"பதறிய நிலையில் பணிவாக சொன்னான்"!

"உணரும் நிலையில் உருகிச் சொன்னான்"!

"ஏற்கும் நிலையில் எளிமையாக சொன்னான்"!

"கலங்கிய நிலையில் கண் கலங்கிச் சொன்னான்"!

இப்படியாக இறைவன் ஓர் பக்தனிடம் முறையிடுகிறான். இந்நிலை ஓர் பெரிய ஆச்சர்யமே!!! ஓர் பக்தன் ஸ்ரீபகவானிடம் முறையிடலாம் அது பொருந்தும். இந்நிலையில்

நம் நாமதேவர் ஓர் சித்திரம் போலும், சிற்பம் போலும் அந்த சித்திர விசித்திரங்களுக்கு ஆட்படாமல் எம்பண்டரிநாதன் திருமுகமண்டலத்தையே வைத்தகண் இமை இமைக்காமல் "<u>பார்த்துரசிக்கிறார்</u>"

எந்த குழைதோஷங்களும் அவர் மனதில் எழவில்லை. அவர் முகத்திலும் எந்த சலசலப்பும் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் நாமதேவர் முகத்தில்

"**ஓர் மோஹன புன்னகை**" மட்டும் தவழ்கிறது.



உ



நாமதேவர் :- பிரபஞ்சம் என்னும் நாடக மேடையில் அனைத்து ஜீவகோடிகளையும் புண்ணிய பாபமென்னும் சூத்ரக் கயிற்றில் பிணைத்து, போகத்தால் மோக்ஷமும், மோக்ஷத்தால் போகமும் இணையச் செய்து

**"தாம் சாட்சியாக"** இருந்து வேடிக்கை பார்ப்பவனே! ஏ மூலப் பொருளே! காரணப் பொருளே! ஹே கபட நாடக சூத்ரதாரி! ஹே பரம்பொருளே! அங்கு அவித்தையால் மயங்கி சிக்கித் தவிக்கும் ஜீவர்களை கண்டு நீ ரசிக்கிறாய். இங்கு உன் மாயையால் எம்மை ஆட்ட எத்தனிக்கும் உன் நிலை கண்டு யாம் ரசிக்கிறோம்.

**போதுமையா போதும்! பட்டதெல்லாம் போதும்!!**

ஹே கருணா சமுத்ரமே! அதன் கருணை பிரவாகமே! கருணா சொரூபமே! காருண்ய மூர்த்தியே! உன் பக்த வாத்ஸல்யம் எப்படிப்பட்டதென யாம் இப்போது உணர்கிறோம். தடுத்தாட்கொள்வதில் உனக்கு உவமை நீயே! இங்கு இரண்டில்லையே பிரபோ!

**நீ எங்கு இருக்கிறாய்? நீ எங்கு இல்லை?** நீ இல்லாத இடம் இல்லை. நீ அறியாத பொருள் இல்லை. நீ இல்லாமல் எந்த நிகழ்ச்சிகளும் இல்லவே இல்லை! நீயே உலகம் அனைத்துமானாய்! நீயே அனைத்து போகமும் ஆனாய்! நீயே அனைத்து ஜீவகோடிகளும் ஆனாய்! நீயே புண்ணியபாப வினைகளானாய்! நீயே அவைகளை ஏற்கும் தெய்வமும் ஆனாய்! அறியாமையென்னும் மோகத்தையும், மாயையென்னும் இருளையும் போக்கும் ஸத்குருவும் நீயே ஆனாய்! உன்னை

**நிர்க்கதியாக பற்றிக் கொண்டாலே போதும்**

**நற்கதி உணர்த்தும் ஸத்குருவாக நீயே!**

ஆகி அனைத்தையும் எந்த குறையுமின்றி நடத்தி முடித்து விடுகிறாயே ஹே பிரபோ! பார்க்கும் இடம் எங்கும் ஓர் நீக்கமற நிறைகின்ற

**பரிபூரணானந்தமே!!!** என முடித்துக் கொண்டார் நாமதேவர்.

ததாஸ்து நவம் சுபம் என்றான் இறைவன். அங்கு அந்த மூன்றும் இல்லை! இருப்பது ஒன்றே! அதுவும் இல்லையே! ஆனால் உண்டு!





# 10. திருப்பாதசேவை.

இடும்கைவாயும். எம்பெருமான் தியானபரராய் இருந்தவர் தெய்வாதீனமாக கண்களை திறந்து பார்க்கிறார். அன்னை பார்வதி தேவி புஷ்பங்களை சேகரித்துக் கொண்டிருக்கிறார் விநாயகனும் நந்தியும் சிவசிவகணங்களும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். முருகனை கைவாய்ந்தில் காணோம். பெருமான் தாம் இருந்த இடத்திலிருந்தே முருகனைத் தேடினார். அவன் தென் நாட்டுக்குரியவன். ஆகவே தென் நாட்டிலுள்ள மலைகளில் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவன் விளையாட்டு யாதெனில், மலைக்கு மலை தாண்டுவான். அப்படி தாண்டுவதை ஓர் அபிநய நர்த்தனத்துடன் இனிமையாக செய்வான். ஆனால் அந்த விளையாட்டில் எந்த ஓர் ஜீவனுக்கும் இடையூறு இல்லாமல் அதிக கவனமாக நடந்து கொள்வான். அவனுடனே அவன் மயிலும் இணைந்து ஆடும். அழகிலும் நடனத்திலும் மயூரமா முருகனா எனப்பார் நீநால் முருகனே அழகிலும் ஆட்டத்திலும் முதன்மையானவனவான். ஆடுவதிலும் விளையாடுவதிலும் கந்தனும் கண்ணனும் ஒன்றே. இங்கே முருகனின் திருவடியின் சலங்கை ஒலி அங்கு எம்பெருமானை ஈர்க்கிறது. எம்பெருமான் முருகனின் திருவடியையே உற்று உற்று நோக்குகிறார். அதில் அவர் மனம் அதிகமாக ஈடுபடுகிறது.

பிஞ்சு பாதம், சிவந்த பாதம், கால்மாறி மாறி ஆடுகின்ற பாதம்!!!
சலங்கை ஒலியானது "ஓம் சரவணபவா" என்று ஒலிக்கும் ஒலி!!!

அதை அப்படியே தாங்கிக் கொள்ள வேண்டுமென்றும். வருடிவிட வேண்டுமென்றும். திரும்ப திரும்ப முத்தம் கொடுக்க வேண்டுமென்றும், தன் மார்போடு கட்டி அணைத்துக் கொள்ள வேணுமென்றும் எண்ணுகிறார்

ஆனால் அது நடக்காத காரியம், அது முடியாத காரியம், காரணம்;
ஓர் தனயன் திருவடியை தந்தை வருடி சேவை செய்யக் கூடாது தான்;
ஆனாலும் அதற்கு ஓர் சந்தர்ப்பம் 'அது" தரும் என எதிர் பார்த்திருந்தார்!

அதே சமயம்!

அந்த பால முருகன் எந்தெந்த மலைகளில் எங்கெங்கு விளையாடிக் கொண்டிருந்தாலும் அடிக்கொருதரம் தம் தந்தையையே கூர்ந்து நோக்குவான். அவர் தியானபரராய் தம் இணையோர்த்தியாய் அமர்ந்திருக்கும் தவக் கோலம் கண்டு அந்த ஆனந்தத்தில் அவரை அப்படியே தழுவி அணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்





இருகண்களிலும் இரத்தமாரி பொழிய வேண்டுமென்றும், அவர் தாடி மீசை இவைகளை வருடிக்கொடுக்க வேணுமென்றும், பேராவல் கொள்வான் குழந்தை முருகன். இவர்கள் இருவரின் ஸந்தான ஸங்கல்பங்களை மௌனமாக உணர்ந்த ஒன்று அதன் காலத்தையும் அதுவே முடிவு செய்தது போலும்?

ஓர்நாள் சிவபெருமானைப் பார்க்கப் பிரம்மா போனார். அவர் முருகனை ஓர் ஞானப்பழம் என உணராமல் அவனை கண்டுகொள்ளாமல் போனதாகவும், அவரை அழைத்து "பிரணவத்திற்கு" முழு விளக்கம் தெரியுமா? எனக்கேட்க, அவர் தெரியாமல் திகைக்க, அவரை ஓர் காராக்கிருஹத்தில் முருகன் அடைக்க, இங்கு செய்ததை இவன் தந்தைக்கும் தெரிவிக்க, தந்தை திகைத்து தம் மகனை அழைக்க, முருகன் அழைத்த காரணமேதென கேட்க, பிரம்ம தேவரை இவ்விதம் செய்ய காரணமேதென உரைக்க, மகன் சொல்லும் காரணத்தைக் கேட்டு பரமனே திகைக்க, உனக்கு பிரணவத்திற்கு முழு விளக்கம் தெரியுமா என முருகனை பரமன் கேட்க

நீர் கேட்கும் ஸ்தானத்தில் இருந்து கேட்டால்?

யாம் சொல்லும் ஸ்தானத்தில் இருந்து சொல்வோம்!!!

என முருகன் தன் தந்தையிடம் பரிந்துரைக்க, உடனே பரமன் முருகனை ஓர் பாறை மீது நிற்க வைத்து, தான் ஒருகாலை மண்டியிட்டு அடக்க ஒடுக்கமாய் கை கட்டி, வாய் பொத்தி பணிந்து கேட்க; எம் முருகன் உடனே பாறையை விட்டு கீழே குதித்து,

இது முறையற்ற செயல் என தம் தந்தையை தூக்கி நிறுத்தி கனிமொழியால் முருகன் சொல்கிறான்.

நீர் எப்படியோ பாடம் கேட்க ஆரம்பித்து விட்டீர்!

யாம் உமக்கு பாடம் சொல்ல முடிவெடுத்து விட்டோம்!!

ஆனாலும் தந்தை கீழ் நிலையிலும், தனயன் மேல் நிலையிலும் இருந்து ஓர் பாடம் சொன்னால் அது உலகிற்கும் சாஸ்திரத்திற்கும் பொருந்தாது. ஆனாலும் நம் சாஸ்திரங்கள் என்ன சொல்கிறதென்றால்?

சொல்பவன் சிரம் மேலே இருக்க வேண்டும்! என்றும்

கேட்பவன் சிரம் கீழே இருக்க வேண்டும்!! என்றும் சொல்வதால் உம் குழந்தை தானே யாம்? எம்மை தூக்கி உம் கொழுங்கையில் வைத்துக்கொண்டால் எம் சிரம் மேலே சென்றுவிடும்!

உம் சிரம் கீழே தணிந்துவிடும்!!

"இது நம் இருவர் சங்கல்பத்திற்கும் பொருந்தும்"

என்றான் நம் முருகன்.





உடனே இறைவனும் சரியெனச் சம்மதித்துக் கொண்டான்.
அவ்விருவர் சங்கல்பங்களும் எந்த தடங்கலுமின்றி நிறைவேறின.

**"அங்கு உடல் இரண்டு உணர்வு ஒன்று"!**

அதாவது "**திருவடியும் திரு**(முகமும்)**முடியும்**" இணைந்தன!!

இவர் என்ன சொன்னார்? அவர் என்ன கேட்டார்??
இதற்கு விளக்கம் தேவையில்லை. ஆனால் இரண்டும் ஒன்றாயின!!
**சேவை** யென்றால் அங்கு இரண்டின் சேவையும் இப்படி அமைய வேண்டும்!
இங்கு இருவரும் இணைந்தே அவரவர் சேவையை செய்கிறார்கள்!
இங்கு இருவரும் இணைந்தே தமக்குரிய சேவையை கொடுக்கிறார்கள்!!
குழந்தைகளே!

இங்கு பிரம்மன் படைப்புத் தொழிலை நம் முருகன் ஏற்று நடத்தினான். அழிக்கும் தொழிலை நம்பெருமான் செய்து வந்தார். இவ்விருவரும் "**சேவையில்**" கரைந்து மயமானதால் இவ்விரண்டு தொழிலும் ஸ்தம்பித்து விட்டன. இதனால் ரட்சிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த திருமாலுக்கும் தொழில் தடைப்பட்டது. திருமாலும் தம் தொழிலை விட்டுவிட்டு இச்சம்பவம் நடைபெறும் இடத்திற்கு விரைந்தோடி வந்தார். நிலைமையை உணர்ந்தார்.
"இதை இப்போது விட்டு விட்டால் இனி எப்போதும் கிடைக்காது"! என உணர்ந்தவராய் எம்பெருமானின்

ஓர் திருவடியை பற்றி திருவடி சேவை செய்தார்!

காராக்கிருஹத்தில் அடைபட்டுக் கிடந்த பிரம்மதேவனும் இந்நிலையை உணரப்பெற்றார். அவரும் காராக்கிருஹத்தை விட்டு வெளியேறி ஒரே ஓட்டமாக சம்பவம் நடக்கும் இடத்திற்கு வந்து விட்டார்.
"இதை இப்போது விட்டு விட்டால் இனி எப்போதும் கிடைக்காது"! என உணர்ந்தவராய் எம்பெருமானின்

மற்றோர் திருவடியை பற்றி திருவடி சேவை செய்தார்!

இந்த விதமாக முப்பெரும் சக்திகளும் (சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம்) செயலற்று போய் **ஞானப்பழமும்** (முருகனும்) சேவையில் மயமாகி விட்டதை யோகமாயை உணர்ந்து இது நீடித்தால் உலகமே நிர்மூலமாகிவிடும் என அந்த "**ஒன்றை**" வேண்டிக் கொண்டு தம் பணியை செய்தது. அதாவது அம்மூவரையும் சலிக்க (அசையச்) செய்தது. ஞானம் (முருகன்) தம் வசத்தில் தாம் தாம் ஆனது. அம்மூவரும் அவரவர் தொழிலை குறையின்றி நிகழ்த்தினர்.



உ



எம் அரும் செல்வங்களே!
திருவடி சேவையில் அப்படி யென்ன
பெருமை இருக்கிறது என்றும்; அப்படியென்ன "சுகம்" இருக்கிறது என்றும்;
அப்படி என்ன பேரின்பம் இருக்கிறது என்றும் நீங்கள் கேட்கலாம்?
அதை சொல்லவோ, வேறு வகையில் விளக்கம் கொடுக்கவோ
"எம்மால் ஆகாது!!!"
அந்த மாபெரும் பாக்கியம் உங்கள் வைத்தியத் தந்தைக்கு "மட்டும்"
தான் கிடைத்திருக்கிறதென பிரமாணமாகச் சொல்லுவோம்.
திருவடி சேவை கொடுப்பவன் அதற்கு தகுதி உடையவனை
இருக்கவேண்டும்.
அங்கு சேவை செய்பவனை எப்படியும் ஏற்றுக்கொள்வான். ஆனால்

# "அந்த தகுதி"!!!

எம் ஸ்ரீ குருதேவர் **"வேதவியாச பகவானுக்கே!"**

பொருந்தும் யாம் அவர் ஞானப்புதல்வன் "சுகப்பிரம்மமாக"
இருப்பதால் யாம் "தூலநிலையில் நிலை கொள்வதில்லை"! அதாவது
அடங்கி இருக்கக் கூடுதில்லை.
மேலும்???
திருவடி சேவையே பேரானந்தத்திற்கும் பிரம்மானந்தத்திற்கும்
இடைப்பட்ட ஓர் **"சுகானுபவம்."**
மேலும் யாம் ஸ்ரீ குருதேவரிடம் ஸ்ரீ பாத சேவை செய்யும் காலம்
மூன்று மணிக்கு குறையாமல் ஐந்து மணி வரை சேவை செய்வோம்.
அவரும் ஆனந்தமாக சயனித்திருப்பார், யாமும் ஆனந்தமாக சேவை செய்வோம்.

# எம்மால் இயலவில்லை!!

காரணம்

# இங்கு மனம் வேண்டும்!!

அது
எம்மிடம் இல்லையேன் செய்வோம். மேலும் மேலும் திருப்பாத சேவையை
மிகைப்படுத்திக் கூறி உங்கள் ஆவலைத் தூண்ட வேண்டாம் என இதை
முடிக்கிறோம். ஸ்ரீ பாத சேவை, தூலநிலையில் சர்வாங்க சேவை முதலியன
கிடைக்கவில்லையேன மனம் தளர்ச்சியுற வேண்டாம். அந்த அளவுக்கு உங்க
ளுக்கு வினை பாதிப்பு இல்லையென சாந்தி கொள்ளுங்கள். மேலும் உங்கள்
வைத்தியம் எல்லாம் **பாக்கியார்த்த சிரத்தா சேவையே!!!**



உ



# 11. அத்வைதத்தின் சிறப்பு.

ஓம் அருள் ஞானக் குழந்தைகளே! இந்தப் பகுதி "திருஅண்ணாமலையில்" கேள்வியும் பதிலுமாக தொகுக்கப்பட்டதாகும். திருஅண்ணாமலையில் வீதிவலம் வரும் சமயம் பேய்க்கோபுர வாசலுக்கு தென்புறம் ஓர் விநாயகர் எமக்காகவே அமர்ந்த நிலையில் இருப்பார். அவருக்கு எதிரே ஓர் திருமணமண்டபம் உண்டு அதன் அருகே ஓர் கருங்கல் பாறை உண்டு, அதில் சற்று அமர்ந்து விநாயகரை பார்த்து சிரித்துக் கொண்டிருப்போம். அதுசமயம் சில அன்பர்கள் வந்து கேள்வி கேட்பார்கள். அவர்களுக்கு எப்படியெல்லாமோ பதில் கொடுப்போம். அந்த விநாயகன் அன்பர்களை அனுப்பினானோ? இல்லை அவனே அன்பர்களாய் வந்தானோ? அது அவனுக்குத்தான் தெரியும். இனி கேள்வி பதில் தொடரும்.

அன்பர் :- ஐயா! தாங்கள் தானே தாளிஸ்வாமிகள்?

வைத்தியம் :- சொல்லக் கேள்வி அது அவனுக்கே தெரியும்!

கேள்வி :- அவனுக்கு தெரியும் என்றால் எவனுக்கு தெரியும்?

பதில் :- அதோ அங்கே ஒருவன் உட்கார்ந்திருக்கிறானே அவனுக்கு தெரியும்!

கேள்வி :- அங்கே ஒருவரையும் காணோமே, ஓர் கல் சிலைதானே இருக்கிறது?

பதில் :- அது கல் சிலையென்றால் நீயார்?

கேள்வி :- நான் சுப்பிரமணியன், எங்கம்மா பேர் ராஜேஸ்வரி, எங்கப்பா பேர் ராஜசேகர். எனக்கும் அவனுக்கும் ஒத்துப்பார்க்கிறீர்களோ? அது சிலையாக இருக்கிறது! நான் உங்கள்முன் நிற்கிறேன் பேசுகிறேன்! நீங்கள் சொல்லும் காரியத்தை செய்து முடிப்பேன் என்னையும் அச்சிலையையும் ஒத்துப் பார்க்க முடியுமா?

பதில் :- ஆகா! ஆகா! அழகாக பேசுகிறாய்! நீ என்ன படித்திருக்கிறாய்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

கேள்வி :- நான் என்ன படித்தால் என்ன? இப்போது உங்கள் முன்பாக நிற்கிறேன்; பேச்சை மாற்றுகிறீர், என்னிடம் உம் ஜம்பம் பலிக்காது. நாங்களிடம் கேள்வி கேட்டால் வேறு எங்கோ திசை திருப்புகிறீர்களே. அந்த கல் பேசுமா? நான் உங்களிடம் பேசுகிறேன், கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வேன்.

பதில் :- ஓகோ கோ! நீ அப்படி வருகிறாயா? நல்ல சத்தான குழந்தை, உன் துடுக்கான பேச்சைக் கண்டே உணர்ந்து கொண்டோம். அவசரப் படாதே, இப்படி உட்கார் (அவன் அங்கேயே அமர்ந்து கொண்டான்)



உ



பதில்:— நீ என்ன சொன்னாய்? அந்த கல் பேசாது. நான் பேசுகிறேன் பதில் சொல்கிறேன் என்கிறாயே அந்த கல் வேறு நீ வேறு?

கேள்வி:— ஆமாம் அது கல் நான் மனிதன்; வேறுவேறு தானே?

பதில்:— சரி இனி உன் வழியில் யாம் வருகிறோம்; அது கல் பொம்மை. நீ மாமிச பொம்மை; அப்படியானால் இரண்டும் பொம்மைதானே?

கேள்வி:— நான் பேசுகிறேனே! இரண்டும் ஒன்றென்றால் அதுவும் பேச வேண்டுமே ஏன் பேசவில்லை?

பதில்:— உன்னிடம் மனம் இருக்கிறது. அதனால் நீ பேசுகிறாய்; அங்கு மனம் இல்லை அதனால் அது பேசவில்லை.

கேள்வி:— என்னிடம் மனம் இருப்பது உண்மைதான்! அதனால் இன்பதுன்பத்தை அறிகிறேன். அது அறிகிறதா?

பதில்:— இன்பதுன்பம் அறிந்தால் அது மனிதன் தான்; இன்பதுன்பம் அறிய மனமில்லாது இருந்தால் அது தெய்வம் தானே?

கேள்வி:— அதனால் (கல்லாக இருப்பதனால்) ஒரு பயனும் இல்லையே!

பதில்:— நீ என்ன பயன் படுகிறாய்?

கேள்வி:— எங்க அம்மா அப்பாவுக்கு பயன் படுகிறேன்; என் சகோதர சகோதரிகளுக்கும் பயன்படுகிறேன். நான் உலகத்திற்கும் பயன்படுகிறேனே? அது பயன்படுகிறதா?

பதில்:— (சிரித்துக்கொண்டே) நீ பயன் படுகிறதாக சொல்கிறாயே உன் பயன் மீண்டும் மீண்டும் ஜனனம் தானே? அதுவும் திரும்பவும் மனித ஜன்மா கிடைக்கும் என்பதில் என்ன உத்ரவாதம்? கிருமி கீடகத்திலிருந்து யானை (உருவத்தில் சிறியது உருவத்தில் பெரியது) வரை பிறந்து பிறந்து இறக்கிறாய். அந்த சிறிய உருவத்தைப்பார். உனக்காக அனைத்தையும் படைத்து வைத்து விட்டு உன்னை சாப்பிடச் சொல்லி விட்டு அது அமைதியாக சாட்சியாய் உன்னைப்பார்த்துக் கொண்டிருக்கிறது. நீயோ உலகத்திற்கு பயன்படுவதாக சொல்கிறாயே நீ பயன்படுதல் எப்படி அமைந்திருக்கிறது என யாம் சொல்கிறோம் சற்று கவனமாக கேள்:— உன் மாதா பிதா செலவில் நீ படிக்க வேண்டும். பின் படித்த படிப்புக்காக வேலை தேடவேண்டும். தேடிய வேலையில் கடும் உழைப்பு உழைத்து பணம் சேகரிக்கவேண்டும். தேடிய பணத்தை செலவு செய்ய ஓர் பெண்ணை திருமணம் செய்ய வேண்டும். செக்குமாட்டைப் போல் உரசி உரசி அந்த நமச்சலால் (ஸ்திரீ போகத்தால்) குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். மனைவியென்னும் தேளால் அடிக்கடி கொட்டு வாங்கிக் கொள்கிறாய்; பிள்ளைகள் குளவிகளால் தினமும் அப்பா எனக்கு அது வேண்டும், அப்பா எனக்கு இது வேண்டும் என பிடுங்கல்கள் வாங்கிக் கொள்கிறாய். உன் சுற்ற உறவு சுற்றங்களால் நல்வினை தீவினையென்னும் மரணவலையில் மாட்டிக் கொள்கிறாய். இதற்கும் மேலாக உழைத்து உழைத்து உருக்குலைந்த சரீரத்தை ரோகம் பிடித்துக் கொள்கிறது. இந்த மரண அவஸ்தையை



உ



பதில்:— நான் உலக உபகாரியாக இருக்கிறேன். அந்தக்கல் உபகாரமா செய்கிறது எனக் கேட்கிறாய்? நல்ல கேள்வி யப்பா உன் கேள்வி?

கேள்வி:— அதனால் தான் நாங்களும் கல்லாட்டமா இருக்கிறீர்களா? அதனால்தான் தாஸ் என்ற நாமமா உங்களுக்கு?

பதில்:— அப்பா! யாமும் உன்போன்று மனம்படைத்த மனிதனாக இருந்து அதோ உள்ளே இருக்கிறானே அவனிடத்தில் எம்மனதைக் கொடுத்தோம். அவன் எம்மை நாமமாக்கிக் கொண்டான். அவனைக் கல்லாக கண்டால் கல்தான்! அவனைக் கடவுளாக உணர்ந்தால் அவன் கடவுள்தான்.

கேள்வி:— அந்த கல் பேசுமா? ஆனால் நாங்கள் உண்மை விளக்கத்துடன் பேசுகிறீர்களோ?

பதில்:— அதுவும் உன்னுடன் பேசும்.

கேள்வி:— அதெப்படி பேசும்?

பதில்:— உன் மனதை அதனிடம் சமர்ப்பணம் பண்ணிவிடு, அதுவும் பேசும்.

கேள்வி:— உங்கள் பதிலில் ஓர் சந்தேகம் தோன்றுகிறது என் கண்களுக்கு அதுமாத்திரமல்ல எந்த கோயிலிலும் சிலைதான் இருக்கிறதே தவிர சாமியை அங்கு காணோம். அது எப்படி உங்கள் கண்களுக்கு மட்டும் சாமியாகத் தோன்றுகிறது?

பதில்:— தம்பி! கண்கள் காணும் காட்சியில் ஒன்றுதானே தெரியும்? அங்கு இரண்டு காட்சிகள் தெரியாதல்லவா?

கேள்வி:— ஆமாம் தெரியாது தான் காட்சி ஒன்றுதான் தெரியும்.

பதில்:— ஒரு கல்லிலோ ஒரு மரத்திலோ ஒரு நாயோ ஒரு யானையோ உருவமாக அடித்து வைத்திருக்கிறதென வைத்துக்கொள். முன்பின் அறியாத நீ அதை கண்டவுடன் நாய் என்றோ யானை என்றோ தானே சொல்வாய்? முதலில் நாய் என்றும் யானை என்றும் தானே சொல்வாய். பின் அதன் அருகில் சென்று தொட்டு அறிந்துணர்ந்து தானே அவைகளை கல் என்றும் மரம் என்றும் சொல்வாய்? இவை எப்படி உன் கண்களுக்கு நாயாகவும் யானையாகவும் எப்படி தோன்றிற்று?

கேள்வி:— முன்பின் அறிமுகம் இல்லாத் தன்மையினால் என் கண்களுக்கு அவை ஓர் உயிருள்ள உருவமாக தோன்றியது. பின் அதைப்பற்றி அருகில் சென்று அறிமுகம் ஆனதன்மையினால் அசையாதிருந்த ஜடம் (அறிவற்றது) என தெரிந்துகொண்டேன்.

பதில்:— அப்படியானால் எம் அன்புத்தம்பி! அதை முதலில் கண்கள் கண்டதா? மனம் கண்டதா?

கேள்வி:— (சற்று தீவிரமாக யோசித்தான்) ஆமாம் ஐயா என் கண்கள் வழியாக என் மனம் தான் கண்டது.

பதில்:— பின் நீ அதன் அருகில் நெருங்கிச் சென்று அதை கல்லென்றும் மரமென்றும் அறிந்துணர்ந்தது மனமா வேறு ஏதாவதா?



உ

(69)

கேள்வி :- (இன்னும் சற்று பயமாக சிந்தித்தான்) ஆமாம் ஐயா! பின் உணர்ந்து கண்டதை மனம் என்று சொல்ல முடியாதே! ஏனென்றால் மனம் நாம் கண்ட காட்சிகளை மாற்றாமல் மறுக்காமல் வேறுபடுத்தாமல் அந்த காட்சியிலேதான் நிற்கும். அப்படியானால் இங்கு கனவில் கண்ட காட்சிகள் அடியோடு உயிரற்றதாக தோன்றுவதால் அங்கு அந்தக்காட்சியை கண்டதாக மனம் இருக்காது. எப்படி என்றால் கண்ட காட்சியை அப்படியே உருவகப்படுத்தி காண்பது மனமே. பின் தீர்க்கமாக அதை விசாரணை செய்து ஓர் முடிவெடுத்தது மனச்சாட்சியே.

பதில் :- தம்பி அதை மனச்சாட்சி என நீ சொல்கிறாய். யாம் அதை அறிவென்று சொல்கிறோம். இந்த ஞானமும் உன்னிடத்தில் தானே இருக்கிறது? வேறு எங்கிருந்தாவது வந்ததா?

கேள்வி :- அந்த ஞானமும் என்னிடத்தில் தான் இருந்தது. இருக்கிறது. பிறகு அந்த அறிவு முதலில் ஏன் ஸ்புரிக்கவில்லை. அந்த அறிவு ஏன் மறைந்திருந்தது? எங்கே மறைந்திருந்தது?

பதில் :- தம்பி! மனதின் பழக்க வழக்கம் அனைத்தும் இந்த மனமே! "ஆனால் அறிவுக்கு பழக்கமும் இல்லை; வழக்கமும் இல்லை; அதற்கு உண்மை உணர்வு ஒன்றே"

கேள்வி :- ஆனால் இந்த அறிவு மட்டும் மறைபொருளாயிருக்கும் காரணம் என்ன? உடனே அந்த பொய்மையை உணர்த்தாத தன்மை என்ன?

பதில் :- தம்பி ஓர் பாத்திரத்தின் ஜலத்தில் உப்பையோ சர்க்கரையையோ உனக்கு தெரியாமல் கலந்து வைத்து விட்டால். அதை முதலில் காணும் உனக்கு அங்கு கலந்த உப்போ சர்க்கரையோ முதலில் தோன்றுமா? அல்லது வெறும் ஜலம் மட்டும் உனக்குத் தோன்றுமா?

கேள்வி :- ஐயா ஜலம் தான் முதலில் தெரியும். பின் கேள்வி கேட்கும் போது அதை நாக்கில் தொட்டு வைத்து உணர்ந்த பின்னர் தான் அதில் உப்போ சர்க்கரையோ கலந்திருக்குமென சொல்ல முடியும்!

பதில் :- அந்த உப்பும் ஜலத்தில் உண்டானதே! அந்த சர்க்கரையும் கருப்பஞ்சாறு என்ற ஜலத்தில் உண்டானதே! இதை நன்கு உணர் முதலில் தோன்றிய ஜலத்தில் உப்போ சர்க்கரையோ கலந்திருப்பது போன்று உலகம் என்ற நாமரூப எந்த பொருளிலும் இறைவன் உப்பும் சர்க்கரையும் போன்று கலந்து சர்வ வியாபியாக இருக்கிறான். வெறும் ஜலத்தை மட்டும் மனக்கண்களால் காணும் நாம் ஜலம் என்றுதான் மனம் பிரேமையினால் ஜகமாக காண்கிறோம். அதை அறிவுக்கண்ணால் மட்டும் உணர்ந்து பார்த்தால் அதன் ரகஸ்யம் புரியும். இதற்காகத்தான் குரு பிரம்மான ஓர் இறைவனிடம் எல்லாம் நீயே என சமர்ப்பணம் செய்துவிட்டால் கர்மமயக்கம் (நாய்) மரமயக்கம் (யானை) சாரமற்றதாய் தோன்றும் ஜகமயக்கம் இவை அடிபட்டுப் போகும்.





உ

கேள்வி :— ஐயா எனக்கு விளங்கவில்லை. சற்று என் அறிவுக்கு உணரும் நிலையில் சற்று விளக்கமாகச் சொல்லுங்களேன்?

பதில் :— குழந்தாய்! மண் மலை (கல்) மரம் செடி கொடி இவை அனைத்தும் இறைவனின் மூலப் பொருள். இவைகளில் மயக்கமோ, கலக்கமோ பயமோ வேறு எந்த குற்ற உணர்வுகளும் இல்லவே இல்லை. இவை அறிவுபூர்வமானவை! இதை இறைவன் தோற்றம் எனவும் சொல்லலாம். ஆனால் மனம் படைத்த நாம் என்ன செய்தோம்? கல்லையும் மண்ணையும் வீடுகளாக்கிக் கொண்டோம். மண்ணையும் கல்லையும் நவரத்தினங்களாகவும் பணமாகவும் ஆக்கிக் கொண்டோம். மேலும் மண், கல், மரம் இவைகளை கொண்டு நம் தேவையை பெருக்கிக் கொண்டு பாத்திர பண்டங்களாகவும், பண்ட பதார்த்தமாகவும், "நாமரூபங்களையும்" இவை இத்தகையது இவை இன்னது செய்யும், இவற்றால் நாம் இப்படி வாழலாம் ஓர் வரைமுறையை வகுத்துக் கொண்டு அந்த குண தோஷங்களால் நம் மனதை பின்னிப்பிணைந்து அவற்றை விடமுடியாமல் திரும்பத் திரும்ப அந்த நுகர்ச்சிக்காகவே ஜனனம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். என்று இவை அனைத்தும் "மண்ணே" என்றும் அனைத்தும் இந்த மண்ணுக்குள் இல்லை என்ற அறிவு பிரகாசிக்கிறதோ அன்றுதான் பிறவி ஒழியும்.

கேள்வி :— தாங்கள் வெகு எளிதாகவும் இனிமையாகவும், உண்மை உணர்வுடனும் சொல்லிவிட்டீர்கள்! ஆனால் அம்மா அப்பாவையோ கணவன் மனைவி குழந்தை உறவுகளையோ அது எப்படி அனைத்தும் மண்ணே எனக் கருதமுடியும்? இது நடைபெறும் காரியமா? நடைபெறும் எளிதான வழியைக் காட்டலாகாதா? இதற்கு வேறு மார்க்கமே இல்லையா?

பதில் :— நல்ல உள்ளுணர்வுடன் கேட்கிறாய். சில உள் பயிற்சிக்கு கொண்டு வந்தால் உன் அனுபவ முதிர்ச்சியினால் அனைத்தும் சுலபமாக முடியும். அரசன் முதல் ஆண்டி வரை, பக்தன், ஞானி முதல் பாமரன் வரை ஞானநிலை பெற்ற அனுபவஞானி முதல் எவராகினும் இது வரையில் தூலத்தை அழியாமல் வைத்திருக்கிறார்களா? இல்லவே இல்லை. அதைப் போலவே அனைத்து உலக பொருள்களும் அன்றுள்ளது போல் இன்று இருக்கிறதா? இல்லவே இல்லை. அனைத்தும் தோன்றும், இருக்கும், மாறும், மறையும். இதுதானே உலகின் நியதி! ஆனால் அந்த தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இவைகளில் மனதை அதிகமாக பதியாமல் பண்ணலாம். அவைகளை இறைவன் உடைமையே என்றும், இறைவனே என்றும் அனைத்தும் இறைவன் செயலென்றும் கருதி மனதை தெளிவடைய



உ



செய்யலாம். முயற்சி செய்யலாம், அது நடைபெற்றாலோ, நடைபெறாவிட்டாலும் சாந்தி அமைதி அடையலாம். இவை அனைத்திற்கும் காரணமான "ஆத்திரம், அவசரம், வேகம், கரும் ஆசை" இவைகளை குறைத்து குறைத்து "இல்லாமல்" செய்யலாமே!

கேள்வி:- ஐயா தாங்கள் சொல்வது தெளிவாக உரை முடிகிறது. ஆனாலும் "மனிதமனம் தானே"? நீங்கள் மேலே கூறிய நான்கினையும் நூற்றுக்கு நூறு தடுமாறி விடுகிறதே? தவறிய பின் எண்ணிப் பார்க்கிறோம். தவறு நடந்த பிறகு எண்ணுவதால் என்ன பிரயோஜனம்? அங்கு நம்மை நாமே சாந்தி செய்து கொள்கிறோம். அதில் பிரயோஜனம் இல்லையே!

பதில் :- ஏன் தம்பி! தவறுவதும், தோல்வி அடைவதும், வெற்றிக்கு ஏறிச் செல்லும் படிக்கட்டுகளாக ஏன் மாற்றிப் பார்க்கக் கூடாது?

கேள்வி:- நீங்கள் சொல்லும் சமாதானத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் ஒவ்வொருமுறையும் தவறுவோம், அனைத்து முயற்சியிலும் தோல்வி அடைவோம். அவைகளை திரும்ப திரும்ப சாந்தி சமாதானம் செய்து கொண்டு அவைகளை படிக்கட்டுகளாக எண்ண முடியுமா?

பதில் :- தம்பி! உன் வீட்டு மாடிக்குச் செல்ல எத்தனை படிக்கட்டுகள் இருக்கிறது?

கேள்வி:- (சற்று யோசித்தான்) ஐயா 24 படிக்கட்டுகள் இருக்கின்றன. ஏன் எங்கள் வீட்டு படிக்கட்டை கேட்கிறீர்கள்? அங்கு வந்து நீங்கள் ஏறிப் போகிறீர்களா?

பதில் :- யாம் வருவதும் அதில் ஏறுவதையும் பிறகு பார்க்கலாம். யாம் சொல்வதை சற்று சிரத்தையுடன் கவனிக்கவேண்டும். உன் அற்பமான உன் மண் வீட்டுக்கே 24 படிகள் என சொல்கிறாயே? சத்திய வழியில் சென்று மோட்ச வீட்டின் மேல் தளம் செல்ல எத்தனை படிக்கட்டுகள் இருக்கும் என்று உனக்குத் தெரியுமா? யாம் இதைச் சொல்லும் போது அதிர்ந்து விடாதே! சோர்ந்து விடாதே! பயந்து விடாதே! உன் வாழ்க்கை என்னும் நாடக மேடையில் நீ உன் வினையின் காரணமாக விழும் அடிகள் அனைத்தும் சத்திய வழியில் ஏறிச் செல்லும் படிக்கட்டுகளாக உணர்.





உ

அன்பான தம்பி! இந்த வார்த்தையை உலகமக்களாகிய அறியாமையில் உழலும் மாந்தருக்குக் கணக்கு பார்த்துவிடா தே. அவர்கள் அறியாமையின் இன்ப துன்பத்தை "நான், என்னுடைய, என்னுடையது" என ஆணந்தமாக புசிக் கிறார்கள் அவர்களுக்கு ஏற்படும் வினையின் அடிகள் படிக்கட்டுகள் எனச் சொன்னால் அவை சக்கரப்படிக்கட்டுகள்! ஆகவே அவர்கள் மேலே ஏற முடியாது. அவர்கள்படி மேலே ஏறினாலும் திரும்பத் திரும்ப ஒரே இடத்திலேயே நிற்கும். ஆனால் நீ ஏறும் படிக்கட்டு அப்படி அல்ல. காரணம் உன்னிடம்.
"நான், என்னுடைய என்னுடையது இல்லை"
"எல்லாம் நீயே என்ற சரணாகதி எண்ணத்துடன்"
கூடியதாக இருப்பதால் உன் வலிய வினைகளினால் நீ தவறும் போது, வழுக்கி விழும் போதும் இன்பத்திலும் துன்பத்திலும் அவன் நாமமதை நீ உணர்ந்து சொல்வதனால் அது உன்னை ரட்சிக்கும்

(இது பிரமாண உண்மை)

இதை உன் அனுபவத்தில் உணரலாம், அதாவது ஒவ்வொரு குற்ற இயல்புகளும், ஒவ்வொரு முறை அனுபவத்திலும் புதிய புதிய அனுபவம் பெறுவாய்.

கேள்வி:— ஐயா! இப்போது தான் தாங்கள் விளக்கத்தினால் புத்துணர்ச்சி பெறுகிறேன். தாங்கள் உலகம் பொய் உண்மையும் பொய் எனச் சொல்வதிலிருந்து சில கேள்விகள் கேட்கிறேன் அதற்கும் விடையருளி என்னை உற்சாகப் படுத்துவீர்களாக (என கெஞ்சிக் கேட்டான்)

பதில்:— இன்னமும் என்ன கேள்விகள் கேட்கப் போகிறாய்? ஓ! அன்புத் தம்பி! கேள்வியும் பதிலும் எனப் புகுந்து விட்டாலே அது ஓர் அடர்ந்த காடு. அதன் உள்ளே சென்றவர் திரும்பி வருவது மகா கடினம். ஓர் உண்மையை உணர்வாயாக, நீ கேட்காமலேயே உன் உள் உணர்வை அனுசரித்து சில விளக்கம் தருகிறேன் அதை சிரத்தையுடன் கவனித்தால் பின் உன் கேள்வியே வராது என கருதுகிறேன். இப்போது உன்னுள் இருந்து அந்த கேள்வியை நீயாகவே கேட்கிறேன் அது சரியா தப்பா என்று நீயே உணர்.

# அத்வைதத்தின் சிறப்பு



2

(73)

தம்பி!

உனக்கு யாம் சொன்ன முந்தைய கருத்துக்களிலேயே மனம் சுற்றிச் சுற்றி வருகிறது. காரணம் அது புரிந்தது போலும் பின் புரியாதது போலும் உன்னைக் குழப்பிக் கொண்டிருக்கிறது. இனி இவ உதாரணத்துடன் விளக்குகிறேன் உணர்வாயாக!

கேள்வி:- ஐயா என் கேள்வியெல்லாம் எல்லாம் பொய் எல்லாம் பொய் எனச் சொல்வது தான் விளங்கவில்லை. அனைத்தும் நம் கண்முன் உண்மையாக இருப்பன போன்று, ஏன் இருக்கிறதே அதை எப்படி இல்லையென மறுப்பது?

பதில்:- தம்பி! இதைமட்டும் எண்ணிப்பார் பகலில் கண்டது கனவில் இல்லை. கனவில் கண்டது பகலில் இல்லை. இந்த இரண்டு காலங்களிலும் இருப்பன போல் தோன்றுவது ஆழ்ந்த உறக்கத்தில் இல்லவே இல்லை. இப்படி முக்காலங்களிலும் தோன்றியும் மறைந்தும் மாறியும் போகும் உலகையும் அதன் பொருள்களையும் எப்படி உண்மையாக நம்புகிறாய்?

கேள்வி:- தூக்கமோ, கனவோ, இது எப்படி இருந்தாலும் பகலில் விழிப்பு நிலையின் உலகையும் உலக பொருள்களையும் சத்தியமாகவும் நித்தியமாகவும் என் கண் எதிரே காண்கின்றேன், ஒருவருக்கு கொடுக்கிறேன் ஒருவரிடம் இருந்து வாங்குகிறேன், அதை நான் உண்கின்றேன், இதையெல்லாம் எப்படி பொய்யென்று சொல்ல முடியும்?

பதில்:- ஏன் தம்பி இதை நீ இப்படி வைத்துப்பாரேன்? நீ சொல்லும் அனைத்தும் மண்ணுக்கு அன்னியமான பொருளா?

கேள்வி:- ஆமாம் நன்கு கவனித்தால் அவை அனைத்தும் மண் தான் இருந்தாலும் அந்த மண்ணை நானே உருவகப்படுத்துகிறேன் என வைத்துக் கொண்டாலும் அவை இருப்புடையவை தானே?

பதில்:- அந்த மண் முடிவில் என்ன ஆகும் என தெரியுமா?

கேள்வி:- அந்த மண் மேன்மேலும் மாற்றப்பட்டால் தூசி ஆகும்!

பதில்:- அத்தூசி என்ன ஆகும் என தெரியுமா?

கேள்வி:- அது முடிவில் புகை சொருபமாகி ஆகாயத்தில் கலந்து விடும்.

பதில்:- அந்த ஆகாயம் என்ன ஆகும் தெரியுமா? அந்த ஆகாயம் எதால் ஆனது தெரியுமா?

கேள்வி:- அந்த ஆகாயம் அணுக்களின் பிரிக்க முடியாத ஒற்றுமையின் கூட்டம் என சொல்லக் கேள்வி. விஞ்ஞான ஆராய்ச்சியிலும் இந்த ஆகாயம் அணுக்களின் கூட்டம் என்றுதான் சொல்கிறார்கள். அதற்கு மேல் புரிய எனக்கு சக்தி இல்லை.

பதில்:- நல்ல உணர்வுடன் தான் பேசுகிறாய். அந்த அணுக்கள் முடிவில் என்னாகும் எனத் தெரியுமா?



உ

(74)

கேள்வி :— இதற்கு மேல் அடியேனுக்குத் தெரியாது அதை நீங்கள் தான் விளக்கி அருள வேண்டும்?

பதில் :— அந்த அணுக்களையே ஆத்மா என சொல்லுவார்கள். அவை "பரமாணுக்களாகும்". எப்படி தனி மனிதனை மனிதன் என்றும், பல பேர் சேர்ந்தால் கூட்டம் என்றும், தனி விருட்சத்தை ஒரு மரம் என்றும் பல மரங்களை தோப்பு என்றும், ஒரு பசுவத்தை மாடு என்றும் பல மாடுகளை மந்தை என்றும் சொல்வதில் நாமரூபத்தை பேதப்படுத்தாமல் அதன் மொத்த இருப்பை மட்டும் பேதப்படுத்தி கூறப்படுவது போல்.

அணுக்களையே பரமாணுக்கள் என்றும். இந்த பரமாணுக்களோ உள்ள இடம் இல்லாமல் அண்டரண்டபிண்டப்பிரம்மாண்டங்களிலும், அண்டபகிரண்டங்களிலும் சர்வ வியாபகமாக இருந்து கொண்டு சர்வவியாபியாக இருப்பதால் அவைகளை மொத்தமாக. பராபரம் என்றும், பரம்பொருள் என்றும் பரப்பிரம்மம் என்றும் இன்னும் அனேக விதமாக சொல்வார்கள் நம் முன்னோர்களாகிய ஸந்துக்கள் (மஹான்கள்) "தெரிந்தோ தெரியாமலோ உலகமக்கள் சொல்வார்களே "ஓர் மறைந்தான சக்தி உண்டு" அதுவே கடவுள் என்பார்கள். அதை விவரிக்கவும், விளக்கம் கொடுக்கவும், தொட்டுக் காட்டவும், சுட்டி உணர்த்தவும் திரிகர்த்தாக்களாலும் மற்றும் எவராலும் முடியாது.

கேள்வி:— ஐயா! இந்த மறைந்தான ஒன்றை இது வரையிலும் நானும் எத்தனையோ மஹான்களை சந்தித்திருக்கிறேன். இந்த விளக்கம் இது வரை யாரும் தந்ததில்லை. வடக்கே இமாலயா முதல் தெற்கே கன்யாகுமரி முனை வரை எப்படியோ இறைவன் கருணையால் செல்வம் பாக்கியம் கிட்டியும் அநேக மஹான்களை தரிசிக்கும் பாக்கியம் கிட்டியும் இந்த உண்மை விளக்கத்திற்காக அவர்களிடம் சென்றால் பேட்டி காணவே ஐநூறு ஆயிரம் என்றும், கேட்கும் கேள்விகளுக்கு தக்க பணம் என்றும் வசூலிப்பிலேயே இருக்கிறார்கள். அப்படி பணம் கொடுத்துக் கேட்டாலும் ஏதோ எதையோ சுற்றி வளைத்துப் பேசி எந்திரம், மந்திரம், யோகம், ஜபதபம், கண்கட்டி வித்தை (சித்துக்கலை) இன்னும் என்னென்னமோ சொல்லி நம்மையும் குழப்பி அவர்களும் குழம்பி இருக்கிறார்கள். நானும் இந்த உண்மை உணர்வுக்காக



உ



பதினைந்து வருடங்கள் சேவை அளித்திருக்கிறேன். ஒரு பலனும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இன்று இந்த அண்ணாமலையார் கிருபையினால் எனக்கு எந்த செலவும் இன்றி தாங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து (உங்களுக்கு அன்பர்கள் காத்திருக்க அதை பொருட்படுத்தாது) இத்தனை உண்மைகளையும் நான் உணரும் படிக்கு எந்த சலிப்பும் இல்லாமல் அதே உள்ளோடு இருக்கிறதே அவளிட்டம் இந்த பாதையிலே அமர்ந்த வண்ணம் என்னையும் சமமாக அமரச் செய்து சொல்கிறீர்கள் என்றால் அது நான் செய்த புண்ணியமாகும். மேலும் அந்த விளக்கத்தை தொடர்ந்து எனக்கு உதவி என்னை ஆட்படுத்த வேண்டுமென பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

பதில்:— அன்புத் நம்பி! அது காலத்திற்கெல்லாம் அப்பாற்பட்டிருப்பதால் அதை காலாதீத ஒன்று எனயாம் அழைக்கிறோம். அந்த காலாதீத ஒன்றே மனம் இல்லாத் தன்மையினால் யோகமாயை என்ற மஹாமாயை ஏற்படுத்திக் கொண்டு அந்த மஹாமாயையின் சாமர்த்தியத்தினால் பஞ்சகர்த்தாக்களையும் அவர்கள் மூலமாக கோடானு கோடி அண்டங்களையும் ஏற்படுத்திக் கொண்டு, ஆங்காங்கே அனந்த ஜீவகோடிகளையும் உண்டு பண்ணிக் கொண்டு அவைகளின் போகபோக்கியப் பொருள்களையும் உண்டுபண்ணிக் கொண்டு மஹாமாயையின் சிருஷ்டியான மனதை தாமே ஏற்படுத்தி அந்தமாயாமனதினால் புண்ணிய பாபங்களை சிருஷ்டித்துக் கொண்டு, அந்த புண்ணிய பாபங்களினால் பிறப்பு இறப்பு இவைகளை தமக்குத்தாமே செய்து கொள்கிறது. இந்த மனதின் வசப்பட்ட நாம் ஆத்மாவாக இருந்தாலும் அறியாமையினால் கட்டுப்பட்டு திரும்பத் திரும்ப பிறவி எடுக்கிறோம். இதற்கு ஓர் முடிவு காண வேண்டாமா?

கேள்வி:— ஏன் ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன் தவறாக இருந்தால் என்னை மன்னிக்கவும். அனைத்தும் அந்த காலாதீத ஒன்று என நாம் உணர்ந்தபின் நம் முயற்சி ஏன்? அந்த முயற்சியையும் அதுவே செய்யலாமே?

பதில்:— உன் கேள்வி சரியானது தான். இப்போது யாம் உன்னை ஓர் கேள்வி கேட்கிறோம் அதற்கு விடை சொல்வாயாக? தற்சமயம் இந்த உடம்போடு உன் குடும்பத்தோடு வாழும் நீ இன்பதுன்பம் அனுபவிக்கிறாயா? சுகம் அனுபவிக்கிறாயா?



உ



கேள்வி:- ஐயா! இன்பம் வேறு சுகம் வேறா?

பதில்:- ஆமாம் தம்பி இன்ப துன்பம் வேறு சுகம்வேறுதான்.

கேள்வி:- இதை விளக்க முடியுமா?

பதில்:- ஓ தாராளமாக. சற்று கவனமாக கேள் உன்உடலில் ஓர் படை (சிரங்கு) இருக்கிறதென வைத்துக்கொள். அதை சொரியும் போது இன்பம். அதை விட்டபின்பு எரிச்சலால் துன்பம். கணவன்மனைவி போகத்தால் ஓர் இன்பம் காண்கிறார்கள். அதனால் குழந்தைகள் பிறந்து பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள்.

(இதில் பின்னர் செல்வத்தை நீ இன்பம் என்றும் ஆனந்தம் எனவும் நீ சொல்லலாம் அதை நாம் மறுக்கமாட்டோம் சரி இதில் வீணாக காலத்தை கடத்த வேண்டாம். நீயே உணர்ந்தால் தெரியும்)

காதுகளில் கேட்கும் ஓசைகளிலும், கண்களில் தெரியும் காட்சிகளிலும், மூக்கினால் நுகரும் வாசனைகளிலும், வாயால் சுவைக்கும் ஆகாரங்களிலும், சரீரத்தாலோ குறியாலோ ஸ்பரிசிக்கும் உடல் இன்பத்திலும் இன்பமும் துன்பமும் நிறைந்தே இருக்கிறது. இதன் விளக்கத்தை நீயே உணர். பெண்ணாலும், பொருளாலும், வசதி வறுமை வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் நிறைந்தே இருக்கிறது. இதன் விளக்கத்தையும் நீயே உணர். பொதுவாக உலகம் இன்பதுன்பம் நிறைந்ததே. தெய்வீகத்திலும், மனோநிலையிலும், ஆன்மீக உள் உணர்விலும் முறையே நாம் அடைவது ஆனந்தம், மனோநலம், ஆத்மசுகம் என மூன்றுமே. இவைகளையும் இவ்வுலகில் இருந்தே பெறமுடியும். இவை மூன்றும் கிடைக்கும் குணங்கள் அன்பு, கருணை, எளிமை, பொறுமை அடக்கம், சமபாவனை, இந்த ஆறும் இருந்தால் அவசியம் ஆனந்தமும், மனோநலமும், ஆத்ம சுகமும் பெறலாம் ஆகவே உடல் உலகை பொருத்தது இன்பதுன்பம். மனதையும் ஆன்ம உணர்வையும் பொருத்தது நலம் சுகம்.

கேள்வி:- ஐயா நல்ல விளக்கம் தான் இதுகாலபரியந்தம் தூல உணர்வுகளால் கிடைப்பதே ஆனந்தம் சுகம் என்றிருந்தேன் இது மனோசம்பந்தமும் ஆன்ம உணர்வும் சம்பந்தப்பட்டது தான் சுகம் என அறிந்து கொண்டேன். ஐயா இந்த ஆனந்தமும் சுகமும் பெற நான் என்ன செய்ய வேண்டும்?

# அத்வைதத்தின் சிறப்பு



உ



பதில்:— குழந்தாய்! இக்கேள்விக்கு பல வருடங்களாகி விடும் பதிலும் அந்த அனுபவமும் பெற! நீ வெகுளிதாக கேட்டு விட்டாய். அழியும் படிப்பான உன் கல்வியை கற்பதற்கே இருபத்தியைந்து முப்பது வருடம் ஆகிறது. இங்கு நீங்கள் கல்வியா கற்கிறீர்கள்? படித்து பட்டம் பெறுகிறீர்கள். அந்த பாழாய் போன படிப்புக்கே முப்பது வருடம் வீணடிக்கிறீர்கள்!

கேள்வி:— இதை என்ன பாழாய்போன படிப்பு என்று அதனை ஏளனமாக சொல்கிறீர்கள். இது இல்லையானால் நாங்கள் இந்த பூமியில் வாழவே முடியாதே! நாங்கள் பூமியில் வாழ்ந்தால் தானே ஞானசாதனை பண்ண முடியும்?

பதில்:— எம் அன்பு தம்பி நீ சொல்வது உண்மைதான் உலகில் வாழ்ந்து கொண்டு தான் ஞானசாதனை செய்ய முடியும்! ஆனால் உங்களையும் உங்களுக்காக உலகையும் அதன் பொருள்களையும், உங்கள் படிப்பு பட்டம் பதவிகளையும் எண்ணி, எண்ணி, ஏங்கி, ஏங்கி, ஓடி நாடி தேடுகிறீர்களே இவை அனைத்தையும் தந்த இறைவனை மறந்து விட்டாயே இது என்ன நியாயம்? கொடுத்தவைகளை நினைக்கிறாய்! கொடுத்தவனை மறப்பது பொருந்துமா?

கேள்வி:— ஐயா எனக்குப் புத்தி வந்தது இப்படி ஒரு பொன்மொழியை நான் இதுவரை எவரிடமும் கேட்டதும் இல்லை எவரும் சொன்னதும் இல்லை! இதை மட்டும் சுருக்கமாக சொல்லுங்கள் பார்ப்போம்?

பதில்:— இன்றைய உலக ஜீவர்கள் பசி, பசி, பசி, அதற்கு. பணம் பணம், பணம், அதற்கு வேலை, வேலை, வேலை இப்படி இவர்கள் வேலைக்கு அலைந்து அந்த வேலையும் கிடைத்து அதனால் பணமும் கிடைத்து, அதனால் தங்கள் பசியாறி அதன் பின் நேரம் இருந்தால் இறைவன் இருக்கிறானா? என தேடுகிறீர்களே! ஏ அறிவு கெட்ட மனுஷா! முதலில் இறைவனை தேடி, அவன் அருளால் வேலை தேடி, வேலையால் பணம் கிடைத்து, அந்த பணத்தால் பசியாறினால் எத்தனை சுகமாக இருக்கும் தெரியுமா?



உ



கேள்வி :— இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் என்ன?

பதில் :— அவசரம், வேகம், மோஹ வெறி தான் காரணம்

கேள்வி :— இவைகளை குறைக்கவும் நிறுத்தவும் இனி மார்க்கம் உண்டா? இனிவருமா?

பதில் :— இனி இவைகளை நிறுத்தவும் குறைக்கவும் மார்க்கம் இனி வரப்போவதும் இல்லை அவை மேலும் மேலும் பெருகி அழிவைத்தான் உண்டுபண்ணும். இவை கலியுக நியதியாகும்.

கேள்வி :— தாங்கள் கூறும் அறிவுரைப்படி நம்பி வைராக்கியமாக நடந்தால். நடந்தவர்களுக்கு இது சுலபமல்லவா?

பதில் :— அவஸியம் சுலபம். இதன் அடிப்படை "தெய்வநம்பிக்கை" தான். அதன் மேல் "<u>எல்லாம் நீயே</u>" என்ற "<u>சர்வார்ப்பணம்</u>" ஒன்றுதான் மார்க்கம்!

கேள்வி :— தாங்கள் கருத்துப்படி அனைத்தும் "<u>அதன் வேலையே என்றால்</u>" நம் முயற்சியில் என்ன இருக்கிறது?

பதில் :— எம் அன்புத் தம்பி! மாயை ஈசன்கை பாவையாக இருந்து அவனுக்கு உபகாரியாக இருக்கிறது. ஆனால் நமக்கு நாம் <u>மனவசப்பட்டிருப்பதனால்</u> அந்த மனதின் பிடியிலிருந்து வெளியேறி முக்தி அடைய நாம்தான் முயற்சியெடுக்கவேண்டும்! இதற்கு அந்த மனதிடம் போராட முடியாது அந்த மனதை இறைவன் திருவடியில் திருப்பி விட்டால் அது சுலபமாக முடியும்.

கேள்வி :— ஐயா! இந்த மனம் உலக நுகர்ச்சிகளிலிருந்து (விஷய வாசனைகளிலிருந்து) விடுபட தாங்கள் நித்திய பாராயண நூலாகிய ரிபு கீதையில் என்ன சொல்கிறது?

பதில் :— இப்போதுதான் நீ உண்மை வழிக்கு வருகிறாய் அன்பனே!

<u>எம் ரிபு சொல்லும் ஓர்பாடல்</u>! 26.

தனது மன முயற்சியினால் பிரம்மாப்யாசம்.
தவறாது செய்து மனோ ஜயம் பெற்றோருக்கே
அனந்த பரவுணர்வுகளும் எளிதாக நிலைக்கும் அல்லால்,
அன்னியர்க்கு எளிதாக நிலைக்காது.
(யாம்) சொன்ன உணர்வு சுகம் தரும் துயரை நீக்கும்,
சுபத்தினும் சுபமாகும் (அது) சுலபமாகும்,
ஜனன மரண விகாரமெல்லாம் இல்லாமல் செய்து நம்மை,
சத் சித் ஆனந்தமயமான பரமாக்கி விடும்!

இதற்கு வேறுவிளக்கம் தேவையில்லை. இந்த மனமுயற்சி உனக்கு எளிதாக அமைக்கவேண்டுமென்றால், இறை உணர்வு, எல்லாம் நீயே என்ற சர்வார்ப்பணமாகும்.



உ



தம்பி! ஏன் இந்த இறைவன் உணர்வை உனக்கு அடிக்கடி தூண்டுகிறேன் என்றால், அழிந்தையாகிய இந்த உடல் உலக பொருட்களை தெரிந்தோ தெரியாமலோ நான் என்னுடையது என புசித்துவிட்டாய். இது இந்த மாயா மனதின் வேலை. எதை வைத்து இந்த உலகை புசித்தாயோ அதை வைத்தே ஐயா! இது உன்னுடையதே என ஒப்புக் கொடுத்தால் தானே அவனும் விடுவான். அந்த பொருளின் இன்பதுன்ப குணதோஷங்கள் உன்னைவிட்டு அகலும். "அது நாம் என்ற உணர்வால் அதை நாடவேண்டும்" உடல் உலக பொருள்கள் உன்னுடையதே என இறைவனிடம் விடவேண்டும். இதனால்?

மண்ணில் வினையால் வந்த தாவம் மண்ணோடு மண்ணாகும்!
பரமோடு ஒன்றிய நாம் அதுவான பரமாகலாம்!!

கேள்வி:— நன்றி ஐயா! இந்த மனோமயற்சியை எப்படி இடையறாது செய்து சாதனை செய்ய வேண்டும். இந்த கேள்விக்கும் தாங்கள் ரிபு கீதையிலிருந்தே விளக்கம் கொடுத்தால் நல்லது.

பதில்:— நன்றி எம் கண்மணியே இப்படி ஆர்வம் உள்ள குழந்தைகளையே யாம் உலகம் முழுவதும் தேடி அலைகிறோம். இதை தவிர வேறு வேலை எமக்கு இல்லவே இல்லை. இக்கோர கலியிலும் இத்தமிழகத்திலும் மேலை நாட்டவர்களிலும் அனேகரை பிடித்து எம் வசம் வைத்துக் கொண்டோம் எம்வசம் அகப்பட்டவர்களை எப்படி அவர்கள் திமிறி பார்த்தாலும் எங்கு ஓடினாலும் யாம் விடமாட்டோம் அவர்களை (வினையும் மனமும்) சாப்பிட்டே தீருவோம் எப்படி புலிவாயில் போன மாமிசம் எப்படி அதனிடம் இருந்து தப்ப முடியாதோ அதே நிலைதான் அவர்களுக்கும் நியமம். இனி இதற்கு ஓர் பாடல் சிந்தையுடன் கேட்பாயாக.

பாடல் 23. மனோஜயமே திடமாக கிட்டும் மட்டும்,
மற்றுள்ள (உலக) வியாபாரம் அனைத்தும் விட்டு;
அனுபவமாய் யாவும் சித் அது நாம் என்றே,
(மிக) விருப்பமாக இடைவிடாது சிந்தை செய்தால்;
மனோஜயமான மஹத்தான (ஸ்வய) அறிவு உதிக்கும்.
இத்தன்மையினால் ஜகம் (என்ற) அஞ்ஞான இருள்மறையும்;
அருணோதயம் ஆகிவிட்டால் (மாயை) இருள் எங்கேனும்
இருக்கிறதென உன்னால் சொல்லமுடியுமா?

இப்பாடலின் பொருளை சற்று விளக்குகிறேன் உணர்

# அருளுரை



உ (80)

சென்ற பாடலின் சொன்னபடி நமது மனமுயற்சியினால் நான்
இது சாத்தியமாகுமே என்றிமற்றும் மந்திர, தந்திர, யோக
தியான, ஜெபதவத்தை, அஷ்டசித்தி, ஆச்சார அனுஷ்டான,
வேத புராண, இதிகாச ஆகம முறைகளும் நூல்களும்
ஆகவே ஆகாது மேலே கூறியவை அனைத்தும்
சக்திகளை கொடுக்கும், சாந்தி அமைதி ஆனந்தம் கொடுக்காது
சர்வார்ப்பணத்தில் தாவ வினைகளை விட்டு;
நாம் அந்த ஒன்றே என்ற திடஞானத்தில் மனதை செலுத்தி,
தைவதரைப் போல் சிந்தித்து சிந்தித்து சிவமே ஆவாய்
என்ற நிலையிலும் பாவித்து பாவித்து பரமே ஆவாய் என்ற
நிலையிலும் இருந்தால் மனம் மறந்தாலும் நாம் அது ஆவோம்
இந்த அப்யாசம் திடமாகும் மட்டும் அனைத்து வியாபாரத்தை
யும் விடச் சொல்கிறார் இதை உணரவும்!
வியாபாரம் விட்டு:— எண்ணம் சொல் செயல் இவை மனதினால்
நடைபெறுவதால் மேலே சொன்ன சர்வார்ப்பணத்திலும், நாம்
அந்த ஒன்றே என்ற திடஞானத்திலும் சார்ந்திருப்பதுவே
மனவியாபாரம் ஒழிந்த நிலையாகும்! "நான் என்னால் என்னுடையது"
என்ற மனோ எண்ண வியாபாரத்தை விடுவதே மனோவியாபாரம்
விடும் நிலையாகும். இப்படி பூரணமாக விட்ட நிலை பெற்றுவிட்டால்
மனோஜயம் ஆகிவிடும். மனோஜயமே மனம் மறந்தான நிலையாகும்
இந்நிலை பெற்றுவிட்டால் அஞ்ஞான இருள் எப்படி இருக்கும்?
"மனோஜயமே சூரியஉதயம்", "அஞ்ஞானமே இருள்". ஞானசூரியன்
உதயமாகிவிட்டால் அஞ்ஞான இருள் இருக்காது இது உறுதி!

கேள்வி:— ஐயா! இப்படி அப்யாசங்களை செய்வதற்கு எதை அடிப்படையாக
கொள்ள வேண்டும்? எப்படி மன எண்ணங்களை சத்தாக்கி தைவதரைப்
போல் சிந்திக்க வேண்டும் அதையும் ஓர் பாடலில் விளக்கம் தந்தால்
நான் சாந்தியும் அமைதியும் அடைவேன்.

பதில்:— அதற்கு இப்பாடலை கவனிப்பாயாக பாடல் 19.

தீங்கான சித்தம் (மனம்புத்தி) முதல் எவையும் இல்லை,
திரிசியமாய் (கண்ணுக்காணும்) ஜகமும் இல்லை,
அஹங்காரம் (அபிமானம்) அணுவும் இல்லை,
(இந்த) அறிவமே அகண்ட பரப்பிரம்மம் நான்.
(என்ற நிலை)
நீங்காமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற,
நிமல அறிவான பரம் நாமே என்று,
தூங்காது தூங்கும் நிலை கிட்டுமட்டும்,
தொடர்பாக சிந்தித்து சாந்தனாவாய்!



உ



தம்பி! இப்பாடலை சற்று சிரத்தையுடன் சிந்திக்க வேண்டும்
முதலில் மனம் புத்தி சித்தம் அஹங்காரம் இல்லை என்கிறார்.

கேள்வி:— இதில் ஓர் சந்தேகம் மனம் வேறு, புத்தி வேறு, சித்தம் வேறு, அஹங்காரம் வேறு என நான்காகப் பிரித்துச் சொல்கிறீர்களே! இவை அந்தக்கரணங்கள் எனவும் நான் அறிவேன். இவை நான்கும் எண்ணங்களின் அடிப்படை தானே? எண்ண வடிவம் தானே பின் ஏன் நான்காகப் பிரிக்க வேண்டும்? அவைகளை ஒட்டு மொத்தமாக மனம் என்றே சொல்லி விடலாமே?

பதில்:— உண்மை தான் தம்பி மனம் என்றே சொல்லி விடலாம். ஆனால் அவை நிலை கண்டு செயல்படுவதால் நாமும் அந்நிலை கண்டு ஒவ்வொன்றாக அழிக்கமுடியும். எப்படி ஓர் விறகு குச்சியை தனியாக இருந்தால் சிரமம் இல்லாமல் ஒடித்து விடலாமோ, அதுபோல பல விறகுக் குச்சிகள் ஒன்றாக சேர்ந்தால் எப்படி ஒட்டு மொத்தமாக அவைகளை ஒடிக்கமுடியாதோ, அத்தன்மை போன்று இந்த மனம் நான்காக செயல்படுவதால் அவற்றை அழிப்பது சற்று கடினமே. இம்மனதை நான்காகப் பிரித்து விட்டால் அதன் பலம் போய்விடும். அச்சமயம் நிலை கண்டு இடம் கண்டு இந்த நான்கையும் தனித்தனியாக அழித்து விட்டால் அவ்வியம் இந்த மனம் அழிந்துவிடும்.

கேள்வி:— இது நல்ல முறை தான் அதன் விளக்கத்தை சற்று சுருக்கமாக தெளிவான முறையில் சொல்லுங்கள்

பதில்:— அன்புத் தம்பி! இதைக் கவனி!

மனம்:— "எண்ணம்" என ஒன்றே உதாரணமாக ஓர் கூடையில் வாழை, மாதுளை, கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள் என இன்னும் பல ரக பழங்கள் இருக்கின்றன வைத்துக் கொள். இவைகளை ஒட்டு மொத்தமாக பழங்கள் என ஒரே எண்ணத்துடன் இருப்பது "மனம்"

புத்தி:— ரகரகமாகப் பிரித்துப் பார்ப்பது இது "கற்பனை" அதாவது அக்கூடை பழங்களை இது இன்ன பழம், இது இன்ன பழம் என ரகரகமாக கற்பனை வடிவில் எண்ணுவது "புத்தி"

சித்தம்:— அப்படிப் பிரித்துப் பார்ப்பதை அதாவது அந்த கற்பனை எண்ணத்தை உறுதியாக நிச்சயிப்பது "சித்தம்"

அஹங்காரம்:— அப்படி கற்பனையால் நிச்சயிக்கப்பட்டதை "நான்" வாங்கினேன். "என்னால்" தான் ஆனது, என்பது அஹங்காரமாகவும், இவை "என்னுடையவை" என சொந்தம் கொண்டாடி ஓர் பந்தத்தை உண்டு பண்ணி, ஓர் பாசத்திரையிட்டு மூடி, அவைகளை ஜீவத்தன்மைக்கு வினைகளாக்கி ஜனனமரண சாகரத்தில் ஆழ்த்துவது இந்த அஹங்காரமும் அபிமானமும் ஆகும்!



உ



கேள்வி:— ஐயா! இந்த கதை வேடிக்கையாகவும் இருக்கிறது அதே சமயம் விநோதமாகவும் இருக்கிறது. ஓர் பழமொழி உண்டு "வேலிக்கு ஓடும் ஓணானை தன் தலையில் எடுத்து விட்ட கதை" எப்படியோ அப்படி அல்லவா இருக்கிறது இக்கதை. சும்மா ஓரொண்ணுந் தோடு இருக்கும் மனதை விரிவடையச் செய்து இப்படி கூத்தடித்தால் பின் ஆண்மா வராமல் என்ன செய்யும்? அப்படியானால் இதை எப்படி அழிக்கலாம் என சொல்கிறீர்கள்? அதையும் சீக்கிரம் சொல்லுங்கள்?

பதில்:— என்ன அவசரம் தம்பி? சற்று நிதானமாகக் கேள். நன்கு கவனி. "மனம் பிறந்த இடம் மாயை" "மனம் புகுந்த இடம் அஹங்காரம்" புகுந்த இடத்தில் சகவாச தோஷத்தால் இந்த மனம் கெட்டுப் போகும் நிலை ஏற்படுவதால். அதை அது பிறந்த இடமாகிய மாயையிடமே விட்டு விடுவது நல்லது.

கேள்வி:— சற்று புரியவில்லையே அதன் விபரத்தையும் சற்று விளக்கினால் நல்லது. பிறந்த இடம்; புகுந்த இடம். நல்ல ஜோக் தான். வெகு ரஸனையாக இருக்கிறது!

பதில்:— (சிரித்துக் கொண்டே) மனம் பிறந்தது மேலான மாயை இடமே. இறைவனின் சாயை (நிழல்) மாயை. மாயையின் சாயல் மனம். இந்த மனதை சித்தம், புத்தி அஹங்காரம் என பின் நோக்கி (புகுந்த இடம் நோக்கி) தள்ளாமல் அது பிறந்த இடத்திற்கு அனுப்பி விட்டால் அந்த மாயையாகிய தாய் தம் மகளைத் தானே வைத்துக் கொள்வாள். வெளியில் விடமாட்டாள். எப்படி என்றால், கற்பனையை ஓட விடுவது பின் நோக்கித் தள்ளுவதாகும். எந்த கற்பனையும் விரிக்காமல் ஒவ்வொன்றை கண்டவுடன் இது மாயையின் விநோத சிருஷ்டியே! இது இறைவன் உடைமையே! இது நாமரூபத்தில் பழங்களே! இது நாமரூபம் அற்ற இடத்தில் ஜடசொரூபமே! (அறிவற்றதே) ஜடம் மண்ணே! மண் உயிர் அணுக்களே! உயிர் அணுக்களோ ஆத்மா! ஆத்மாவின் முதலிடம் பரமாத்மா! பரமாத்மாவின் முடிவிடம் பரப்பிரம்மம்! அது அந்த காலாதீத ஒன்றே! அதுவே அண்டரண்ட, பிண்ட, சராசரம் அனைத்தும் அந்த காலாதீத ஒன்றே! "அதுவே நாம் நாமே அது" என்று உன்னை முடித்துக் கொள்.



உ



கேள்வி:- இதுபோதும் ஐயனே! நல்லதெளிவான விளக்கம் இனி இந்த மனம் போனபோக்கில் நான் போகமாட்டேன் அதை என் வசம் திருப்பிக் கொள்வேன் இந்நிலை பெற நான் எப்படி தியானம் செய்ய வேண்டும் அதற்கும் நீர் கீதையிலிருந்து ஓர் பாடலை தந்தால் நல்லது

பதில்:- நல்லது மகனே நல்லது! பெரு ஆர்வமுடன் இருக்கிறாய் ஏழ் அன்புக் குழந்தைகளில் நீயும் ஒருவன் ஆகிவிட்டாய் "நீயும் ஜீவன் முக்தனே" இனி இப்பாடலை கவனி பாடல் 30

பாடல் 30. கறையற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை!
(நீ) காண்பதுவும் கேட்பதுவும் எவையும் இல்லை.
நிறைவுற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை!
(நீ) நினைப்பதுவும் நினையாததும் எவையும் இல்லை.
மறையற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை!
(இங்கு) மற்றதெய்வம் ஒருகாலும் இவவே இல்லை.
குறையற்ற (அந்த) பரப்பிரம்மம் நாமேஎன்று
கோதறவே (சிரமம் இல்லாமல்) எப்போதும் தியானம் செய்வாய்.

எம் அன்பு மகனே! யாம் முன்பு சொன்ன பாடலின்படி நீ காணும் "ஓர் உருவமாகப் பார்" அதாவது மலைகள், மரங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் என ஒன்றாக பார்த்தால் இந்த பன்மையாகிய வித்தியாசமான, வகை வகையான விசித்திரமான, வினோதமான விபரீதமான "நாம ரூபங்கள் மறையும்" (அவன் இடைமறித்தான்)

கேள்வி:- ஆமாம் ஐயா! பேசி விளக்கும் காலங்களில் வகைவகையாக பிரித்துச் சொல்லாவிடில் அர்த்தம் அனர்த்தமாகுமே! அதற்கு என்ன செய்ய வேண்டும்!

பதில்:- எம் அன்பு மகனே அப்படிக் கேள்! உனக்கு இரண்டு நேத்திரம் உண்டு. உன் புறக்கண்களை மட்டும் யாம் இரண்டு என குறிப்பிடவில்லை! புறக்கண்கள் மனக்கண்ணாகும்! அகக்கண் அது அறிவுக்கண்ணாகும். புறக்கண்களைக் கொண்டு வியவகாரத்தில் ஈடுபட வேண்டும். அகக்கண்ணை (அறிவுக் கண்ணை) கொண்டு "உள்முகமாக ஒவ்வொன்றையும்" அனைத்தும் பதுமையே என்றும். அப்பதுமை மண்ணாலானது என்றும். அம்மண் ஜீவ அணு என்றும், அச்ஜீவ அணுவே ஆத்மா என்றும், அந்த ஆத்மாவே நாம் என்றும் "நாமே அது அதுவே நாம்" என்ற



உ



"ஓர்மித்த ஜபத்தை" (நிஷ்டையை, தியானத்தை) தைலதாரை போல் சிந்தித்த வண்ணமிருக்க வேண்டும். இந்த ஜபத்தில் நீ ஓர்மித்து விட்டாயானால் உலக நாமரூப காட்சிகள் சீக்கிரமாக அடிபட்டுப் போகும்!

கேள்வி:— ஐயா! இதுதான் தியானமா, இதுதான் ஜபமா? இதுதான் நிஷ்டையா? மற்றும் முன்பெல்லாம் சொல்வீர்களே "அகம் பிரம்மம், பிரம்மம் அகம், அகமே எல்லாம்" !!! அது தேவை இல்லையா?

பதில்:— சரியான குழந்தை தான் நீ! எம் அன்பே! அகம் பிரம்மம், பிரம்மம் அகம், அகமே எல்லாம் இது "மூலமந்திரம்", மேலே சொன்னபடி பிரித்தறிந்து ஒன்றுபடுத்துதல் "உணர்வு மந்திரம்". புரியவில்லையா?
முந்தையது "மூலவர்", பிந்தையது "உற்சவர்". மூலவர் அசையமாட்டார் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு அனைத்தையும் ஒன்றுக்குவார்.
உற்சவர் உலகமெல்லாம் சுற்றி சுற்றி அதன் "குணதோஷங்களை" அகற்றி அந்த ஒன்றுக்குவார். இதுதான் ஆத்மஞான விளக்கம். இதுதான் அத்வைத ஸ்தாபிதம்.

கேள்வி:— இவைகளெல்லாம் ஏன் தாங்கள் முன்பே அறிவுறுத்தவில்லை? இப்போது சொல்லும் காரணம் என்ன?

பதில்:— முன்பு நீ பக்குவப்படவில்லை. அப்போது சொன்னால் உனக்கு அறியும் திறனில்லை. இப்போது உன்மனமே பக்குவம் அடைந்தே இவற்றை உணர்ந்திடும்.

கேள்வி:— இது வெகு வெகு தெளிவாக இருக்கிறது. உடனே பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. இனி இது அகலாது ஐயா! மேலும் விளக்கி அருள வேண்டும்.

பதில்:— அந்த பாடலின் விளக்கம் தனை முடிவு பெற்று விட்டதே. அதாவது நீ காண்பதோ, கேட்பதோ, நினைப்பதோ, அது பற்றி பேசுவதோ, மற்றும் அனைத்தும் பதுமையே, அவை புண்ணிய பாப வினை ஆட்டமே, அவை அனைத்தும் மண்ணே, அவை ஜீவ அணுவே, அது ஆத்மாவே, "அது நானே நானே அது" இத்துடன் ஞானம் முடிவுற்றது!



2 (85)

கேள்வி:— ஐயா! ஐயா! முடித்து விடாதீர்கள் இந்த "மரமண்டை" இப்போதுதான் கனிய ஆரம்பித்திருக்கிறது. இன்னும் ஞான அநுபவங்களை உணர்த்தி கனிந்த ஞானக்கனி ஆக்கி விடுங்கள் என கெஞ்சியது அக்குழந்தை!

பதில்:— இப்போதுதான் கனியாகி விட்டாயே பிறகென்ன?

கேள்வி:— இப்போதுதான் யாம் யாமாக இருக்கிறோம். அது நீ என ஆக வேண்டாமா? அதுவே அனைத்துமாக வேண்டாமா? இப்போதும் உங்களையும் எம்மையும் இவ்வுலகத்தையும் திரிபுடியாகத்தானே பார்க்கிறோம் இவைகளை அனைத்தையுமே ஒன்றாக உணர வேண்டாமா?

பதில்:— குழந்தே! உன்னிடம் விவேகமும் இருக்கிறது, மேலும் மேலும் ஆர்வமும் இருக்கிறது! நற் கவனமும் இருக்கிறது! இங்கு இரு பாடல்களையும் இணைந்தே தருகிறோம் அதிகவனமுடன் கேட்பாயாக. பாடல் 51ம் 52ம் ஆகும்.

ஒருபொருளும் ஒருகாலும் ஜனிக்கவில்லை
அப்படி ஜனியாதது இருப்பது எங்கே?
விரிவடைந்து ஜனிக்காத எப்பொருளும்
அது கெட்டுப் போயிற்று என எப்படி சொல்வதுவும்?
எப்பொருளும் எங்கேனும் இருக்குமானால்
இது இப்படி இருக்கிறதென சொல்ல வேண்டும்?
(அந்த) சித்சொரூபமே அல்லாது ஒரு பொருளும்
அநுபவமில்லாத தன்மையினால் இங்குவாக்குக்கு இடம்

கேள்வி:— ஆகா! ஆகா! வெகு அற்புதம்! அற்புதம்! இஃது நல்ல விளக்கம் எம் ஐயனே நல்ல விளக்கம்!

பதில்:— எம் செல்வமகனே! நீ உலகத்தின் எப்பொருளை கண்டாலும் அது பற்றி காதுகளால் கேட்டாலும், விளக்கம் பலபல பெற்றாலும் எது ஜனித்தது? எது இருந்தது? எது மாறியது? எது கெட்டுப் போனது? இப்படி நீ உணர்ந்தால் உன் ஐயப்பாட்டிற்கோ, கேள்விகளுக்கோ, அதன் விடைகளுக்கோ அர்த்தமற்றுப் போகும். இவ்வுலகம் "வியவகாரஸத்யமே" அல்லாது உண்மையில் எதுவும் இல்லை என்று உறுதியாகும் இதை உன் மெய்யறிவால் உணர்.



(86)

உ

கேள்வி:- ஐயா தாங்கள் சொன்ன பாடல் விளக்கம் அபூர்வமாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது. இங்கு எம் எண்ணத்தை எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும்?

பதில்:- உன் கேள்வியின் ஆர்வமும், மனதின் ஏக்கமும் எம்மால் உணர முடிகிறது. மற்ற குழந்தைகளும் அங்கே எம் வரவுக்காக காத்திருப்பார்களோ? ஒருவேளை அவர்களே இங்கு எம்மை தேடியே வந்தாலும் வரலாம்?

கேள்வி:- தாங்கள் தரிசனமும் தாங்களின் அண்மையும் பெற்ற அந்த உத்தமோத்தமர்களையும் யாம் காணும் பாக்யம் பெற்று வேறென்ன வேண்டும்? அப்படியே வந்தாலும் எம் பாக்கியமே! தாங்கள் ரிபு கீதையை கேட்க கேட்க எம் இதய தாபம் மேலோங்குகிறது. விஷய வாஸனைகள் அடிபட்டுப் போகிறது. தாங்கள் தயவு செய்து இந்த விளக்கத்திற்கு மட்டும் விளக்கம் சொன்னால் போதும்? எம் அப்யாசம் எப்படி இருக்க வேண்டும்? அதற்கும் ஓர் பாடல் தாருங்கள்?

பதில்:- நல்ல சத்தான குழந்தையாகத் தான் இருக்கிறாய். உன் அன்பு எம்மை எங்கும் தெவிட்டாமல் பிணைக்கிறது. அவர்கள் பேரன்பு எம்மை அங்கே இழுக்கிறது. யாம் என்ன செய்வதென்றே தெரியவில்லை?

கேள்வி:- இங்கு யாம் ஒருவன் இது வெறும் அன்பாக தோன்றுகிறது. அங்கு பலர் இருப்பதனால் அது பேரன்பாக இழுக்கிறது போலும்? பரவாயில்லை யாமும் இனி பேரன்பாக மாறிக் காட்டுகிறோம்! அவர்களாவது உங்கள் அருகாமையிலேயே அமரும் பாக்யம் பெற்றவர்கள். யாம் தனிமைதானே எனப் பார்க்கிறீர்கள் போலும்? கைலாயத்தில் பலபேர் இருந்தாலும் பழனியில் நின்ற அன்புதானே எம் பெருமானையே இழுத்தது இது தாங்கள் அறியாததா?

பதில்:- நீ எங்கெங்கெல்லாம் சொல்லி உதாரணம் தருகிறாய்? என்ன இருந்தாலும் உன் பேரன்புக்கு யாம் தலை வணங்குகிறோம். சரி உன் கேள்விக்கு இங்கு யாம் மற்றொரு பாடலையும் தருகிறோம் கவனமுடன் கேள்.

# அத்வைதத்தின் சிறப்பு



உ 

பாடல்56.

சந்ததம் நாம் பரப்பிரம்ம சொரூபமன்றி
சரீரேறும் சம்சாரி அல்லவென்று
இந்தவிதம் அறிவுற்று ஜலத்தில் சேர்ந்து அங்கு
ஏகரஸமாகின்ற லவணம் (உப்பு)போல
அந்தமில்லா அகண்ட பரப்பிரம்மத்தின் கண்
ஐக்கியமே அடைந்த மனோ விருத்தி தானே
(எம்) மைந்தா அகண்டாகார விருத்தி யென்று
மாசற்ற ஞானிகளால் மதிக்கலாகும்.

எம்குழந்தாய்! தூல விருத்திகளை (எண்ணங்களை) விட்டால் தான் சாட்சி விருத்தி பெறமுடியும். தூல எண்ணங்கள் இருக்கும்வரையிலும் சாட்சி (தெய்வ) நிலை பெறமுடியாது. தெய்வநிலை (சாட்சிநிலை) பெற்றால்தான் அகண்டநிலை (சர்வசாட்சிநிலை) பெறமுடியும். இதுவே அகண்டாகார விருத்தி எனசொல்வார்கள் ஞானிகள். இதுஎப்படி பொருந்தும் எனில் நன்குகவனி!

1. உப்புப்பதுமையாக (நாமரூபமாக) தம்மை கண்டால் அது தூலவிருத்தி அதுவே காட்சிவிருத்தி.
2. தம்மை வெறும் உப்பாக மட்டும் அறிந்தால் அது சாட்சிவிருத்தி அதுவே தெய்வநிலை. இங்கு உப்பு ஒன்றுமட்டும் உண்டு நாமம் மட்டும் உண்டு. அதை இன்னது என விவகரிக்க பதுமையாகிய ரூபம் இல்லை. அதே உப்பை ஜலத்தில் இட்டு கரைந்துவிட்டால் ரூபமும் இல்லை நாமமும் இல்லை அங்குகண்களால் காணவோ இதுவென விளக்கம் கொடுத்து அறியவோ முடியாது போய்விடும். அச்ஜலத்தை நாவில் வைத்து சுவைத்தால் மட்டும் உணர்வு ஒன்றே உண்டு.
3. தம்மை நாமரூபமாக காணாமலும் அறியாமலும், நாம் அது என்ற பேருணர்வாக இருப்பதே அகண்ட விருத்தியாகும் அதுவே சர்வசாட்சியாகும்; அதுவே அகண்டாகார விருத்தியாகும். இப்படி இச்சகநாமரூபத்தை நீக்கி நீக்கி



உ



உள் உணர்வாக உணர்ந்து உணர்ந்து உள் கடந்து
உள்கடந்து நாம் செல்லில் நாமே கடவுளாகமுடியும்.

கேள்வி:- ஓம் ஐயனே மிக மிக தெளிவான விளக்கம் இந்த சிவ
கீதையில் இத்தனை விளக்கமாகவும் மிக மிக எளிமையா
கவும் இருப்பதை இன்றுதான் யாம் உணருகிறோம். நன்றி
மிகவும் தாங்களை சிரமப்படுத்தி விட்டோம். எமக்கு
முடிவாக அதிமட்டம் வழங்கிச் சொல்லுங்கள் என
அக்குழந்தை கனிந்த உள்ளத்தோடு கேட்டது.

பதில்:- எம் செல்வா! எம் அருகில் வா எனக்கூறி அதை உட
லெல்லாம் தடவிக் கொடுத்து நலம் பெறுவாய் அகம்
பெறுவாய்! இதன் முடிவுரையாக யாமே ஓர் இரண்டு பாடல்
களை தருகிறோம் இதுவே எம் சிவகீதையின் முடிவுரை
யும் ஞானசூத்திரமாகும் அதன் பாடல்கள் 105ம் 107ம்
ஆகும். இவ்விருபாடல்களே முடிவுரை!

105. நின்னிடையே நிச்சலமாய் நிலைத்து நிற்கும்
நிலைமையதே நிகரற்ற மோட்சமாகும்.
தன்னிடையே தானாக தனித்திடாமல்
கடவுளையே சலிப்பதுவே பந்தமாகும்.
உன்னிடமே ஓர் உருவாய் உன்னையன்றி
அசைவு தரும் காரணம் ஓர் அணுவுமில்லை.
அன்பனே! ஆதலினால் நீ எப்போதும்
உன்னிடமே தானாக தனித்து நிற்பாயாக.

107. நிச்சலமாம் நிச்சயமே அகண்டானந்த
நிலைமையெனும் நிகரற்ற ஏதுவாகும்.
(இ) உறுதியான நிச்சயமே செய்யச் செய்ய
உலகு முதல் துவைதத்தின் தோற்றம் நீங்கும்.
அசைவான துவைதத்தின் தோற்றம் நீங்கின்
குறைவற்ற ஆனந்தம் ஸ்வயமாய் தோற்றும்!!!
பயமற்ற நிச்சயமே செய்து இங்கு அதனால்
அகண்ட பிரம்மானந்தம் அடைந்து வாழ்வாயாக!!!

# அத்வைதத்தின் சிறப்பு



உ

(89)

எம் செல்வா!

"நாம் அது, அது நாம்" எனவும், உன்னிடமே உனக்கயலாக எதுவும் இல்லை இல்லை எனவும் சர்வ சதா நிலைத்து நிற்பது தான் மோட்சமேயல்லாமல் வேறு மோட்சம் இல்லவே இல்லை.

இப்படி "நாம் அது, அது நாம்" நிச்சயம் உறுதிபடாமல் சதாவும் ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளை தமக்கன்னியமாய் உப்பைப் போலும் உப்புப் பதுமையைப் போலும் நாமரூப குணமாய் கற்பனை பண்ணினால் அது சர்வ சதா அசைக்கின்ற சமுத்திரம் போலவாகும். அதுவே பந்தமாகும்.

பிரமாணமாகச் சொல்லுவேன், "**உன்னிடம் உன்னையன்றி**" அசைக்கின்ற காரணம் எதுவும் இல்லவே இல்லை. (அப்படி அசைப்பது எண்ணமும், எண்ணத்தால் விரிந்த கற்பனையும், அந்த கற்பனையை உண்டு உண்டு என உறுதி செய்யும் நிச்சயமும். அந்த உறுதி நிச்சயம் செய்ததை "நான் என்றால் என்னுடையது" என்ற அகங்காரமும் தற்காலிகமாக வந்தது, இருந்ததும் போல் தோன்றியது பின் காணல் ஜலமென மறைந்து விட்டதென) உனக்கன்னியம் எதுவுமில்லை என்ற நிச்சயமே உறுதி; அதுவே சாதனை, அதுவே சாத்தியம்; அதுவே ஸ்வய அனுபவம், அதுவே முடிந்த முடிவான மோட்சம்.

இவ்விதமாக உன்னிடமே உறுதியாக அசைவற்று ஏகாக்ரச் சிந்தமாக இருப்பாயாக!

×—×—×—×

இப்படியாக உறுதி நிச்சயம் திரும்ப திரும்ப செய்தாயானால், அகண்டானந்தமாகிய பிரம்மானந்தம் நீ அவஸ்யம் பெறுவாய்.

இப்படிப்பட்ட உறுதி நிச்சயம் நீ திரும்ப திரும்ப செய்தாயானால் உன்மன அசைவைக் கொடுக்கின்ற துவைதமான ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின் தோற்றம் கட்டையில் தோன்றிய கள்வன் போலும், சிப்பியில் தோன்றிய வெள்ளி போலும், கயிற்றில் தோன்றிய சர்ப்பம் போலும், கல்லில் தோன்றிய நாய் போலும் அனைத்தும் மறைந்து அவைகளுக்கு ஆதாரமாகவும் அதிஷ்டானமாகவும் தோற்றியவை அனைத்தும் நம் சித்சொரூபமே (ஆன்மாவே) என்பது படிப்படியாக மறைந்தது **ஒரே விநாடியில்** அதுவில்லாமல் நாம் நாமாகயிருப்போம்.

இப்படி அசைவான தோற்றங்கள் நீங்கிவிட்டால் அசையாததான, குறைவில்லாததான, மறைவில்லாததான, ஸ்வயம் பிரகாசமான நாமே அனைத்துமாவோம். அங்கு அனைத்துமிராது நாம் நாமாவோம்.

இதுவே பயமற்ற நிச்சயம், அதுவே மரணமற்ற நிச்சயம், இதுவே அகண்டாகார நிச்சயம். அதுவே நீ, நீயே அது, நீயே யாவும், யாவுமே நீ!





என இந்த பிரம்மானந்த வாரியில் மூழ்கி கரைந்த நிலையில் அந்த பாறைகளில் விட்டு எழுந்து எம் குழுவால் தாளமிட்டபடி நர்த்தனம் செய்தோம், ஆடினோம், கூத்தாடினோம், ஆனந்த நர்த்தனம் செய்தோம். அருகில் அமர்ந்து பாடல் கேட்ட அந்த குழந்தையையும் காணோம். திசைக்கு நோக்கி கவியாக இருந்தவனை நோக்கினோம். அவன் தம் துதிக்கையையும் மற்றும் இருகரங்களாலும் மேலே தூக்கியபடி

**"நலம், சுகம்! நலம், சுகம்! நலம், சுகம்! நலம், சுகம்!"**

என ஆசிர்வதித்தபடியும் தம் தோளில் மாட்டியிருந்த மத்தளத்தால் மேலும் இருகரத்தால் தாளம் போட்டவண்ணம் **"நர்த்தன கணபதியாக!"** ஆடிக்கொண்டிருந்தான்.

**பார்வையில் துவைதம் தோற்றியது!!**

**உணர்வில் அத்வைதமாக மாறியது!!!**

அனைத்தும் ஒன்றே; அது நாமே, அது நீயே அனைத்தும் யாமே!!!

## 12. தெய்வத்தின் கருணை.

ஓர் பக்தன் ஸ்ரீபகவத் பிரேமையில் ஊறியவனும் எந்த நொடியும் ஸ்ரீபகவத் சிந்தனையும், நாமபஜனையும் செய்தவனும் அந்த ஸ்ரீபகவானையும் தரிசிக்கும் பாக்யமும் பெற்றவன். ஓர் நாள் சரீர அசதியினால் படுத்திருந்தான். அந்நிலையிலும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை. நீட்டி நிமிர்ந்து படுத்தவண்ணம், தம் இருகரங்களையும் தம் மார்புக்கு நேராக வைத்து தாளம் போட்டவண்ணம், ஓர் நாம சங்கீர்த்தனம் உரக்க பாடியவண்ணம், தம் கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோட, பாடி ஆனந்தித்தான்.

இவன் உள்ள உருக்கத்தினால் அங்கு ஸ்ரீபகவானுக்கும் சும்மா இருக்க முடியவில்லை போலும்? ஸ்ரீபகவானும் அந்த உண்மை பக்தனின் திருவடி தம்மீது படும்படிக்கு அருகில் நெருங்கி அமர்ந்து கொண்டு அந்த பக்தனின் "திருவடியை தம் கமலக்கண்களால் தரிசித்த வண்ணம்" அமர்ந்து கொண்டு தம் கரங்களால் தாளம் போட்டுக்கொண்டிருந்தான் (அந்த பக்தனின் பாதங்களும் தாளம் போட்டு அசைந்த வண்ணம் ஸ்ரீபகவானின் தொடைகளில் உரசிக் கொண்டிருந்ததை அந்த பக்தன் அறியானே)

**"இது ஸ்ரீபகவத் பிரேமையின் மஹிமையாகும்"**



உ



இந்த பக்தனுக்கோ ஸ்ரீ பகவன் நாமஸ்மரணையினால் தம் உடல் ஸ்மரணை விட்டுப் போய் விட்டது. ஓர் பாடல் முடிந்து மறு பாடல் ஆரம்பிக்கும் போது அந்த இரண்டொரு வினாடிகளில் அந்த பக்தனுக்கு சேதன சக்தி வந்தது போலும்? தெய்வாதீனமாக தம் திருவடியை நோக்கும் போது ஸ்ரீ பகவான் தம் பாதங்களின் அருகே உரிய வண்ணம் அமர்ந்திருப்பதை உணர்ந்தான்.

உடனே சரேலென தம் கால்களை இழுத்துக் கொண்டு ஸ்ரீ பகவான் அமர்ந்திருக்க நாம் படுத்துக் கொண்டு பாடுகிறோமே என உணர்ந்து தாமும் அமர்ந்து கொண்டு பாட ஆரம்பித்தான். அந்த பக்தன் அமர்ந்த வண்ணம் தம் தொடைகளை அசைத்த வண்ணம் கரங்களால் தாளம் போட்டபடி கண்ணீர் கொட்ட ஆனந்தமாக ஸ்ரீ பகவானை தம் உள்ளத்திலும் தரிசித்த வண்ணம் பாடினான். இதைக் கண்ட பகவான் அவன் உள்ளும் புறமுமாய் உள்ளே அவன் இதயத்தில் அமர்ந்த நிலையிலும் வெளியில் நின்ற நிலையிலும் காட்சி தந்தான். இரண்டொரு வினாடி பாடலை நிறுத்தி அடுத்த பாடல் ஆரம்பிக்கும் போது ஸ்ரீ பகவான் தம் அருகே நின்ற நிலையில் கரதாளம் போட்டு கேட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தான். உடனே பக்தனவன் ஸ்ரீ பகவான் நின்று கொண்டிருக்க நாம் அமர்ந்திருக்கிறோமே என உணர்ந்து தான் நின்ற நிலையில் கரதாளம் போட்டு பாட ஆரம்பித்தான். கருணைக் கடவுளான எம் இறைவன் இதைக் கவனித்தான்.

பக்தன் நின்று பாடுகின்றானே என உணர்ந்து பக்தன் இதயத்திலுள்ளே நின்ற நிலையிலும் அவன் அருகே நர்த்தனம் செய்தபடி ஆனந்த தாண்டவமாக ஆடி கரதாளம் போட்டபடியும் இருந்தான் ஸ்ரீ பகவான். இப்போது நம் பக்தன் தாம் ஆனந்த கூத்தாடிய நிலையில் பரவச நிலையில் நர்த்தனம் செய்தான். ஆனால் பாட்டு வரவில்லை. அது அப்படியே மணியின் நாதம் போல் ஒடுங்கி விட்டது. அங்கு ஆனந்தம் ஒன்றே நிலவியது. எந்த ஆட்டமும் இல்லை. பாட்டமும் இல்லை. பரவசம் ஒன்றே நிலவியது. உள்ளேயும் வெளியேயும் ஸ்ரீ பகவான் சொரூபத்தை காணும். காரணம் இங்கு பக்தனே ஸ்ரீ பகவான் ஆனான்; ஸ்ரீ பகவான் அது ஆனான். அவ்விரண்டும் ஒன்றானது. இது அதுவானது; அது இதுவானது; இரண்டும் இல்லையென ஆனது.



உ

(92)

ஓர் பக்தன் உடல்சிரமம், குடும்ப கஷ்டம், வறுமை நோய்
இவைகளால் அதிகமாக பீடிக்கப்பட்டான். ஆனால் ஸ்ரீபகவன் நாம
நஷ்டமாகாத் தன்மையினால், அந்த ஸ்ரீபகவந்நாம வாமந்தால்
பேரானந்தம் அனுபவிப்பான். இப்படியே பலகாலம் வாழ்ந்தான்.
குடும்பத்தாலோ உடலாலோ சகிக்கமாட்டாத துன்பம் வரும்போது
அவன் கதறி ஸ்ரீபகவானை அழைப்பான், எப்படியென்றால்?

ஹே ஆபத்பாந்தவா! அனாத ரட்சகா! ஏழைபங்காளா!
தீனதயாளோ! தீனபந்தோ! பக்தவத்ஸலா! பதிதபாவனா! ஹரிஹரி!
என உருகி வேண்டுவான். எமதையனும் அவன் கூப்பிட்ட குரலுக்கு
இறங்கி வத்ஸ! கஷ்டம் வேண்டாம், கவலை வேண்டாம், பயம் வேண்டாம்
கலங்க வேண்டாம், உன்னுடனே யாம் இருக்கிறோம் என்பான் அச
ரீரியாக. எம் பிரபுவே உன்னை காண முடியவில்லையே! உன்
இருப்பை இந்த எளியேனால் உணர முடியவில்லையே. கருணைக்கடலே!
கருணை காட்டுவாய் எம்மை கை விட்டு விடாதே! எமக்கு இங்கு கதி
ஏது? இத்தருணத்தில் எம்மைக் கைவிட்டால் அழிந்தே போவோம்
என கதறி அழைப்பான். எம் இறைவனும் அவன் வேண்டுதலுக்கு
இரங்கி, எம குழந்தாய்! யாம் உன்னை விட்டு அகன்றதில்லை உன்
அருகிலேயே இருக்கிறோம். பயம் வேண்டாம். எந்த நொடியும்
யாம் உன்னை தனியே விட்டு விடமாட்டோம் என கருணை மழை
பொழிய கனியக் கனிய மொழிந்தான் எம் இறைவன்.

பக்தன் கேட்கிறான் எம்முடனே இருக்கிறேன் என்கிறாய்
உன் இருப்பை யாம் எப்படி தெரிந்து கொள்வது? உன் குரல்
மட்டும் எமக்குக் கேட்கிறது, உன்னைக் காண முடியவில்லையே.
நீ எம்முடன் தான் இருக்கிறாய் என்பதை யாம் எப்படி நம்புவது?
எனக் கேட்டான் பக்தன். ஸ்ரீபகவான் சொன்னான் சிரித்துக்
கொண்டே குழந்தே! உன் அருகில் பக்கத்தில் யாம்
உன்னுடன் நடந்து வரும் எம் காலடி தடம் தெரியும்
அதை கவனிப்பாயாக என்றான் எம் இறைவனும் கருணையோடு
இப்போது இந்த பக்தன் ஒவ்வொரு நொடியும் தம் அருகிலேயே
பார்த்துக் கொண்டே நடப்பான். ஸ்ரீபகவான் கால் சுவடு மட்டும்
தெரிவதால் இந்த பக்தன் ஆறுதல் அடைந்தான்.

# தெய்வத்தின் கருணை



உ



ஓர்நாள் தாங்கமுடியாத வறுமை, பிணிக் கஷ்டம் அதனால் மனம்பாதிப்பு; அதனால் உடல் பாதிப்பு; (உடல் வியாதி) இவைகளால் அந்த பக்தன் மிகவும் நொந்து போனான். அப்போது இந்த பக்தன் இப்படி அலறுகிறான்.

ஹே கமலக்கண்ணா! கார்வண்ணா! ஏழைபங்காளா! இந்த ஏழையை கைவிட்டு விட நேனச்சுதறிய வண்ணம் தம் அருகே நோக்கினான். அன்று எப்போதும் பிரத்தியட்சமாக தெரியும் ஸ்ரீபகவான் பாதச்சுவடு அன்று தெரியவில்லை. அந்த பக்தனுக்கு உடலும் உள்ளமும் அதிகம் பாதிக்கப்பட்டு விட்டதாலும் அந்த அந்த ஸ்ரீபகவான் பாதச்சுவடை காணாததாலும் மரணவேதனையுற்றவன் போல் அலறினான் ஐயனே! எம்மை இப்படி கைவிட்டு விட்டாயே? நட்டாற்றில் எம்மை தவிக்க விட்டு விட்டாயே? எமக்கு துணையார்? உன் பாதமே கதியென்றிருந்த எம்மை இப்படி கைவிட்டால் உன்நாமமாலை சொன்னயாம் இப்படி அழிந்து போவதுதான் முறையா? எம்குரல் உன் செவியில் விழவில்லையா? என கத்திக் கதறினான் அந்த ஒப்பற்ற பக்தன்.

எம் ஸ்ரீபகவான் கருணையோடு சொல்கிறான்.
குழந்தாய் ஏன் இப்படி அறியாமையினால் அரற்றுகின்றாய்? எம்மை முழுமையாக நம்பியவர்களை யாம் முக்காலமும் கைவிட்டதில்லை அப்படி இருக்க உன்னை கைவிட்டு விடுவோமா? எம் இருப்பை அறியாமல் இப்படி பிதற்றுகின்றாயே? எம் இருப்பை உணர்ந்த இப்போது உன் கர்ம வினை காரணமாக நீ நிற்கவும் நடக்கவும் சக்தி அற்றவனாகிவிட்டாய். ஆகவே உன்னை எம் தோளில் சுமந்து கொண்டு உன் வாழ்க்கை பாதையில் யாம் நடக்கிறோம். உன்னை யாம் சுமப்பதால் அடுத்த பாதச்சுவடு எப்படி தெரியும்? உன் வினையின் சோர்வும் மனோபாதிப்பும் அதிகமாகிவிட்டதால் தாங்கிச் சுமக்கும் எம் இருப்பை உன்னால் உணரமுடியவில்லை.

**"எம்மை நம்பினோர் கைவிடப்படார்"!!**

என்றான் எம் இறைவன் கருணையோடு.



உ



ஓர்நாள் அப்பக்தனை தம்மடிமீது தலையை வைத்துப் படுக்கும்படி சொல்லி அவன் சிரசை வருடிவிட்டுக்கொண்டு அவனை "ஓர் குழந்தையாக பாவனை" செய்து கொண்டிருந்தான் எம்பிரான் பகவான். எம்பக்தனும் ஓர் குழந்தையென கால்களை மடக்கி தம்மைக் குறுக்கிக் கொண்டு ஏன் ஸ்வாமி இத்தனை அழகாக சேவை செய்கிறாயே! அப்படியே ஓர் சிறிய கதை சொல்லிக் கொண்டு இச்சேவை செய்தால் எம் தலைப் பெல்லாம் போயிவிடுமே என சொன்னான். எம் இறைவனும் சிரித்துக் கொண்டே ஓர் கதை சொன்னான்.

ஓர் ஊரில் ஓர் அரசன். "ஊம்" (இப்படி "ஊம்" கொட்டியது எல்லாம் பக்தன்) அவனுக்கு ஓர் அழகான மனைவி. "ஊம்" அவனுக்கு ஐந்து ஆண்குழந்தைகள். "ஊம்" ரதிபோன்ற மனைவி மன்மதன் போல் பிள்ளைகள். "ஊம்" ஆடம்பரமான வாழ்க்கை. "ஊம்" கஜனாவும் அரசகளஞ்சியங்களும் பணம் நெல் நவதானியம் என குவிந்துகிடந்தன. ஊம் தினமும் அறுசுவையாக வடை பாயசத்தோடு சாப்பாடு. "ஊம்" அவர் இட்ட வேலைகளை செய்ய பலநூற்றுக்கணக்கான வேலைக்காரர்கள். "ஊம்" அங்குமாதம் மும்மாரி பொழியும். "ஊம்" அவ்வூர்மக்களும் நல்ல போகமான ஆனந்த வாழ்க்கை நடத்தினர். "ஊம்" குடிகளுக்கும் எந்த குறையும் இல்லை அரசனுக்கும் எந்த குறைகளும் இல்லை. "ஊம்" ஊர்களில் இருந்தவரும் அரசனுடைய உறவினர்களும் மாதக்கணக்கில் தங்கி அங்கு எந்த குறையும் இல்லாமல் செல்லும்போது பொன்னும் மணியும் பாத்திரங்களும் பட்டாடைகளும் இரகமாக அரசன் கொடுக்க அள்ளிச்செல்வர். "ஊம்" பெண்கள் போகம், பொன்மணிகள் போகம், பிள்ளைச் செல்வ போகம், தானதரும போகம், அஷ்ட லக்ஷ்மியின் போகம் இவை அனைத்தும் ------ ... ஏ பகவானே! ஏ பகவானே! ஸ்வாமி! ஸ்வாமி! உன் கதையை நிறுத்து என்றான் மடியில் இதுவரை ஊம்கொட்டிக் கதை கேட்டுக் கொண்டிருந்த பக்தன்.

ஸ்ரீ பகவான் திடுக்கிட்டு கதையை நிறுத்திக் கொண்டு ஏன் குழந்தே! கதை அதிக ஸ்வாரஸ்யமாய், இன்பமாய், போகமயமாய் எங்கேயோ ஆனந்தமாக போய்க்கொண்டிருக்கிறது! ஏன் கதையை பாதியிலேயே நிறுத்து நிறுத்து என்கிறாய்? இந்த கதை உனக்கு பிடிக்கவில்லையா? இன்னும் இதை விட போகங்கள் நிறைந்த கதைதான் வேணுமா? என இறைவன் சிரித்துக் கொண்டே கேட்டான்?





உ

பக்தன்:— எம்பக்தன் பதிலுக்கு சொன்னான் என்ன சாமி கதை இது?
"உப்புச் சப்பில்லாத கதை" கதையென்றால் கஷ்டநஷ்டம், துன்ப துயரம், கொடுமை வறுமை, அடிதடி சண்டை ஆர்ப்பாட்டம், கிறல், ஊடல், பசிபட்டினி, நோய் நொடி, இப்படியெல்லாம் வரவேண்டாமா? இவைகள் கலந்து இன்பமும் கலந்திருந்தால் கதைகேட்க ஸ்வாரஸ்யமாக இருக்கும் இது கதையா? இதை ரஸிக்க முடியலையே என்றான் பக்தன்

பகவான்:— ஏண்டா குழந்தே! இந்த கஷ்டம், கவலை, துக்கம், துயரம், நோய் நொடி, வறுமை, பசிப்பிணி, இவைகள் நீ கேட்கும்
"**கதையில் வரலாம்**"
"**உன் வாழ்க்கையில் வரவாகாதா**"??
எனச் சிரித்துக்கொண்டே கேட்டான் ஸ்ரீ பகவான்?

பக்தன்:— (அழுதுகொண்டே) உண்மைதான் ஸ்வாமி, இவைகள் வாழ்வில் வந்தால் வாழ்க்கை "**நரகம்**" ஆகிவிடுகிறது, கதையில் கேட்டால் அது "**பொழுதுபோக்காக**" மாறிவிடுகிறது இதன் இயல்பு என்ன பகவானே?

பகவான்:— உண்மைதான் குழந்தாய்! உன் வாக்கு ஸத்யமே! காரணம் என்னவெனில் வாழ்க்கையென்பதில் கர்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும் நேரடியாக பாதிக்கப்படுகின்றன மேலும் புண்ணிய பாப வினைகள் பதிவுபடுகின்றன. "**இங்கு மனம் முழுமையாக**" தாக்கப்படுகிறது. கேட்கும் கதையில் அப்படி அல்ல அங்கு "**ஒலி**" ஒன்றே கதையாக வருகிறது. இதனால் எதுவும் பாதிப்படைவதில்லை. இதே கதையை ஓர் படக்காட்சியாக கண்டாலும் சட்ட பாதிப்படைவதில்லை. படக்காட்சியாக காணும் போதும், அதை ஒலி அலைகளாக கேட்கும் போதும் கண்ணும் காதுமே பாதிப்படைகிறது, மனம் அதிகமாக பாதிப்படையாது. காரணம் அது "**கதையென**"



உ

(96)

தள்ளி விடுகிறோம். உடனே அதை "கற்பனையென" முடிவும் கட்டி விடுகிறோம். இதன் காரணம் என்ன வெனில் இங்கு "வினையும், மனமும்" பாதிப்படையாததே காரணமாகும். எந்த ஓர் சாதனையாளன் இந்த வாழ்க்கையை "நரகமாகவும் சொர்க்கமாகவும்"!! பாவனை பண்ணுமவ் இதுவும் உலகமாகிய T.V.ல் திட்டமிட்டு போடப்பட்ட ஓர் காட்சி வினையின் நிகழ்ச்சியென உறுதி நிச்சயம் செய்வானாயின் எந்த பாதிப்பும் மனதிற்கு வர காரணம் இல்லை. அங்கு மேலே கூறிய பாதிப்பான அனேக குணங்கள் வந்தாலும் முடிந்த கதையை எண்ணுமலும் வரும் கதைகளை கற்பனை பண்ணாமலும் இருப்பதுவே "சாதனையாகும்"!! நடப்பதை அந்த வினாடியே இது நலமே இது சுகமே ஆனால் மனதின் ஆர்ப்பாட்டமானது இப்படி காட்சிகளாகவும் ஒலிஅலைகளாகவும் வருகிறதென குருஅருளாலும், இறைஅருளாலும் அமைதி பெற்று நம் "நாவை அடக்கி" சும்மா சுகமாக இருக்க வேண்டும். பக்தன் அமைதி ஆனான், ஸ்ரீ பகவான் ஸாந்தி ஆனான்!!!

x—x—x—x

இடம் யமுனைஆற்றங்கரை, பிருந்தாரண்ய வனம். ஓர் வயதான மூதாட்டி விறகு பொறுக்கி அதை கட்டாக கட்டி சில வீடுகளுக்குப் போட்டு அந்த வருமானத்தில் ஜீவனம் செய்யும் நிலையிலிருந்தாள் அவளுக்கு உறவு எனசொல்லிக்கொள்ள எவரும் இல்லை போலும்? அவள் சுமக்கும் அளவுக்கு விறகு பொறுக்குவாள் அதை ஓர் கட்டாக கட்டுவாள் அதை தாமே தூக்கி சுமந்து வந்து காலக்ஷேபம் செய்வாள்



உ



ஓர் நாள் விறகு பொறுக்கினாள். அன்று நன்றாக காய்ந்த விறகுகளும், நன்றாக எரியும் விறகுகளும், அவள் சேமிப்புக்கு அதிகமாக கிடைத்தன போலும் அவன் அருளால்? அனைத்தையும் பொறுக்கி ஒரே கட்டாக கட்டிவிட்டாள் ஆனால் அதை அசைக்கமுடிந்ததே தவிர தூக்க முடியவில்லை. தூக்க முயன்றாள் அவளால் முடியவில்லை அக்கம் பக்கம் யாராவது வருகிறார்களா என சுற்றும் முற்றும் பார்த்தாள். எவரையும் காணோம்.

சற்று தூரத்தில் ஓர் செடி மறைவில் ஓர் மயில்பீலி மட்டும் அசையக்கண்டாள். அது கண்ணன் தான் என ஊகம் கொண்டாள். அருகில் போய் பார்த்தாள். அங்கே ஓர் பாறை மீது கால் மேல் கால் போட்டு காலை அசைத்தவண்ணம், கண்களையும் மூடிக் கொண்டு, தலையையும் அசைத்துக்கொண்டு ஒரே சிந்தனையில் எம் கண்ணன் இருந்தான். அடே கண்ணா! இங்கே என்னடா செய்கிறாய் கண்களை மூடிக்கொண்டு தூங்குகிறாயா? தூக்கம் வந்தால் ஓர் மர நிழலில் படுத்து தூங்குவது தானே? ஏன் இப்படி உட்கார்ந்த கொண்டு தூங்க வேண்டும்? சரி சரி இங்கே வா இப்படி, ஓர் விறகு கட்டு இருக்கு அதை என் தலை மீது தூக்கி வைத்து விடு என்றாள்.

கண்ணன்:— ஏன் பாட்டி? இந்த சுமையையா?

பாட்டி:— எந்த சுமையாக இருந்தால் உனக்கென்ன? நீயா சுமக்கப் போகிறாய்? தூக்கித்தான் விடச்சொன்னேன் உன்னை தூக்கிக்கொண்டு வரச் சொல்லவில்லை! ஊம்! தூக்கு என்றாள்.

கண்ணன்:— பாட்டி! இது உன் சக்தியையும் மீறியதாக இருக்கிறதே

பாட்டி:— ஏண்டா கண்ணா? என் சக்தியை என்ன கண்டு விட்டாய்?

கண்ணன்:— ஏ பாட்டி! யார் யார் சக்தி எவ்வளவு இருக்கிறது என்று எமக்குத் தெரியாமல் இருக்குமோ என்ன? உன் வயதுக்கும் உன் சக்திக்கும் இது அதிகமே! அவஸ்தைப்படப் போவது நீயே! அதை நான் கேட்கிறேன். கட்டை கொஞ்சம் குறைத்து கட்டினால் என்ன? அதிக ஆசைப்பட்டால் பின் அவஸ்தையைத்தான் அனுபவிக்க வேண்டும்!



2

(98)

பாட்டி:— ஏண்டா கண்ணா! ஆசைப்படாமல் யார்தான் உலகில் இருக்கிறார்கள்? ஏன் நீயே உன்னையே பாரேன். உன் வீட்டில் தயிர், வெண்ணெய், பால், இல்லாமலா இருக்கிறது. நீயும் அதிக ஆசைப்பட்டதால் தானே வீடு வீடாக புகுந்து பால் தயிர் வெண்ணெய் இவைகளை திருடித் தின்கிறாய்? இந்த கோகுலத்தையே ஓர் கலக்கு கலக்கிக் கொண்டிருக்கும் திருடன் நீ? எனக்கு அதிக ஆசைப்படாதே என புத்தி சொல்கிறாயா? இந்த கோகுலத்தில் உன்னை அடிக்காத பெண்கள் இல்லை. உன் உடம்பிலும் அடிபடாத இடமும் இல்லை.

கண்ணன்:— ஏன் பாட்டி ஊர்கதையெல்லாம் பேசுகிறாய்? உன் கதையை மட்டும் பார். இப்போது உன் நிலைக்கு யாம் இந்த சுமையை தூக்கி வைக்கமாட்டோம்!! அவ்வளவு தான்.

பாட்டி:— ஏ திருட்டுப் பயலே! உனக்கு இத்தனை திமிரா? ஓர் சின்ன வேலை செய்யமாட்டேன் என்கிறாய். இப்படி ஊரார் பால் தயிர் வெண்ணெய் இவைகளை திருடி உண்டு உடலை வளர்த்து என்ன செய்யப் போகிறாய்? இப்படி ஊதாரி பிள்ளையை பெத்துப் போட்ட உன் அம்மா யசோதா என்ன பாடு படுகிறாள் உன்னால்? ஓர் பழமொழி சொல்வார்கள் "அடங்காத பிள்ளை பெற்றால் (தாய்) உறங்காமல் விழித்திருக்க வேண்டும்" அது உன் வகையிலும் உன் அம்மா யசோதா வகையிலும் பொருத்தமாக இருக்கிறது. நாளை என் வீட்டுக்கு வா உன்னை நன்றாக கவனிக்கிறேன். ஊரார் உணவை உண்டு உடலை வளர்க்கிறாய்! ஓர் வேலை சொன்னால் செய்யமாட்டேன் என்கிறாய். இப்படி வளர்த்து விட்ட உங்கப்பன் நந்த கோபனைச் சொல்லணும். அவன் இவ்வூர் நாட்டாமைக்காரன். பின் அவனுக்குப் பிறந்த பிள்ளை எப்படி இருக்கும்? அவன் நாட்டாமை இவன் முரட்டாமை (முரடன்) என திட்டிக் கொண்டு இருந்தாள் நம் கண்ணனும் சிரித்துக் கொண்டே சென்று விட்டான்.



உ



அந்த வயதான பாட்டி விறகுக்கட்டுடன் தூக்கிவிட ஆள் பார்த்துக் கொண்டிருந்தாள். தெய்வாதீனமாக ஓர் மனிதன் யமுனையில் நீராடி விட்டு அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட பாட்டி கெஞ்சும் குரலில் ஐயா! ஐயா! இந்த விறகுச் சுமையை கொஞ்சம் தூக்கி விட்டு போய்யா என்றாள். அவனும் விறகையும் பார்த்தான் அவளையும் பார்த்தான். ஏன் கிழவி! சக்திக்கு தக்கபடி விறகு கட்டக் கூடாதா? என்றான் அந்த பாட்டியும் கண்ணனிடம் மிஞ்சியது போல் மிஞ்சாமல் கெஞ்சிப் பேசினாள் ஆமாம் கண்ணு! இன்று காய்ந்த விறகாயும் நன்கு எரியும் விறகாயும் கொஞ்சம் அதிகமாக கிடைத்தது சேர்த்து ஒரே கட்டாக கட்டி விட்டேன். வயிறு ஒண்ணு இருக்குதே அதற்குத்தான் இந்தபாடு; ஐயா மகராஜா நீ நல்லா இருக்கணும் இதைத் தூக்கி விடு ஐயா என கெஞ்சினாள் அந்த பாட்டி. அந்த இளைஞனும் விறகின் சுமையை பொருட்படுத்தாமலே அந்த விறகுகட்டை அவள் தலையில் தூக்கி வைத்துவிட்டு போய்விட்டான்.

இந்த கிழவிக்கு கழுத்து ஒடியும் நிலை ஆகிவிட்டது. எப்படியோ மூச்சைப் பிடித்துக் கொண்டு முக்கி முனகி அந்த கட்டை தம் வீட்டு வாசல் வரை கொண்டு வந்து விட்டாள்.

எம் தெய்வக் குழந்தைகளே!

அங்கு அந்த விறகுகட்டை தூக்கி விட மறுத்த எம் இறைவன் இக்கிழவியின் வருகைக்காக புல்லாங்குழலை இடுப்பில் செருகிக்கொண்டு அவள் வீட்டு மர நிழலில் இருகரமும் இடுப்பில் வைத்தவனாய் எம் புண்டரீகனுக்காக காத்திருந்த **விட்டலனாய்** காத்திருந்தான். (விட்டல் என்றால் உன் சொந்த பந்த பாச உறவுகளையும் நாமரூப குணதோஷங்களையும் "**விட்டு அகல்**"! அதாவது அவைகளை என்றும் மனதால் விட்டு அகல்கின்றாயோ அந்த க்ஷணமே எம் திருவடியில் சரண் அடைந்துவிட்டாய். யாமும் உன்னை ரட்சித்துக் கொண்டோம் எனவும் பொருள்படும்)

## அருளுரை



உ (100)

குழந்தைகளே!

அந்த ஸ்ரீ நாட்டி வாசலுக்கு வரும் முன்பே ஓடிச் சென்றான். அந்த விறகு கட்டை ஓர் பூப்பந்து போல அலக்காக (அவருக்கு சிரமம் இல்லாமல்) தூக்கி அவர் வீட்டு வாசலின் ஓர்புறமாக வைத்தான். அப்படி வைத்தவன் சொன்ன வாசகமாவது:—

அம்மா! எமக்கு சுமைகளை ஏற்றி வைக்கும் பழக்கமில்லை!
எமக்கு சுமைகளை இறக்கி வைத்துத்தான் பழக்கம்!!

என்றான் கனிமொழியில்.

எம் அன்பின் சொரூபங்களே!

அதனால்தான் யாம் அடிக்கடி சொல்வதுண்டு:— "இறைவன் என்றால் கருணை, கருணை என்றால் இறைவன்" அவன் எந்த ஜீவர்களும் கடமை கடமை என்று கஷ்டப்படவும், வேண்டும் வேண்டும் என்று வேதனைப்படவும், குடும்பம் குடும்பம் என்று துன்பப்படவும் அவசியம் விடமாட்டான்.

நீங்கள்தான் "நான் நான்" என்று மார் தட்டிக் கொள்கிறீர்கள். "என்னால்தான் முடிந்தது, என்னால்தான் முடியும்" என மூத்திரிக்கொட்டை போல் முந்திக் கொள்கிறீர்கள். உன் தாவ இருப்புக்கே உரிமை இல்லாத போது "கண்டதையும் கேட்டதையும்" "என்னுடையது என்னுடையது" "சொந்தம் கொண்டாடி உரிமை" கொண்டாடுகிறீர்கள்! இது எந்த கைமடமை; தயவு செய்து உங்கள் பாதங்களில் மன்றாடி இந்த வைத்தியம் கேட்டுக் கொள்கிறது மேலே கூறிய அந்த மூன்றையும் நிர்மூலமாக விடுங்கள். அணுப்பிரமாணம் அந்த எண்ணம் உங்கள் உள்ள அடியாழத்தில் இருந்தாலும் நீங்கள் ரட்சிக்கப்படவில்லை யென பிரமாணமாகச் சொல்வோம்.

யாம் இதுகாலபரியந்தம் உணர்ந்த வரையில் "மூன்றில் ஒருபாகம்" மட்டுமே முழுமையாக உள்ளீர்கள். "மூன்றில் ஒருபாகம்" "முக்கால் நிலையில் உள்ளீர்கள்". "மூன்றில் ஒருபாகம்" பாதிநிலையில் உள்ளீர்கள். அவசியம் "நம்பிக்கை" உள்ள அனைவரையும் "கரையேற்றாமல்" எம் ஆவம் மறையாது. அன்றுதான் யாம் வந்த காரண காரியம் இரண்டும் பூர்த்தியாகும். இந்த அருளுரையை இத்துடன் முடிக்கிறோம் "அதுவே நீ நீயே அது" இது சத்தியம்; சத்தியம்; சத்தியம்.

பாபா



உ

ஓம்

# முடிவுரை!

எம் அன்புக் குழந்தைகளே!

ஆதி அந்தமற்ற ஒன்றுக்கு அணை கட்ட முடியுமா?
கரையில்லா ஒன்றுக்கு கரை கட்ட முடியுமா?
முடிவற்ற ஒன்றை முடிக்க முடியுமா?

அதுபோல்?

நாம்தாமான ஒன்றுக்கு வேறு விளக்கம் தர முடியுமா?
இரண்டற்ற ஒன்றுக்கு சுட்டிக்காட்ட முடியுமா?
நாம் அது ஆனால் அதுவே நாம் ஆனால் விளக்குபவர் யார்?
அதுவே நாம் ஆனால் நாமே அது ஆனால் எதை விளக்க முடியும்?
இரண்டென்றும், ஒன்றென்றும், இல்லையென்றும் ஆகிவிட்டால்

**"எதுவும் இல்லையென்றே சொல்வோம்"!!**

**ஆனால் ஒன்றுண்டு. ஆனால் இல்லை!!!**

குழந்தைகளே!

எப்படியோ எமதய்யன் திருடன் இருவை யாவும், உங்கள் அனைவரின் ஆசியாலும் "வரி வடிவமான" "**எழுத்தை**" முடித்துக் கொண்டோம். உங்களையும் அது என ஆக்கிக்கொண்டோம். யாமும் உங்கள் "திருவடிக்குள்" மயமாகிக்கொண்டோம்.

யாம் இல்லை, அது உண்டு, நீங்கள் உண்டு, ஆனால் இல்லை!!!

**சம்பூரணம்** அது **பரிபூரணம்!!!**

எல்லாம் நீ! எல்லாம் நீ! எல்லாம் நீயே!

பாபா




Adobe of Love

You are Everything!